www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
மே.25-31,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 206

## சந்திரிக்கா அரசின் சுருக்குக் கயிறு



## வன்னிக் களம் பறிபோகுமா தளம்?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## ரஜினி விடுத்த எச்சரிக்கை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஆழம் பார்க்கிறார்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
தமிழ்க் கட்சிகளின் போக்கு
கவலை தருவதாக உள்ளது!
சபையறிந்து பேசும்
சமயோசிதம் கூட
தமிழ்க் கட்சிகளிடம்
வரட்சியாகிவிட்டதே வருத்தம்!
தம்முடன் பேச்சு நடத்தும்
பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளின்
நாடி பிடித்தறிகிறது எதிர்க்கட்சி.
எத்தகைய தீர்வுக்கு தயார்
என்று எதிர்க்கட்சி சொல்லவில்லை.
எந்தளவு தூரம் தமிழ்க் கட்சிகள்
இறங்கிவரும் என்று
ஆழம் பார்க்கிறது எதிர்க்கட்சி!
தீர்வுக்கு தடையில்லை என்று
இனிப்பாகப் பேசிக்கொண்டே
இன்னும் எத்தனை நாளைக்கு
இழுத்தடிக்கலாம் என்றும்
கணக்குப் பார்க்கிறது!
ஆனால்-தமிழ்க் கட்சிகளோ
தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு
விட்டுக் கொடுப்புக்களில்
முந்தி நிற்கின்றன!
பேச்சுவார்த்தை என்றால்
பரஸ்பர விட்டுக்கொடுப்பு தேவை.
தெளிவு, அறிவு தேவை
என்பதை மறுக்கவில்லை!
ஆனால், நடப்பதோ
[illegible]யான விட்டுக் கொடுப்பு.
மறுதரப்பு மௌனமாக இருந்து
நமட்டுச் சிரிப்புடன் கவனிக்கிறது.
தமிழ்க் கட்சிகள்
விழுந்தடித்து விட்டுக் கொடுக்கின்றன!
இந்த விட்டுக் கொடுப்புக்களால்
என்ன பயன் ஏற்படும்?
எந்தளவுக்கு தமிழ்க் கட்சிகள்
இறங்கிவரத் தயாராக இருந்தன?
என்பதைப் பேரினவாதிகள்
குறித்துவைக்கவே உதவும்!
இப்போதே
தமிழ்க்கட்சிகள் இப்படி
இறங்கிவருமானால்
புலிகளையும் பலவீனப்படுத்தினால்
தமிழ்க் கட்சிகள்
இரந்தும் வரலாம்
என்றே பேரினவாதம் நினைக்கும்!
தமிழ்க் கட்சிகளிடம்
சாணக்கியமும்-ஒற்றுமையும்
இருக்குமானால்-
முதலில் அடிப்படைப் பிரச்சனைகளில்
உங்கள் நிலைப்பாடு என்னவென்று
எதிர்க்கட்சியிடம் கேட்கட்டும்!
'சுவர் இருந்தால்தான்
சித்திரம் வரையலாம்'
சுவர் என்பது
வடக்கு-கிழக்கு இணைந்த
நிர்வாக அலகு!
சித்திரம் என்பது
அந்த அலகுக்குரிய அதிகாரங்கள்!
சுவர் பற்றிப் பின்னர்
ஆறுதலாகப் பேசலாம்!
சித்திரம் பற்றி இப்போது
சுவாரசியமாகப் பேசலாம்
என்பதுதான் பொதுவாக
மறுதரப்பு இராஜதந்திரம்!
பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும்
அதுதான் நடக்கிறது!
எதிர்க்கட்சியுடனான சந்திப்பிலும்
அதுதான் நடக்கிறது!
அந்த இராஜதந்திரத்தை
புரிந்தும் புரியாததுபோல
'ஆமாம்' போட்டுக் கொண்டிருக்கின்றன
தமிழ்க் கட்சிகள்!
[illegible]
[illegible] அரசியல்வாதிகளும்
அதில் அடக்கம்!
இராணுவ அழுத்தம் மூலமாக
புலிகளை பலவீனப்படுத்தினால்
குட்டிக் கவலை-கொடுத்தே
தமிழ்க் கட்சிகளை
திருப்திப்படுத்திவிடலாம் என்பதே அந்த
இராஜதந்திரத்தின் அடிப்படை!
புலிகள் பலவீனப்படுவார்களா
இல்லையா?
என்பதெல்லாம் இருக்கட்டும்!
காலத்தை இழுத்தடிக்க
மறுதரப்புக்கு அவகாசம்
கொடுக்காமல் இருப்பதே விவேகம்!
என்வே-இப்போதே
[illegible] தீர்வுக்கான
[illegible]
[illegible]
[illegible] வெளிக்கொண்ர
[illegible] கட்சிகள் முயலட்டும்!
[illegible]
[illegible] பற்றிய
விவாதங்களில் புலமை காட்டி
அதனைப் பத்திரிகைகளில்
இடம் பெறச் செய்து கொண்டிருந்தால்
நாளை கண்களே களவாடப்படலாம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## சாந்த குணம்

சாந்த குணம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்.
(மத் 5:5)

நமது பழைய வாழ்க்கை அருவருப்பானதாகவும், அவமானம் நிறைந்ததாகவும், பலருக்கு தீமை விளைவிக்கக் கூடியதாகவும், இருந்திருக்கலாம். இவைகளை விட்டு மனந்திரும்பி, ஆண்டவர் இயேசுவுக்குள் புது வாழ்வு வாழ்கின்ற போது, மற்றவர்கள் நம்மை குறித்து: இவரை நமக்கு தெரியாதா? இவன் இன்னான் அல்லவா.... இவன் இப்படிப்பட்டவன் அல்லவா..! என்று பேசலாம். நமக்கு விரோதமாய் சூழ்ச்சி செய்யலாம். அல்லது நமது வாழ்க்கையின் இரகசியங்களை எடுத்துத் தெருத்தெருவாய் மற்றவர்களுக்கு முன்பாக பறைசாற்றி அறிவிக்கலாம்.

ஆனால்: நாம் எல்லாவற்றையும் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து அவர் என்னை அறிவார், என்னுடைய நிலவரத்தை விளங்கப் பண்ணுவார் என்று, கடவுளை முழுவதுமாய் நம்பி அவருக்கு கீழ்படிந்து நடக்கின்றவர்களே சாந்த குணமுள்ளவர்கள்.

இத்தகைய சாந்த குணம் நம்மை இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவான்களாக மாற்றும். நமது அனுதின வாழ்க்கையில் சாந்த குணமுள்ளவர்களாக நாம் வாழ முயற்சிப்போமாக.

சகோ.எஸ்.யேசுநாதன், செங்கலடி.

## ஆன்மீகம்



### அருள் மறை கூறும் பெற்றோர் பெருமை

மனித உறவுகளில் மிக முக்கியமானதும் முதன்மையானதும் தாய் தந்தையரே!

தாய் தன் உதிரத்தை அமுதாக்கி தன் பிள்ளைக்கு ஊட்டி மகிழ்கின்றாள். இதற்காக இவள் எதுவித பிரதியுபகாரமும் இப்பிள்ளையிடம் இருந்து எதிர்பார்ப்பதில்லை.

தந்தையோ 'மழை வெயில் பாராது தான் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை தன் மைந்தனின் நல வாழ்வுக்காக அர்ப்பணிக்கின்றார்.

இத்துணை செம்மல்களை தாம் வயது முதிர்ந்த தாய் தந்தையரென்றோ, வேறு சில பலவீனங்கள் காரணமாகவோ புறக்கணிக்கக் கூடாது.

அல்லாஹ்வின் அருள் மறையும் அழுத்தமாக இதுபற்றி எடுத்துரைக்கிறது. உங்கள் பெற்றோரில் ஒருவரோ, இருவரோ முதிய வயதடைந்து உங்களை அண்டி வாழ்ந்தால் அவர்களை வெறுப்பூட்டும்படி "ச்" எனச் சொல்லாதீர்கள் என்று.

அல்குர் ஆன் (17:23)

எனவே நாம் ஒவ்வொருவரும் பெற்றோரை பேணி நடப்பது கடமையாகும்.

எம்.சி.கலீல்,கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.203



### பரிசுக்குரிய கவிதை

#### பசிதீர்க்கும் பாலகன்

பாலூட்டும் தாய்க்குப்
பசிதீர்க்கும் பாலகனே!
நூலறிந்த மானிடர்க்கும்- இந்
நுண்ணறிவேன் கிட்டவில்லை...?

ரி. சங்கீதா-இறம்பைக்குளம், வவுனியா.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**பொழுது போக்கு**

நான் பாலூட்ட
நீ பழமூட்டு.
விளையாட்டாய்ப்
பொழுது போகும்.
நம்மோடு-
குண்டுகளை வீசி
மரணமும் விளையாடும்.
போருக்கும் பொழுது போகும்!

கே.எல்.எம்.றசீன்- பீ.பீ.றோட், கல்முனை.

**நீயும்**

செத்து விழுகுது
மனித இனம்,
மனம் முழுக்க
போர் பயம்,
இந்த குளிர்மை
இதம் தருமா...?

சுபா வரன்- கண்டி.

**அன்பின் ஆழம்**

உலவும் போரினால்
உறவினை இழந்தவள்!
மழலையின் வரவினால்
உறவினை சுமந்தவள்!
ஊனினை ஊட்டியே
உவகைகள் கொண்டவள்!
கையினை கடித்திடும்
காலங்கள் வந்ததால்...
தாயினை சேயிங்கு
தேற்றிடும் நிலையானாள்!

தெ.றஞ்ஜனா- இறம்பைக்குளம், வவுனியா.

**ஐஸ்**

எல்லோரும் பெற்றப் பிள்ளை
பாலுக்கு அழுகுது!
மாரியம்மன் பெற்றப் பிள்ளை
பூவுக்கு அழுகுது!
நான் பெற்றப் பிள்ளை
எனக்கே ஐஸ் வைக்குது!

எம்.எஸ்.மணியம்-மத்துகம.

**பாவம்!**

இந்த
பிஞ்சு அறியுமா-தன்
தாயின்
நெஞ்சிலெரியும்
நெருப்பினை- இந்த
"ஐஸ்பழம்"
அணைக்காதென்று-!

அனூஷன்- ஹட்டன்.

**பால் தாரும்**

போருந்திராது
போசாக்கும் யார் தருவார்
பால் தாரும் அம்மா
ஐஸ்க்கிறீம் வேண்டாம்!

செ.சோமசுந்தரம்- வவுனியா

**சதி**

பாலருந்திய-எனக்கினி
பசிக்காது;
நீ புசி.
சத்துணவு- இங்கே
சாத்தியமில்லை!!

எஸ்.பிரபா- பதுளை.

**பிச்சை**

பிச்சைக்குப் பிச்சை- அப் பிச்சை
பிச்சைக்கும் பிச்சையாமோ?

ச.மகாலிங்கம்- வெலிமடை குருப், வெலிமடை.

**பார்வைகள்**

மற்றவரின் கண்களுக்கு
எச்சிற் பண்டம் தான்:
பெற்றவளின் பார்வையிலோ
பெருவிருந்து வேறுண்டோ!

சி.மு.சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.206



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 31.05.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.206
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை

அன்பின் முரசே!

வாரம் தவறினாலும் உன்னை வாங்கி வாசிக்கத் தவறாத பலகோடி வாசகர்களில் நானும் ஒருவன். கற்கண்டாய் சொற்கொண்டு பொற்செண்டாய் நீ தரும் அத்தனை அம்சங்களும் வாசகர் உதடுகளில் உச்சரிக்கும்போதுதான் தெரிகின்றது மகிமை.

குறிப்பிட்ட சில விடயங்களை மட்டும் கொள்ளாமல் எல்லா பொது விடயங்களும் உன்னோடு அடக்கி, நீ செய்யும் ஆல் ரவுண்ட்சேவைக்கு என் உளமார்ந்த வாழ்த்துக்கள் தினம் முரசுக்கே அது தினமுரசுக்கே!

மொஹமட் ரபீக், கொள்ளுப்பிட்டி.

### அதிர்ச்சி

முரசில் காஞ்சனாவின் [illegible] கண்ணுற்றேன். ஒரு காலத்தில் [illegible] காஞ்சனா! ஆரம்ப [illegible] நடித்து எம்மை அசத்தியவர். [illegible] பாமா விஜயம், வீர அபிமன்யு போன்ற படங்கள் முத்திரையானது. தற்போதும் பாமா விஜய பட்பாடலில் 'ஆணி முத்து வாங்கி வந்தேன்' காஞ்சனாவைக் [illegible]. ஆனால் இப்போதைய நிலையை முரசு [illegible] அதிர்ந்து விட்டேன்!

கனகசபை தேவகடாட்சம், மல்லிகைத்தீவு.

இனிய முரசுக்கு!

நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் தித்திக்கும் சுவை மிக்கது. அதிலும் என்னை மிகவும் கவர்ந்தது பூலானின் தொடர்கதை. மற்றும் பல சுவைமிக்க அம்சங்களும் என்னைக் கொள்ளை கொண்டவை. என் முரசுக்கு நன்றிகள்.

வே. நிர்மலா, குவைட்.

அன்பு முரசே!

திக்கெட்டும் உன் பல்சுவை ரசனையை இரசித்து அக மகிழ்கின்றேன். பலாச் சுவையை இரசித்து உண்பது போல், உன் ஒவ்வொரு சுவையின் பக்கங்களையும் புரட்டி இரசித்து பார்க்கிறேன். அரசியல் சுவையோ சுடச்சுட, ரசிகனின் இலக்கிய நயமோ உழுந்து வடை. சுஜாதாவின் தொடர், மசாலா தோசையைப் போல் இரசித்து ருசித்து பார்க்கக் கூடியவை. 'ஸ்போர்ட்ஸ்' செய்திக்கு முக்கியத்துவம் இல்லாமல் சிறு பக்கத்தில் போடுவது மனசை அரிக்கின்றது. மொத்தத்தில் உலகில் பரந்திருக்கும் எம்மைப் போன்ற உள்ளங்களுக்கு மனம் நிறைந்த திகட்டாத முரசு.

எஸ்.எச்.எம். ஹஸன் அலி, தென் கொரியா.

அன்பு முரசே! நாரதருக்கு பாராட்டுக்கள். நெத்தியடி போல அரசியல்- இராணுவ கணிப்புக்கள் முரசுக்கு மெருகூட்டுகின்றன. குஜ்ராலிடம் எதிர்பார்க்க எதுவுமில்லை என்பதை இராஜதந்திரியார் திட்டவட்டமாக சொல்லிவிட்டார். அது மெய்தான்!

கா. சுந்தரலிங்கம், கொழும்பு-06.

### எம் கண்களும் கசிந்தன!

'எம்.ஜி.ஆரின் கண்கள் பனித்தன' என்ற தலைப்போடு அற்புதன் நினைவூட்டிய நிகழ்ச்சி உண்மையாகவே நெஞ்சை பிசைந்தது. இன்று எமக்காக கண்ணீர்விட யாருமில்லையே! எம்.ஜி.ஆர் பற்றிய மதிப்பீட்டை பலமடங்கு உயர்த்திய நிகழ்ச்சிதான் அது.

சி. சாரங்கன், மட்டக்களப்பு.

[illegible] எம்.ஜி.ஆரை நினைத்து எம் கண்களும் அப்லவா கசிந்துவிட்டன. அண்ணாவின் இறுக்கங்களை: நம் [illegible] கொண்டோம்.

செல்வி சி. சுமதி, இரத்தினபுரி.

### சபாஷ்! சரியான தண்டனை!

பூலான் தேவியை குறிவைத்து மணம்புரிந்த கொடியவன் புத்திலாலுக்கு சபாஷ் சரியான தண்டனை. பூலான் தொடர் இப்போதுதான் வெளுத்துக்கட்டுகிறது. ஸ்ரீராமினால் பூலானுக்கு ஏதாவது நடந்தால் ரசிகனே ஜாக்கிரதை.

செ. வானதி, கம்பளை.

மூப்பனாருக்கு கருணாநிதி போட்ட கால்கட்டத்தை புட்டுவைத்தார் கந்தசாமியார். இலங்கையில் மட்டுமல்ல, இந்திய அரசியல் தலைவர்களின் புல்டிகளையும் நகைச்சுவையாக விளக்கிவிடுகிறார் கந்தசாமியார்.

ஜெ.சிம்ரான், கந்தளாய்.

அக்காவிடமும் சரி, தங்கையிடமும் சரி குட்டிப் பாப்பாக்களாக இருந்த குறு குறுப்பும் தேஜஸும் குமரிகளாகிவிட்ட பின்னர் இல்லைத்தான். பேபிகள் ஷாமிலியையும், ஷாமினியையும் சொல்கிறேன். அந்த முகங்களை காட்டியதற்கு நன்றி. எங்கிருந்து உருவினீர்?

பாத்திமா மின்ஹா, புத்தளம்

### உச்சி குளிர்கிறது முரசே!

என் பிரிய முரசே!

சுஜாதாவின் 'காயத்ரி' நல்ல விறுவிறுப்பு. சிந்தியா குட்டிக்கதைகள் போட்டு, பதில் கொடுத்து எம்மை உச்சி குளிர வைக்கிறார். காதில பூ கந்தசாமியார் நன்றாகவே கலக்குகிறார். அசலும் நகலும் ஆ.. என்ன அசத்தல்?! தேன் கிண்ணம், இலக்கிய நயம் தேன் சுவையோ சுவை. தகவல்பெட்டி தரும் அற்புதப் படங்கள் புருவத்தை உயர்த்த வைக்கிறது. எங்கே முரசே காட்டு முதுகை எனது பாராட்டான தட்டல்கள்!

செல்வன் சி.ஸ்ரீரவி, இரத்தினபுரி.



### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:

* பஸ்மியா இஸ்மாயில், தெல்தொட்ட.
* த.யோகலெட்சுமி, நாவலப்பிட்டி.
* இரா.வினோத்குமார், ஹட்டன்
* சித்ரா முருகையா, அவிசாவளை.
* பி.தேவி, சின்ன செல்வகந்த
* ந.சிவாஜினி, மண்டூர்.
* பெரியநாயகம் றொசானா, அக்கரப்பத்தனை.
* சி.வேதநாயகம், மட்டக்களப்பு.
* ஏ.முபாரக் அலி, கிண்ணியா-06.
* சுகந்தினி- வேத்தினி, வவுனியா.
* ச.நவேந்திரன், வெல்லாவெளி.
* க.ஜெயம், ஃபிரான்ஸ்.
* எஸ். றீனோ, சென்றல் பிளேஸ்,திஹாரிய.
* இ.முஹமட், சவுதி அரேபியா.
* ஏ.செபஸ்தியன், உக்குவளை.
* எம்.ஏ.றகுமான், காத்தான்குடி.
* எஸ்.ராஜ் கனகேஸ்வரி, பூனாகலை.
* ருஸ்மினா ராவிக், நாங்கள்ளை.
* க.ஜெ.கரன், கொட்டகலை.
* வி. சேகர், கண்டி.
* சி.மனோரஞ்சன், அவுஸ்திரேலியா.
* எம்.செல்வராசா, கனடா.



படிப்பகம்

www.padippakam.com

# முல்லைத்தீவில் மூவாயிரம் சவப்பெட்டிகள்!

# பிரபா முன்னிலையில் உறுதிமொழி!

## பதிலடியை எதிர்த்து படைகளும் உஷார்!

(நமது நிருபர்)

படையினரின் 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கை முல்லைத்தீவை முற்றுகையிட்டு உள்ளே பிரவேசிக்கும் அளவுக்குச் செல்லுமானால் கடும் சமர் நடத்த புலிகளின் அணிகள் தயாராகியுள்ளன. முல்லைத்தீவில் இருந்து இலண்டனுக்கு அனுப்பியுள்ள செய்தி ஒன்றில், புலிகளின் தலைமைப்பீடம் அதனைத் தெரிவித்துள்ளது. புலிகளின் இலண்டன் வட்டாரங்கள் மூலம் அத் தகவல் தெரியவந்துள்ளது.

பாரிய தாக்குதல்களுக்குத் தயாராகும் போது சவப்பெட்டிகளையும் தயார் செய்து கொண்டு செல்வது புலிகள் இயக்கத்தினரின் வழக்கமாகும். ஆனையிறவு முகாம் தாக்குதலின் போது ஆயிரம் சவப்பெட்டிகள் சகிதமே புலிகள் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது முல்லைத்தீவில் மூவாயிரம் சவப்பெட்டிகள்வரை தயார் செய்யப் பட்டுள்ளனவாம்.

தமது தளத்தைப் பாதுகாத்தே தீருவது என்று முல்லைத்தீவில் பிரபாகரனின் முன்னிலையில் நூற்றுக்கு மேற்பட்ட கரும்புலிகள் உறுதிமொழி ஏற்றுள்ளனர் என்றும் இலண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### படையினர் உஷார்

புலிகளின் வன்னித் தளத்தில் படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால் கொழும்பு மற்றும் முக்கிய நகர்களில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று படையினர் கடந்த வாரம் முழுவதும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் பொதுமக்களை இலக்காகக் கொண்ட குண்டுவெடிப்புக்களை புலிகள் நடத்துவது சர்வதேச ரீதியில் அவர்களுக்கே கெட்ட பெயர் ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகிறது என்னும் கருத்து நிலவுகிறது.

### பாதிப்பு இருக்காது

புலிகளின்- அரசியல் தலைவர்கள் மீதான தாக்குதல்கள், மற்றும் பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கைகள் மூலமே சர்வதேச ரீதியான அனுதாப அலை புலிகளுக்கு சாதகம் இல்லாமல் வீசியது என்றும் அரசியல் அவதானிகள் சிலர் தெரிவிக்கின்றனர்.

"கொழும்பிலோ அல்லது முக்கிய நகர்களிலோ குண்டுவெடிப்பு போன்ற தாக்குதல்களில் புலிகள் ஈடுபடுவது படையினரின் வன்னி நடவடிக்கையைப் பாதிக்காது. வன்னி மோதலில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள்தான் வன்னி கள நிலவரத்தில் தாக்கம் ஏற்படுத்தும். கொழும்பு போன்ற இடங்களில் புலிகள் தாக்குதலில் ஈடுபடுவது அரசாங்கத்துக்குத்தான் சாதகமாக அமையும்," என்று அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

படையினர் தலைநகரிலும் முக்கிய நகர்களிலும் தீவிர ரோந்துகள் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். உளவுப் பிரிவினரும் தீவிர கண்காணிப்புக்களில் இறங்கியுள்ளனர்.

### மேலும் படைகள்

வன்னி நடவடிக்கைக்காக மேலும் ஐயாயிரம் படையினர் வவுனியா ஊடாக சண்டைக் களம் நோக்கி அனுப்பப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

வன்னிக் களத்தில் 18.05.97 அன்று நடைபெற்றதுதான் பாரிய சண்டை என்று புலிகள் சொல்லுகின்றனர். அதுவரை தமது தரப்பில் 37 பேர்தான் பலியாகி இருந்ததாகவும், அன்றைய சண்டையில் மட்டும் மேலும் 20 பேர்வரை பலியானதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

படையினர் எதிர்பாராத திசைகளில் இருந்து தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதாம். படையினர் முன்னேறிய பகுதிகளுக்குள் தரையோடு தரையாக அமைக்கப்பட்டு உருமறைப்பு செய்யப்பட்ட பங்கர்களுக்குள் இருந்து வெளிப்பட்டும் புலிகள் அதிர்ச்சித் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

### காடுகள் பாதிப்பு

புலிகளின் வியூகத்திற்குள் படையினர் சிக்கமுடியாத வகையில் விமானப்படையிரின் தாக்குதல்கள் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன.

தற்போது நடைபெறுவது காட்டுக்குள் நடக்கும் யுத்தம் அல்ல. காடு சார்ந்த சாலைகள் ஊடாகவே படைகள் முன்னேறுகின்றன. காடுகளுக்குள் இதுவரை படையினர் ஊடுருவவில்லை. ஆனால் சாலையை ஒட்டியுள்ள காடுகள் படையினரின் பாதுகாப்புக் கருதி அழிக்கப்படக்கூடும். புலிகள் காடுகளுக்குள் இருந்து தாக்காமல் இருக்க நெடுஞ்சாலையை ஒட்டிய இரு புறக் காட்டுப் பகுதிகளை படையினர் துப்புரவு செய்ய முனைவர். அந்தக் கட்டம் இனிமேல்தான் ஆரம்பிக்கும். இதனால் வன்னியின் வளம் பெரிதும் பாதிக்கப்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

ஏற்கனவே விளாத்திக்குளம் காடும், கனகராயன் குளம் காடும் குண்டுத்தாக்குதல் மூலம் எரிந்துள்ளன.

வவுனியா-கிளிநொச்சி சாலை வழியாக முன்னேறும் படையினரின் மீது புலிகள் தாக்காதிருக்க, விளாத்திக்குளம் காட்டுப்பகுதியிலும், நெடுங்கேணி சாலையை கைப்பற்றும் படைகளை புலிகள் தாக்காதிருக்க, கனகராயன்குளப் பகுதிக் காட்டிலும் விமானக் குண்டுத்தாக்குதல் நடைபெற்றது.

பற்றி எரியக்கூடிய குண்டுகள் போடப் பட்டதா? என்று உறுதி செய்ய இயலவில்லை. ஆனால் அவ்வாறான குண்டுகளும் இருக்கின்றன.

# தரைப்பாதை திறப்பு! கூட்டணி வரவேற்பு!

வவுனியா-கிளிநொச்சி தரைப்பாதை திறப்பு மூலம் மக்களுக்கு விமோசனம் அளிப்பது என்று கூறியே படையினரின் வன்னி நடவடிக்கை தொடங்கப்பட்டது.

இதேவேளை, தமிழ்க் கட்சிகள், இந்த இராணுவ நடவடிக்கை, அரசின் நோக்கங்களை சந்தேகிக்க வைப்பதாக தெரிவித்துள்ளன. இராணுவ அழுத்தத்தை முதன்மைப்படுத்தி அரசியல் தீர்வை பின்னடிப்பதாக குற்றம் சாட்டியுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரமும் யுத்தத்தைக் கண்டித்து பெரிய அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.ஆனால் 20.5.97 அன்று இலங்கை வானொலி மும்மொழிகளிலும் வெளியிட்ட செய்தி, தற்போதைய யுத்த நோக்கம் தொடர்பாக அரசாங்கம் கூறுவதை கூட்டணியினர் ஆதரிப்பதாக அமைந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் கிளிநொச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியொன்றில் தரைப்பாதை திறப்பை வரவேற்றுள்ளார். "தரைப்பாதை திறக்கப்படுவது மக்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதம்" என்று அவர் தெரிவித்தார். அவரது கருத்தை தலைப்புச் செய்தியாக வெளியிட்டது இலங்கை அரச வானொலி.

# நெடுங்கேணியில் பலத்த மோதல்!

## 64பேர் பலியென புலிகள் தெரிவிப்பு!

வெலி ஓயாவில் இருந்து முன்னேறிய படையினரும், புலிகளும் நெடுங்கேணியில் பலத்த சண்டையில் ஈடுபட்டனர்.

16.05.97 அன்று நெடுங்கேணியில் படையினர்மீது தம்மால் நடத்தப்பட்ட தாக்குதலில் படைவீரர் ஒருவரின் உடலையும், ரி.56 ரகத் துப்பாக்கி ஒன்று உட்பட பெருந்தொகையான ரவைகள், மோட்டார் ஷெல்கள் என்பவற்றையும் கைப்பறியதாக புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதல் மத்தியில் படையினர் நெடுங்கேணியைக் கைப்பற்றி நிலைகொண்டனர். வெலி ஓயாவில் இருந்து புறப்பட்ட 53வது படையணிக்கு பிரிகேடியர் வசந்த பெரேரா தலைமை தாங்கிச் சென்றதாகத் தெரிகிறது.

உதவிப்பிரிகேடியராக நந்த மல்லவாராச்சி சென்றுள்ளார். வன்னி நடவடிக்கை முழுவதற்கும் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா பொறுப்பாக உள்ளார்.

தமது தரப்பில் 108 பேர் பலியானதாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புலிகள் தரப்பில் வன்னி மோதல்களில் 190 பேர்வரை கொல்லப்பட்டதாகவும் படையினர் கூறியுள்ளனர். புலிகளின் குரல் வானொலி 21.05.97 அன்று வெளியிட்ட செய்தியில் இதுவரை 64 பேர் தமது தரப்பில் பலியானதாகத் தெரிவித்துள்ளனர். லெப்டினன்ட் தரத்தில் உள்ளவர்களும் பலியானவர்களில் அடங்குகின்றனர்.

# யாழில் காவலரண்கள் மீது தாக்குதல்!

திருமலை பன்குளத்தில் (மொரவெவ) 11.05.97 அன்று பொலிஸ்- இராணுவ கூட்டு முகாம்மீது தம்மால் நடத்தப்பட்ட தாக்குதலில் தமது தரப்பில் எட்டுப் பேர் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

ரி.56 பட்மொடல் துப்பாக்கிகள்-03, ஏ.கே. எல்.எம்.ஜி. துப்பாக்கிகள்-04, பிஸ்ரல்-01, 3.8 ரிவோல்வர்-03, உப இயந்திரத் துப்பாக்கி-01, றிப்பீட்டர்-03, மற்றும் ரவைகள் 1880 ஆகியன கைப்பற்றப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

16.05.97 அன்று அதிகாலை 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் தென்மராட்சி மிருசுவிலில் இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள் ஆறு தாக்கியழிக்கப்பட்டன. படையினரின் இரு உடல்கள் கைப்பற்றப்பட்டன. ஆயுதங்களும் கொண்டு செல்லப்பட்டன என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

14.05.97 அன்று யாழ்ப்பாணம் தீவகத்தில் உள்ள அல்லைப்பிட்டியில் உள்ள இராணுவக் காவலரண்கள்மீது கடற்புலிகள் தாக்குதல் நடத்தினர். கடல்வழியாக வந்து தரையிறங்கிய கடற்புலிகள் நடத்திய அத் தாக்குதலில் ஐந்து படையினர் பலியாகினர். தமது தரப்பில் எவ்வித இழப்புமில்லை என்று புலிகளின் செய்தி தெரிவிக்கிறது. 50 கலிபர் துப்பாக்கி-01, ரி.56 ரக துப்பாக்கிகள்-02 உட்பட ரவைகளும் தம்மால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவித்துள்ளனர்.

படையினரை திசைதிருப்பவே மொரவெவவிலும், யாழ் தீவகத்திலும் புலிகள் தாக்குதல் நடத்தியதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# போதைப்பொருள் பாவிப்பு அதிகரிப்பு!

## மாணவர்கள் மத்தியிலும் தீவிரப் பரவல்!

போதை வஸ்துப் பாவிப்போரின் தொகை மிக வேகமாக அதிகரித்து வருவதாக, பயங்கரமான பொருட்களைப் பாவிப்பதைக் கட்டுப்படுத்தும் தேசிய அமைப்பின் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

போதைப் பொருள் பாவித்து கடந்த வருடம் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றோர் தொகை 1850 பேர் என்றும் இவர்களில் 95 வீதமானோர் ஆண்கள் என்றும் தெரியவருகிறது. போதைப்பொருள் பாவிப்போரில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கண்டி, காலி, கம்பகா மாவட்டங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இன விகிதாசார முறையைப் பொறுத்தவரை சிங்களவர்கள் 86%. அடுத்து முஸ்லிம்கள் 6.3%, தமிழர்கள் 3.4%, மலாயர்கள் 1.1%, பறங்கியர் 1.0%ம் போதைக்கு அடிமையாகி சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

மாணவர்களில் 10ம் ஆண்டு மாணவர்கள் 29.9% போதைப் பொருள் பாவிக்கின்றனர். க.பொ.த.(சா/த) சித்தியடைந்தவர்கள் 32% என்றும் 5ம் ஆண்டு தொடக்கம் 8ம் ஆண்டு வரையிலுள்ள மாணவர்கள் 23% போதை வஸ்துக்களைப் பயன்படுத்துகின்றனராம்.

# ஷெல் மழையால் அதிரும் வன்னி!

## இரு தரப்பும் ஷெல் பிரயோகம்!

வன்னி யுத்தத்தில் இரு தரப்பினரும் ஏவிய ஷெல்களால் வன்னிப் பகுதியே அதிர்ந்தது. சண்டையைவிட சண்டை நடைபெறும் சத்தம்தான் வவுனியாவில் உள்ள மக்களையும் கிலிகொள்ளச் செய்கிறது. காதுகள் அடைக்கின்றன. நிலம் அதிர்கிறது. குழந்தைகள் பயத்தில் வீரிட்டு அலறத் தொடங்கினர்.

விடுதலைப் புலிகள் ஆட்டிலெறித் தாக்குதல் நடத்துவதாகக் கூறப்பட்டபோதும், மோட்டார் ஷெல்களையே புலிகள் ஏவுகின்றனர். நீண்டதூர மற்றும் கனரக மோட்டார்கள் புலிகளிடம் இருக்கின்றன. அந்த மோட்டார் குண்டுகளையே ஆட்டிலெறிக் குண்டுகள் என்று தவறாகக் கூறப்படுகிறது.

ஆட்டிலெறிக் குண்டுகளை விரயமாக்காமல் தமது சொந்த உற்பத்தியான மோட்டார் ஷெல்களையே புலிகள் மழையாகப் பொழிந்தனர்.

ஆட்டிலெறிகளைத் தேடி விமானங்கள் குண்டுகளை வீசுகின்றன. ஆட்டிலெறிகளை விரைவாக இடத்துக்கு இடம்மாற்றி இழுத்துச் செல்வது கடினமாகும். எனவே படையினர் நிலைகொண்ட பகுதிகளை நோக்கியோ, அல்லது பிரதான தளப்பகுதியை படைகள் நெருங்கும் நெருக்கடி ஏற்படும்போதோ ஆட்டிலெறி தாக்குதல்களை புலிகள் நடத்தக் கூடும் என்று கருதப்படுகிறது. எனினும் தாமும் ஆட்டிலெறித் தாக்குதல்களை நடத்துவதால் புலிகளும் ஆட்டிலெறிகளை பாவிப்பதாகப் படை வட்டாரங்கள் கூறுவதாகத் தெரிகிறது.

'பசிலான் 2000' போன்ற பாரிய மோட்டார்கள் புலிகளிடம் இருக்கின்றன. அவற்றையே ஓமந்தை, நெடுங்கேணி பகுதிகளில் முன்னேறிய படையினர்மீது புலிகள் பயன்படுத்தி உள்ளனர்.

# தமிழ்க் குடும்பங்கள் வெளியேற உத்தரவு!

## குடியேற்ற முயற்சியும் தொடர்கிறது!

(திருமலை நிருபர்)

லிங்கநகரில் உள்ள தமிழ்க் குடும்பங்களை உடனடியாக வெளியேற்றிக் காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு திருக்கோணமலை இராணுவத் தலைமையகம், பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளரைக் கடிதமூலம் கேட்டுள்ளது. நிரந்தரக் கட்டடங்கள் ஏதும் இருப்பின் மதிப்பீடு செய்து தந்தால் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சுமார் இருநூற்றைம்பது குடும்பங்கள் வசிக்கும் இந் நிலப்பரப்பு இராணுவச் சுடுவீச்சு எல்லைக்கு உட்பட்டது என்று இராணுவம் கூறிவருகிறது. முன்னாள் ஆளுநர்களான நளின் செனவிரட்ண, லயனல் பெர்ணாண்டோ ஆகியோர் எழுத்து மூலம் இதை மறுத்துள்ளனர் என்று அரசியற் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

எவ்வாறெனினும் தாம் குடியெழுப்பப் பட்டால் வீடின்றி அலைய வேண்டிவரும் என்ற அச்சம் மக்களிடையே எழுந்துள்ளது. வன்செயல்களில் பாதிப்படைந்த இம் மக்களின் பெரும்பாலானோர் அன்றாட சீவியத்துக்கே வழியற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, மட்டிக்களிக் காணிச் சுவீகரிப்புக்கான பணிகள் துரிதமாகத் தொடர்வதாக நம்பிக்கையான தகவல்கள் கூறுகின்றன.

இக்காணி சுவீகரிப்பை நிறுத்த, மீன்பிடி அமைச்சர் உத்தரவிட்டதாக செய்திகள் வெளியானது தெரிந்ததே.

"பத்திரிகை அறிக்கைகளை வைத்துக் கொண்டு நாங்கள் எதுவும் செய்யமுடியாது. அவை பொதுமக்களைத் திருப்திப்படுத்தலாம். ஆனால் முறையான எழுத்துமூல உத்தரவு கிடைக்காத வரை சுவீகரிப்புக்கான ஏற்பாடுகளை நிறுத்தமுடியாது. ஏறத்தாழச் சுவீகரிப்புப் பணிகள் இறுதிக் கட்டத்துக்கே வந்து கொண்டிருக்கின்றன. தடுத்து நிறுத்த வேண்டியது காணி உடைமையாளர்களதும் தமிழ் அரசியல் வாதிகளினதும் பணி," என்று பிரதேசச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# போக்குவரத்துக் கட்டுப்பாடு தளர்வு!

## புதிய விதிகள் நடைமுறை!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து வவுனியா, கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்வோர்மீது இதுகால வரை மேற்கொள்ளப்பட்டு வந்த பயண நடைமுறைகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி மன்னாரிலிருந்து வவுனியாவுக்குச் செல்வோர் தமது விசேட அடையாள அட்டையைக் காண்பித்து உடன் பயணம் செய்ய முடியும்.

கொழும்பு போன்ற பிற இடங்களுக்குச் செல்வோர் மூன்று படிவங்களை நிரப்பி, கிராம அதிகாரி, உதவி அரசாங்க அதிபர் ஆகியோரிடம் சிபாரிசு பெற்று பயண அலுவலகத்தில் ஒப்படைத்து ஒரு சில நாட்களில் பயணம் செய்ய முடியும்.

அவசர நோயாளிகள் வைத்தியர்களின் சிபாரிசுகளுடனும் அரச ஊழியர்கள் அவ்வப் பகுதித் திணைக்களத் தலைவர்களின் அல்லது அரச அதிபரின் சிபாரிசு பெற்று உடன்பயணம் செய்யலாம். வெளி மாவட்டங்களிலிருந்து இங்கு வருவோர் தாம் வைத்திருக்கும் அனுமதிப் பத்திரத்தைக் காட்டி மறு நாள் பயணம் மேற்கொள்ளமுடியும்.

இப்பயண நடைமுறை, கடந்த 15.05.97 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதற்கு முன்னோடியாக, மன்னார் கச்சேரிப்பகுதியில் இயங்கி வந்த போக்கு வரத்துக்கிளை, பாலத்திற்கருகிலுள்ள கூட்டுறவுச் செயலகக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

# 'பிரிட்டன் புதிய வெளிநாட்டமைச்சர் உதவுவாரா?'

## பதவிக்கு வரமுன்னர் சுயாட்சியை வலியுறுத்தியவர்!

இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான இணக்கத்தை ஏற்படுத்தியவர்- முன்னாள் பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை இணை அமைச்சரும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அலுவலக அதிகாரியுமான கலாநிதி லியாம் பொக்ஸ். அவர் சார்ந்த கொன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வியடைந்து, இப்பொழுது தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டது.

கலாநிதி பொக்சின் இடத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்- டெரெக் ஃபாச்செட் என்பவராகும். இவர் கலாநிதி பொக்சை விட இலங்கை இனப்பிரச்சினையில் மிகுந்த அக்கறை கொண்டவர்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் லண்டனில் 'சுயநிர்ணய உரிமைக்கான தமிழர்களின் போராட்டம்' என்ற தலைப்பில் ஒரு மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில்- அப்போது எதிர்க்கட்சி எம்.பியாக இருந்த திரு. ஃபாச்செட் பிரதம விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக தொழிற்கட்சி எத்தகைய கருத்தைக் கொண்டுள்ளது என்பதை அவருடைய பேச்சு துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

"ஒன்றுக்கொன்று முரண்பட்டு மோதிக் கொண்டிருக்கும் கட்சிகளே தாங்களாகவே பேசி ஒரு தீர்வினைக் காண வேண்டியவர்கள். தமிழ் மக்களுடைய சட்டபூர்வமான உரிமைகளை மதித்து அவர்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்படவேண்டும். முரண்பாடுடையவர்கள் தங்களுக்குள் பேசித்தீர்த்து முடிவெடுக்க முடியாவிட்டால் எத்தகைய முன்னேற்றமும் காணமுடியாது.

முதலாவதாக நியாயமான, கௌரவமான அரசியல் தீர்வுகாணப்படவேண்டும். மாறுபட்ட அரசியல் கலாசாரங்களைக் கொண்டவர்களின் சட்டபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு உரிய மதிப்பு வழங்கப்படவேண்டும்.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக கிளின்டன் நிர்வாகம் அக்கறை செலுத்த வேண்டும். உலகத்தின் கவனமும் திருப்பப்படவேண்டும். குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். எமது கட்சி இத்துறையில் கூடுதலான கவனம் செலுத்தும் என்பதை உறுதியுடன் கூறுகிறேன்."

இதுபோன்று திரு. ஃபாச்செட் பல கருத்துக்களைக் கூறியதுடன், மாநாட்டில் எடுக்கப்பட்ட சகல தீர்மானங்களையும் ஆமோதிப்பதாகவும் தெரிவித்தார்.

தொழிற்கட்சி வெற்றியீட்டியவுடன் விடுதலைப் புலிகள் வாழ்த்துச் செய்தி அனுப்பி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

எனினும் ஆட்சிக்கு வரமுன்னர் கூறிய கருத்துக்களை தற்போது பகிரங்கமாகக் கூறமுடியாத இராஜதந்திர காரணங்கள் தொழிற் கட்சிக்கும், ஃபாச்செட்டுக்கும் இருக்கவே செய்யும்.

# பண்டிகைக்கான அன்பளிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் மற்றும் கூட்டுறவுச் சங்க வாகனக்காரர்களிடம், ஆங்காங்கே நிலைகொண்டுள்ள படையினரும், பொலிஸாரும் வெசாக் பண்டிகை வார நிகழ்ச்சிகளுக்காக பெறுமதியான அன்பளிப்புப் பொருட்களை வாங்கித் தருமாறு கட்டாயப் படுத்திக் கேட்டனராம். இதனால் வாகனக் காரர்கள் சலிப்படைந்துள்ளனராயினும் நாளாந்தம் தாம் சோதனைச் சாவடிகளைக் கடந்து பயணம் செய்ய வேண்டியுள்ளதால் இத்தகைய வற்புறுத்தலான அன்பளிப்புக்களை வாங்கிக் கொடுத்தனராம்.

# பிளயருக்கு கோரிக்கை!

ஜேர்மனியில் உள்ள தமிழ் மாணவர் அமைப்பினர் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தச் செய்து மக்களைப் பாதுகாக்க முன்வருமாறு கோரியுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுகோளும் மீறப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் பாதிப்படைகின்றனர் என்று அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

# இரத்தம் கோரல்!

படையினருக்கு இரத்ததானம் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. போர்முனையில் இருந்து காயப்பட்டுவரும் படையினருக்கு மக்கள் முன்வந்து இரத்ததானம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வன்னியில் புலிகள் இயக்கத்தினரும் இரத்ததானம் செய்யுமாறு கோரியுள்ளனர். பாடசாலை மாணவ மாணவிகளும் இரத்ததானம் செய்ததாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஷெல் தாக்குதல்கள், குண்டு வீச்சுக்கள் காரணமாக இடம்பெயரும் மக்கள் சாரை சாரையாக புதுக்குடியிருப்பை நோக்கிச் செல்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சுட்டுவிட்டு கட்டி இழுத்தனர்!

மட்டக்களப்பு-ஏறாவூர்த் தளவாயில் கடந்த 18.05.97 அன்றிரவு ஒரு இயக்கத்தினர் மறைந்திருந்து சுட்டதில் ஏறாவூர் 5ஆம் குறிச்சியைச் சேர்ந்த சந்திரன் என அடையாளம் காணப்பட்ட ஒருவர் கொல்லப் பட்டார். அவரின் சடலத்தை மறுநாட் காலை அந்த இயக்கத்தினர், முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் குறுக்காகக் கிடத்திக் கட்டியிழுத்து செங்கலடி நகரப் பகுதிக்கு ஊடாகக் கொண்டு வந்தனர்.

சடலத்தைக் கட்டியிழுத்து வரும்போது கால், கைகள் வீதியில் உராய்வு பட்டு வந்தது. தூரத்தில் நின்று பார்த்தவர்களுக்கு இக்காட்சி திருக்கைமீன் அல்லது பன்றியைக் கட்டியிழுத்து வருவது போன்று தெரிந்தது. சுடப்பட்டவர் புலி இயக்க உறுப்பினர் என்று கூறப்படுகிறது. நகரப்பகுதிக்கூடாக சடலம் கொண்டுவரப்பட்ட விதம் நாகரிகமற்றது என்று பலரும் விசனப்பட்டார்கள்.



படிப்பகம்

# தமிழ்த்தினப் போட்டிகளில் குளறுபடி
## முடிவுகளை ஆட்சேபிக்கும் பாடசாலைகள்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் கடந்த 07.05.97 அன்று நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி நிகழ்ச்சிகளில் குளறுபடிகள் நடந்திருப்பதாகப் பரவலான ஆட்சேபங்கள், மட்டக்களப்புக் கல்வித் திணைக்களத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த முடிவுகள் பல அபார திறமை கொண்ட ஏழை மாணவர்களின் எதிர்பார்ப்புக்களை குழி தோண்டிப் புதைத்திருப்பதோடு அவர்களது மன நிலையில் தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

சிறிதுகூடச் சந்தேகமின்றி, தெரிவு செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களும், நிகழ்ச்சிகளில் மாணவர்களின் முழுத்திறமைகளையும் வெளிக்கொண்டு வருவதற்காக இரவு பகலாகப் பாடுபட்ட ஆசிரியர்களும் இந்த முறைகேடான முடிவுகளைக் கேட்டு அதிர்ச்சியுற்று அழுத சம்பவங்கள். இடம் பெற்றதாகச் சில பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கிறார்கள். நிகழ்ச்சிகளுக்கான விசேட உடைகளைக்கூட ஆயத்தப்படுத்த முடியாத பல வறிய மாணவர்கள் பல கஷ்டங்களின் மத்தியில் ஆர்வத்துடன் தங்களது அபார திறமைகளை வெளிக் கொண்டு வந்திருந்தார்கள்.

நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மத்தியஸ்தர் பிரதம குழுவில் இருந்தவர்கள் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் உயரதிகாரிகளின் உறவினர்களேயாகும். அதனால் எதுவித காரணங்களுமின்றி பக்கச்சார்பான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நிகழ்ச்சிகளை அவதானித்த நடுவர்கள் பென்சில் கொண்டுதான் புள்ளிகளை எழுதியிருக்கிறார்கள். வழக்கமாகப் போட்டி முடிவுகள் நிகழ்ச்சி நடந்த அன்றைய தினமே அறிவிக்கப்படுவதுண்டு.

ஆனால் இந்நிகழ்ச்சியின் முடிவுகள், போட்டி நடந்து கிட்டத்தட்ட ஒருவார காலத்தின் பின்னர்– 13.05.97 அன்று காலை ஒன்பது மணிக்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அறிவிக்கப்பட்ட அன்றைய தினம், சூட்டோடு சூடாக காலை 10மணிக்கு தெரிவான மாணவர்களை அழைக்குமாறும் பாடசாலைகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தன. மத்தியஸ்த நேரத்தில் பென்சிலால் புள்ளிகளை எழுதிவிட்டு ஆற அமரச் சிந்தித்து தமக்கு வேண்டியவர்களின் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இத்தகைய நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறது என்று பரவலான கண்டனங்கள் எழுந்துள்ளன.

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் உயரதிகாரியான பெண்மணியின் மகனும் தமிழ்த்தின நிகழ்ச்சியில் முதலாமிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இந்தப் பெண்மணியின் சகோதரி ஒருவரே, மத்தியஸ்தர் பிரதம குழுவில் இருந்து இத்தகைய குளறுபடியான முடிவுகளை வழங்கக் காரணமாக இருந்தார் என்று பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பெயர் மாறிய தமிழ்ப் பிரதேசங்கள்!

முரசு 205ல் அதிரடி அய்யாத்துரையார் வந்தாறுமூலையை 'வந்துறுமுல்ல' (குரங்குகளின் ஒதுங்குமிடம்) என்று மாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிபற்றிக் கூறியிருந்தார். இங்கு எனக்குத் தெரிந்த மேலும் சில தகவல்கள்:

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது– 1977 பொதுத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்னர், திருமலை மாவட்டத்திலுள்ள 'முதலிக்குளம்' என்ற பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசத்தில், விமானப் படையினருக்கான குடியேற்றம் ஒன்றை ஆரம்பித்து, அதற்கு 'மொறவெவ' என்ற சிங்களப் பெயரைச் சூட்டினார்.

கிழக்கு மாகாணத்தை வடமாகாணத்துடன் இணைக்கும் எல்லைப்பிரதேசமாக விருப்பது மணல் ஆறு. இருமாகாணங்களையும் துண்டாடுவதற்காகவே மணல் ஆறு பிரதேசத்தில், தெற்கிலிருந்து சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றி 'வெலி ஓயா' என்று பெயரிட்டனர்.

முன்னாள் குளக்கோட்டு மன்னன் கந்தளாய்க் குளத்தைக் கட்டுவித்தான். குளத்தைக் கட்டும்போது, ஒருவருடைய இரு கண்களையும் பலியாகக் கொடுத்தால்தான் குளக்கட்டுச் சீராக அமையும். அவ்வாறே கண்களைப் பலியாக்கி குளக்கட்டுப் பூரணமானதும் கண்களைக் கொடுத்தவருடைய கண்கள் முன்புபோல் தளைத்துவிட்டது. இதற்காக அந்த இடத்துக்கு 'கண்தளை' என்று பெயரிடப்பட்டது. கண்தளைத்த இடம் மருவி, கந்தளாய் என்று மாறிவிட்டது. இப்பெயர் இன்று பூரண சிங்களப் பெயராகி– 'கந்தளே' என்றாகிவிட்டது.

மட்டக்களப்புக்கு வடக்கே 12வது கல்லில் அமைந்த பழம்பெரும் கிராமம் வந்தாறுமூலை–கயபாகு மன்னர் சேர நாட்டிலிருந்து கண்ணகி சிலையைக் கொண்டுவந்து நாடு முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் சென்றான். அப்போது இந்த ஊரில் அனைவரும் வந்து ஆறி இருந்து ஓய்வெடுத்தனராம். அதனால் வந்து+ஆறிய+மூலை என்று பெயர் வந்ததாம்.

இது தவிர, முன்பு திமிலருக்கும் வேறு குலத்தவர்களுக்குமான போர் மூண்டபோது, படைகள் வந்து ஆறிய இடம் என்றும் கூறப்படுகிறது. மட்டக்களப்புக்கு வடக்கே உள்ள கிராமங்களின் பெயர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது படைகள் வந்து ஆறிய இடம் என்று சொல்வது பொருத்தமாகும்.

தண்ணாமுனை (போரிட முடியாத அல்லது வெற்றி கொள்ள முடியாத முனை), சத்துருக்கொண்டான் (எதிரியைக் கொன்ற இடம்) என்ற பெயர்களே இவையாகும்.

மு. பரமேஸ்வரன், மட்டக்களப்பு.

# சாரதிகளுக்கு வழிகாட்டும் நடத்துநர்கள்
## சாலையின் வருமானத்தில் திடீர் அதிகரிப்பு!!

(மன்னார் நிருபர்)

மன்னார் டிப்போவில் கடந்த காலங்களில் கடமை புரிந்து வீடுகளில் நின்ற அநேகமான சாரதிகள் தற்போது மீண்டும் தத்தம் கடமையில் இணைந்துள்ளனர்.

இவர்கள் வந்த உடனேயே கடமைக்கு அனுப்பப்பட்டதால், வீதி வழிகள் தெரியாமல் நடத்துநர்கள் வழிகாட்ட வேண்டி இருந்தது.

சிலர் பொலிஸாரின் சோதனைச் சாவடிகளுக்குள்ளும் வேறு சிலர் மிகவும் தூரத்திலும் பஸ்களை நிறுத்தி சங்கடப்பட்டதையும் காணக் கூடியதாக இருந்தது.

முன்னர், நாளாந்தம் சுமார் பத்தாயிரம் ரூபா வரை வருமானம் பெற்ற மன்னார்ச் சாலை, தற்போது தினசரி வருமானமாக நாற்பதாயிரம் ரூபா வரை பெற்று வருகிறது.

உயிலங்குளம், பரப்பாங்கண்டல், வவுனியா ஆகிய இடங்களுக்கான பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சாலையில் ஏற்கனவே 18 பஸ்களே உள்ளன. வெகுவிரைவில் மேலும் இங்கு 5 பஸ்கள் கிடைக்கவுள்ளன என்று இ.போ.ச. வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா-மன்னார் சேவையிலீடுபடுத்தும் பஸ்களின் அளவு குறைவாக உள்ளதால் நூற்றுக்கணக்கான பயணிகள் ஒரு பஸ்ஸிலேயே பயணம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார்-வவுனியா பஸ் சேவையை அநுராதபுரம் வரை விஸ்தரிக்க போதிய வசதி இருந்தும் சிலர் இதனை விரும்பாமல் வவுனியா வரை நடத்துவதிலேயே கரிசனையாக உள்ளனர். இது ஏன் என பொது மக்கள் விசனத்துடன் கேட்கின்றனர்.

# பாட்டுக்குப் பாட்டு

(திருமலை நிருபர்)

அம்பிகாவின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி மே 31, ஜூன் 1 ஆகிய திகதிகளில் திருக்கோணமலையில் ஒலிப்பதிவு செய்யப்படவிருக்கிறது.

வானொலிக் கலைஞர் எஸ். ராமதாஸின் நிகழ்ச்சி அமைப்பில் புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சியை பி.எச். அப்துல் ஹமீட் நெறிப்படுத்தவுள்ளார். நகராட்சி மன்றக் கலாசாரப் பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந்நிகழ்ச்சியின் பார்வையாளர்களாகவோ, போட்டியாளர்களாகவோ கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# புலிகளால் கடத்தல்

மட்டக்களப்பு-ஆரையம்பதிப் பிரதேச சபைத் தலைவரின் மெய்ப்பாதுகாவலரான ரி.சிவதாஸன் (25) கடந்த 08.05.97 அன்று மட்டக்களப்பு-மாமாங்கத்தில் வைத்துப் புலிகள் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவர் மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தைச் சார்ந்தவராகும்.

ஆரையம்பதிப் பிரதேசசபை நிருவாகம் ரெலோ இயக்கத்தினரால் ஆளப்பட்டு வருகிறது. இச்சம்பவம் குறித்து, பிரதேச சபையின் தலைவர் க.றொபேட் நவரெத்தினராஜா மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

கடமை முடிந்து வீடு சென்ற திரு.சிவதாஸன் பக்கத்திலுள்ள கடைக்குப் போனபோது, அங்கு நின்ற புலிகள் இயக்கத்தினர் ஆறு பேர் இவரை மடக்கிப் பிடித்துச் சென்றுள்ளனர். அன்றைய தினம் இரவே தமது ஆளுகைக்குள் உள்ள படுவான்கரைப்பகுதிக்கு– மட்டக்களப்பு வாவியைக் கடந்து கடத்திப் போயிருப்பதாக அறியப்படுகிறது. இவர் என்ன ஆனார் என்பது இச் செய்தி எழுதப்படும்வரை தெரியவரவில்லை.

# பாதிக்கப்பட்டோருக்கு உதவி!
## புனர்வாழ்வு நிலையம் சுறுசுறுப்பு!

(ஏறாவூர் நிருபர்)

குடும்பப் புனர்வாழ்வு நிலையம், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியர்கள், தாதிமார், மற்றும் பொதுநல உதவி அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு சமீபத்தில் உளவியல் பயிற்சிக் கருத்தரங்கொன்றை, மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் நடாத்தியது.

யுத்தச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டு வரும் அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியமான– சிறந்த சமூக வாழ்வு கிட்டச்செய்வதே இத்தகைய பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்படுவதின் முக்கிய நோக்கமாகுமென்று குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனிற்றா நேசையா தெரிவித்தார்.

இங்கிலாந்திலுள்ள சர்வதேச ஆலோசனைச் சபையைச் சேர்ந்த உளவியல் நிபுணரும், விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி செல்வி ராகெல் ட்ரைப் இப்பயிற்சிக் கருத்தரங்கை நடத்தினார். இவர் கடந்த 12 வருடகாலமாக இங்கிலாந்திலும் வெளிநாடுகளிலும் அகதிகளினதும் சித்திரவதைக்குள்ளானவர்களினதும் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார்.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சி.சி.கே. செல்வதுரை அவர்களும் பயிற்சி நெறியில் பங்குபற்றினார்.

இப்பயிற்சி நெறியை ஏற்பாடு செய்திருந்த குடும்பப் புனர்வாழ்வு நிலையம், இலங்கையில் யுத்தச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை, வவுனியா, அநுராதபுரம், பொலன்நறுவை, புத்தளம், ஹம்பாந்தோட்டை உட்பட பதுளை, கண்டி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் புனர்வாழ்வு, தொழிற் பயிற்சி, வைத்திய சிகிச்சைகள், உளநல ஆலோசனைகள், மற்றும் பல்வேறுபட்ட சமூக நலப்பணிகளை ஆற்றி வருகிறது.

சித்திரவதைக்குள்ளானோர், சிறையிலிருந்து விடுதலை பெற்றோர், விதவைகள் என்போருக்கு இந்நிறுவனம் முன்னுரிமை கொடுத்துச் சேவையாற்றி வருகிறது.

விளம்பரப் பகுதி


**'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்**

APPROVED CHARITY-அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176

'எல்லாப்புகழும் இறைவனுக்கே'

காம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பபிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைக்கண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்

YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.

குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.


# 6ம் மாத நினைவஞ்சலி

மலர்வு 1975-03-30



மறைவு 1996-11-23

## கனகரெட்ணம் துஷ்யந்தன் [திகதி.21-05-97]

1996.11.23ம் நாளன்று விமான விபத்தில் சிக்கி அமரத்துவம் அடைந்த திருகோணமலை (உவர் மலை) கோணேசபுரத்தைச் சேர்ந்த கனகரெட்ணம் துஷ்யந்தனின் நினைவாக

தலைமகனாய் அவதரித்து
தான் பிறந்த குலம் உயர்த்தி
இருபத்தொரு வயது
இனிது இப்புவியில் வாழ்ந்து
அமரர் ஆனவனே அன்புத்திருமகனே
அஞ்சலி செய்கின்றோம்– நாங்கள்
உன் அன்புக்கு ஏங்குகின்றோம்.

உன் பிரிவால் வாடும், அப்பா, அம்மா, தங்கை, தம்பியர்.


**SPOKEN ENGLISH**

By. PON. SAKTHIVEL ACEA(Lond) IPFM (Lond) Dip. in. Eng (Lond)

மூன்றே மாதகாலத்தில் ஆங்கிலம், பேச, எழுத, வாசிக்க அதிசிறந்த நவீன கற்பித்தல் முறையின் கீழ் உளவியல் அடிப்படையில் எல்லோரும் விரும்புகின்ற முறையில் கற்றுத் தரப்படும்.

12 துணை நூல்களை அடிப்படையாக கொண்ட பாடத் திட்டம்.

ஆரம்பம் : 1.6.97 முதல் 31.8.97 வரை
நேரம் : 10.30 AM - 12.30 PM

BRIGHT TUITION CENTRE
77/20, JAMPATTA STREET,
COLOMBO - 13. T.P. 345367



33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:–

P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13

தொலைபேசி வரிசைகள்
342463- 344831- 344832- 431137- 07841571
பக்ஸ் இல–342464
பேஜர் சென்டர் இல– 588407
தொடர்பு கொண்டு இல– 972 இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET. NO.....
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.

நேரில் சந்திக்க–
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

**SPOKEN ENGLISH**
**தபால் மூலம் கல்வி**

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE(PVT) LTD.
P.O.BOX-162, COLOMBO.

**UNION**

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு, கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S. மணி**

மூலம் அறிய வாருங்கள்

Holiday Inn
Colombo - 3 Fax : 547977
T.P. 422001, 422010

வெளிநாட்டிலுள்ளவர்களுக்கும் அரிய சந்தர்ப்பம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**மணமகள் தேவை**

அமெரிக்காவில் வதிவிட உரிமை பெற்ற 33 வயதான இந்து மணமகனுக்கு தொழில் பார்க்கும் 24—30 வயதுக்குட்பட்ட அழகிய மணமகள் தேவை. தகுதியானவர்கள் அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

N.S.U.
P.O. BOX - 1092
BOSTON MA - 02117
U.S.A.

(Advt)

**மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)**

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பஷ்த 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோத்தத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்ஊரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

மே 19 முதல் 31 Dr. P. Arumugam, Ahamed Tourist inn. Bang Building No:10, Reclamation Road, (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101. கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும். ஜூன் 7,8,9,10,11 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும் T.P. 065/29329 ஜூன் 3,4 Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி, மற்ற நாட்களில் Dr. P. Arumugam No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# தளமுற்றுகையும் கள நிலவரமும்!

வன்னிப் படை நவடிக்கைக்கு வெற்றி நிச்சயம் என்று பெயரிடப்பட்டாலும் 'சுருக்குக் கயிறு' என்பதே பொருத்தமான பெயர்.

தரைப்பாதை திறப்புக்கான முயற்சி என்று வெளியே சொல்லப்பட்டாலும் புலிகளின் வன்னித் தளத்தை நோக்கி வீசப்பட்டுள்ள சுருக்குக் கயிறுதான் இது.

வன்னித் தளத்தின் இதயமான முல்லை மாவட்டத்தை முற்றுகையிடுவதே முதல் நோக்கம்.

அவ்வாறு முற்றுகையிடுவது மூலமாக வடக்கு-கிழக்கு தரைத்தொடர்பை துண்டிக்க முடியும். அதனூடாக புலிகளின் தலைமையை முல்லை மாவட்டத்துக்குள் தற்காப்பு நிலைக்குள் தள்ளுவதுடன், கிழக்கு மாகாண அணிகளையும் தலைமைப் பீடத்தில் இருந்தும், பிரதான தளத்தில் இருந்தும் தனிமைப்படுத்திவிடலாம். அவ்வாறு செய்வதால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்.

வடக்கிலும், புலிகளை முடக்குவதோடு, கிழக்கில் உள்ள புலிகளின் உத்வேகத்தையும் கட்டுப்படுத்தலாம் என்பதுதான் படையினரின் திட்டம்.

**கிழக்கில் உள்ள புலிகளுக்கான விநியோகம், மற்றும் தேவைக்கேற்ப வடக்குக்கும் கிழக்குக்கும் அணிகளை இடம்மாற்றிக் கொள்வது, திடீரென்று தமது வடக்கு-கிழக்கு அணிகளை ஓரிடத்தில் ஒன்று குவித்து பாரிய தாக்குதல்களை நடத்துவது போன்றவற்றை புலிகள் மேற்கொள்ள முடியாதவாறு வடக்கு-கிழக்கு தொடர்பை துண்டிப்பதுதான் திட்டம்.**

மூன்றாம் கட்ட ஈழப்போரின் முதல் முழக்கம் கேட்டதும் கிழக்கில்தான். மூன்றாம் கட்ட ஈழப்போரின் பிரதான முனை கிழக்கில் தான் என்றே புலிகளும் கூறிவருகின்றனர்.

வடக்கில் படையினர் பெறும் இராணுவ வெற்றிகளை கிழக்கில் பாரிய அதிரடிகள் மூலம் புலிகள் சமன் செய்து விடுகின்றனர்.

ஒரே நேரத்தில் வடக்கிலும்-கிழக்கிலும் படைகளை நகர்த்தி புலிகளுடன் போரிடுவதற்கு அரசிடம் உள்ள படைபலம் போதாது.

ஒரு கெரில்லாவுக்கு குறைந்தது ஐந்து படைவீரர் சமம் என்ற ரீதியில்தான் படைபலம் பிரயோகிக்கப்படுகிறது. எனவே ஒரே நேரத்தில் வடக்கு-கிழக்கில் படைநகர்வு சாத்தியமில்லை. புலிகளை அழுத்துவதும் முடியாது.

எனவேதான் புதிய ஒரு உத்தியை படையினர் வகுத்திருக்கின்றனர்.

எதிரியை அழிப்பது என்பது இரண்டு வகைப்படும்.

ஒன்று; எதிரியை உடல்ரீதியாக அழிப்பது.

இரண்டு; எதிரியின் எதிர்க்கும் ஆற்றலை அழிப்பது.

புலிகள் வடக்கு-கிழக்கில் பரவலாக நிலைகொண்டு உள்ளபோது படை பலத்தையும் பரவலாக்கி சண்டையிட்டால் படையினருக்குத்தான் இழப்புக்கள் அதிகமாகும்.

கெரில்லாத் தாக்குதல்களை ஒருபோதும் கட்டுப்படுத்தவும் முடியாது. எந் நேரமும் விழிப்பாக இருந்து தடுக்கவும் இயலாது.

அதனால்தான் மிகவும் கச்சிதமாக திட்டமிட்டு தந்திரமாக ஒருவலையை அல்லது பொறியை வைத்தனர் படையினர்.

மிக நுட்பமான தந்திரம் அது.

வன்னியில் படைகளைக் குவித்து விட்டு நடவடிக்கைக்கு தாமதமாவது ஏன்? என்பதற்கு முன்னர் நாம் சொன்ன கணிப்பை இன்றைய நிகழ்வுகள் துல்லியமாக உணர்த்துகின்றன.

அதாவது புலிகள் அறியக்கூடிய வகையில் படைக்குவிப்பை ஆரவாரமாகச் செய்துவிட்டு, உளவு விமானங்கள் மூலமும், மற்றும் தகவல்கள் மூலமும் புலிகளின் நகர்வுகளை உற்று நோக்கினர் படையினர்.

புலிகளின் அணிகள் வவுனியா கிளிநொச்சி தரைப்பாதையில்தான் நிலை எடுத்து நின்றன.

மேலும் படையினர் தாமதித்தனர்.

மேலும் படைகள் குவிக்கப்பட்டன.

இரகசியமாக படைக்குவிப்பும் நடக்கவில்லை. பஸ்களிலும், ரயில்களிலும்கூட படையினர் சென்று பகிரங்கமாக இறங்கினர்.

அதற்கு காரணம் இருந்தது.

மேலும் மேலும் படைகளைக் குவித்தால், புலிகளும் தமது அணிகளை வன்னியில் குவிப்பர். கிழக்கில் உள்ள புலிகளின் அணிகளையும் வன்னித் தளம் பாதுகாப்புக்காக பிரபாகரன் அழைப்பார் என்று படையினர் காத்திருந்தனர்.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்தத் திட்டம் புத்திசாலித்தனம் இல்லாததாகத் தெரியலாம்.

ஆனால் உள்ளார்ந்த ரீதியில் மிகத் தந்திரமான பொறி இது.

புலிகளின் பலத்தையெல்லாம் ஒரு பகுதிக்குள் ஒன்றுகுவியச் செய்துவிட்டு அவற்றை அப்படியே முற்றுகை இடுவதுதான் திட்டம்.

இத்தகைய திட்டத்தில் ஒரே ஒரு பாதகம்தான் படையினருக்கு இருக்கும். புலிகளின் பலம் ஒன்று குவிந்திருந்தால் எதிர்ப்பு யுத்தம் பலமாக இருக்கும். அதனால் படையினர் தரப்பில் இழப்புக்கள் அதிகமாகும்.

**ஆனால் வடக்கு-கிழக்கில் புலிகள் பரவலாக இருந்து தாக்குதல்கள் நடத்திக்கொண்டிருக்கும்போது ஏற்படக்கூடிய இழப்புக்களுடன் ஒப்பிட்டால் இது பரவாயில்லை. அது தவிர ஏனைய பகுதிகளில் இருந்து வந்த புலிகளின் அணிகளும் வன்னி முற்றுகையில் சிக்கிக் கொள்ளுமானால் கிழக்கிலும், ஏனைய பகுதிகளிலும் உள்ள படைகளையும் வன்னிக்கு கொண்டு சென்று குவிக்கும் சாதகமும் தமக்கு இருக்கும் என்று படையினர் கணக்குப் போட்டனர்.**

அதனால்தான் வழக்கத்திற்கு மாறாக படைக்குவிப்பு பகிரங்கமாக நடந்தது. புலிகள் ஒன்றுதிரள சந்தர்ப்பம் தரப்பட்டது.

ஆனால் படையினர் போட்ட கணக்கு ஓரிடத்தில் பிசகாகிவிட்டது.

'ஒப்பரேசன் எடிபல' மூலம் வவுனியா-மன்னார் தரைப்பாதை திறக்கப்பட்டபோது வவுனியா-கிளிநொச்சிப் பாதையில் புலிகளின் அணிகள் தயார் நிலையில் இருந்தன.

அதே அணிகள்தான் படையினரின் புதிய நடவடிக்கையை எதிர்பார்த்தும் தயார் நிலையில் இருந்தன.

**படையினர் எதிர்பார்த்ததுபோல கிழக்கில் இருந்து தமது அணிகளை பிரபாகரன் வன்னிக்கு தருவிக்கவில்லை. அதற்கு மாறாக சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவை திருமலைக்கு அனுப்பினார். மற்றொரு புதிய அணியை மட்டக்களப்பு அம்பாறைக்கு அனுப்பி வைத்தார்.**

ஒருவேளை வன்னித் தளத்தில் போர் நிலவரம் தமக்குப் பாதகமானால் பிரதான அணிகள் சில 'வெளியே இருக்கவேண்டும் என்று நினைத்து பிரபா செய்த ஏற்பாடு அது.

அதுமட்டுமல்லாமல் ஒரு முனையில் மட்டும் படையினரோடு சண்டையிட்டுக் கொண்டிருக்காமல், படையினரின் ஒன்றுகுவிதலை தடுக்கும் முகமாக கிழக்கிலும் இயலுமான பாய்ச்சல்களை நடத்தும் தேவையும் புலிகளுக்கு இருக்கிறது.

ஆக, புலிகளின் பிரதான அணிகள் அனைத்தையும், குறிப்பாக கிழக்கு மாகாண அணிகளையும் வன்னி முற்றுகைக்குள் சிக்க வைக்க படைத்தரப்பு நினைத்தது பலிக்கவில்லை.

ஆனால் வன்னித்தளத்தை முற்றுகை யிடும் திட்டம் ஓரளவு பலித்துள்ளது. வடக்கு- கிழக்கு தரைத்தொடர்பை துண்டிக்கும் விதமாக இராணுவ வேலி அமைத்தது மூலம் அந்தத் தொடர்பை துண்டிக்கும் முதல் கட்ட முயற்சி நடந்திருக்கிறது.


வெலி ஓயாவில் இருந்து முன்னேறி படையினர்தான் வன்னித் தளத்தின் இதயமான முல்லைக்கு அச்சுறுத்தல் என்று கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? நூற்றுக்கு நூறு அது சரிதான்.

வெலிஓயாவில் இருந்து முன்னேறிய நெடுங்கேணியை பிடித்திருக்கின்றனர்.

முல்லை முற்றுகைக்கான முதற்கட்டம் அதுதான். முல்லைத்தீவில் இருந்து திருமலைக்கு தரை மூலமாகச் செல்வதற்கு இரு பாதைகள் உள்ளன.

ஒரு பாதை தென்கிழக்கு பகுதி ஊடாகச் செல்வது. அப்பாதை வழியாக செல்வது சிரமம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றப் பகுதிகளான மணலாறு (வெலிஓயா), கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், புல்மோட்டை போன்ற பகுதிகளைக் கடந்துதான் செல்ல வேண்டும். வெலிஓயாவில்தான் பாரிய இராணுவ முகாமும் இருக்கிறது. பாதுகாப்பு வேலியாக பலமுகாம்களும் பாதுகாப்பு நிலைகளும் தொடர்ச்சியாக உள்ளன.

வெலிஓயா முகாமை தாக்கியழிக்க புலிகள் நடத்திய பாரிய தாக்குதல் தோல்வியில் முடிந்திருந்தது. எதிர்காலத்தில் முல்லை முற்றுகை அபாயம் ஏற்படலாம். வடக்கு-கிழக்கு தரைத் தொடர்பு துண்டிக்கப்படலாம் என்று கருதியே வெலிஓயா முகாமை அகற்ற புலிகள் முற்பட்டனர். அத்தாக்குதல் மட்டும் வெற்றியாக முடிந்திருந்தால் இன்றைய முற்றுகை படையினருக்கு சாத்தியப்பட்டிருக்காது.



எக்ஸ்ரே ரிப்போர்ட்

படை நடவடிக்கைக்கான சுபநேரத்தை பிரபல ஜோதிடர் ஒருவரே கணித்துக் கொடுத்தாராம். படையினரின் பாரிய நடவடிக்கைகள் அநேகமாக செவ்வாய்க் கிழமைகளில்தான் தொடங்கப்படுவது வழக்கம். செவ்வாய்என்றால் போருக்குரிய தேவதை என்பது நம்பிக்கை. 'வெற்றி நிச்சயம்' படை நடவடிக்கையும் செவ்வாய் அன்று ஜோதிடர்சொன்ன சுப நேரப்படி அதிகாலை 5.20 மணிக்கு ஆரம்பமானது. 'ஜெயசுக்குறுய்' (வெற்றி நிச்சயம்) என்ற பெயரை சூட்டியதற்குஇன்னொரு காரணமும் கூறப்படுகிறது. ஜனாதிபதி சந்திரிக்காவின் துணைவர் மறைந்த விஜயகுமாரதுங்க கதாநாயகனாக நடித்த படம்ஒன்றின் பெயர் ஜெயசுக்குறு.

முல்லைத்தீவில் இருந்து திருமலை செல்லும் மற்றொரு தரைப்பாதை முல்லையின் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. நெடுங்கேணியூடாக நொச்சிக்குளம், பட்டிக்குடியிருப்பு போன்ற தமிழ்க் கிராமங்கள் ஊடாக சென்று பராக்கிரமபுர, பதவியா போன்ற சிங்கள குடியேற்றப் பகுதிகளைத் தாண்டிச் செல்ல வேண்டும்.

எப்படித்தான் போனாலும் வடக்கு- கிழக்கு நிலத் தொடர்பை துண்டிக்க திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களை தாண்டியே செல்ல வேண்டும். ஆனாலும் வெலிஓயா ஊடாக செல்வதைவிட நெடுங்கேணியூடாக திருமலை செல்வது பாதுகாப்பானது. பாரிய இராணுவ வேலிகள் அப்பாதையில் காணப்படவில்லை.

**ஆனால் இப்போது நெடுங்கேணி படையினர் வசம் சென்றுள்ளதால் அப்பாதைத் தொடர்பு துண்டிக்கப்படும் அபாயம் நெருங்கியுள்ளது. முழுதாக அத் தரைப்பாதைத் தொடர்பை படையினர் துண்டிக்க வேண்டுமானால் தற்போது ஓமந்தையில் நிலை கொண்டுள்ள படையினர் புளியங்குளம் வரை செல்ல வேண்டும். நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் வரை குறுக்காக பாதுகாப்பு அரண் (பண்ட்) கட்டப்படுமானால் வடக்கு-கிழக்கு இடையிலான தென்மேற்கு தரைப்பாதைத் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்படும். அத்தோடு முல்லை முற்றுகை மேலும் இறுகும்.**

அதன் பின்னர் கடல்வழிப் பாதையூடாகவே முல்லையில் உள்ள புலிகள் வெறியேற முடியும். கிழக்குத் தொடர்பும் கடல்வழியை நம்பியே இருக்கும்.

படையினர் ஓமந்தையிலும், நெடுங்கேணியிலும் நிலைகொண்டு தமது முதல் கட்ட முயற்சியை நிறைவு செய்தனர்.

ஓமந்தையில் உள்ளபடைகள் புளியங்குளம் வரை செல்லவேண்டுமானால் 12 கிலோமீட்டர் தூரத்தை கடந்தாக வேண்டும். அங்கிருந்து நெடுங்கேணி 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள வெலிஓயாப் படைகளும், ஓமந்தையில் நிலை கொண்டுள்ள வவுனியாப் படைகளும் எதிரும் புதிருமாக புறப்பட்டு ஓமந்தை நெடுங்கேணி சாலையைக் கைப்பற்றும் திட்டம் இருக்கலாம்.

**ஆனால் கடும் மோதலை சந்திக்காமல் இனிமேல் படையினர் நகர முடியாது. புலிகளின் அணிகள் மூர்க்கமான தாக்குதல் தொடுத்தே தீரும். ஏனெனில் வவுனியா-கிளிநொச்சி தரைப்பாதை திறப்பைவிட, வடக்கு-கிழக்கு தரைத் தொடர்பை துண்டிக்கும் இராணுவ வியூகம்தான் புலிகளுக்கு ஆபத்தானது.**

கடந்த பதின்மூன்றாம் திகதி ஆரம்பித்த யுத்தம் 20ம் திகதியுடன் ஒரு வாரத்தை பூர்த்திசெய்தது.

யுத்தம் பற்றிய மிகையான செய்திகள்தான் வெகுஜன தொடர்பு சாதனங்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ளன.

புலிகளின் வானொலி தெரிவித்ததாகவும் அவர்கள் தெரிவிக்காத செய்திகளை சில செய்தி நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. புலிகளின் தரப்பில் நூறுபேர் பலியானதாக புலிகளின் குரல் சொன்னதாக வெளியான செய்தியும் கட்டுக்கதைகளில் ஒன்றுதான்.

21ம் திகதிவரை தமது தரப்பில் 64 பேரே பலியானதாக புலிகளின் வானொலி 21.05.97 அன்று இரவுச் செய்தியில் கூறியிருந்தது.

வவுனியாவில் இருந்து பத்துக் கிலோமீட்டர் முன்னேறி ஓமந்தையை படையினர் கைப்பற்றியதாக செய்திகள் வெளியாகின.

வவுனியாவில் இருந்து ஓமந்தை பத்து கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆனால் படையினர் ஏற்கனவே வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் நொச்சிமோட்டைவரை நிலை கொண்டிருந்தனர். முன்பு படையினரின் முன்னரங்க காவல் அரண் அதுதான். வவுனியாவில் இருந்து 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது நொச்சிமோட்டை. அதேசாலையில் மாணிக்க வளவு என்ற கிடத்தில் புலிகளின் நிலை இருந்தது. நொச்சிமோட்டையில் இருந்து மானிக்க வளவு கிட்டத்தட்ட நாலு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. நொச்சி மோட்டைக்கும் மாணிக்கவளவுக்கும் இடைப்பட்ட 2-3 கிலோமீட்டர் தூரம் மனித நடமாட்டம் இல்லாத பகுதி. அதாவது 'நோ மேன் ஏரியா'.

எனவே வவுனியாவில் இருந்து புதிதாக படையினர் 20ம் திகதிவரை முன்னேறியது ஆறு கிலோமீட்டர் தூரம்வரைதான். அதிலும் கிட்டத்தட்ட மூன்று கிலோமீட்டர் நோமேன் ஏரியா.

மாணிக்கவளவில் இருந்தது கூட புலிகளின் பலமான நிலை அல்ல. வவுனியா வரும் பொதுமக்களை அனுமதி கொடுத்து அனுப்பும் நிலைதான் அங்கு இருந்தது.

உண்மையில் ஓமந்ததான் புலிகளின் பலமான தடை அரண். அங்குதான் முன்னேறிய படையினரை புலிகள் மூர்க்கமாக எதிர்கொண்டனர்.

அதேவேளை வெலிஓயாவில் இருந்து முன்னேறிய படையினரும் நெடுங்கேணி வரை சுலபமாக செல்ல முடிந்தது. வெலிஓயாவில் இருந்து நெடுங்கேணிவரை சிங்களக் கிராமங்களை ஒட்டியதாகவே படையினர் முன்னேறினார்கள்.

ஓமந்தையில் இருந்தும், நெடுங்கேணியில் இருந்தும் இனிமேல் படையினர் முன்னேறும் போதுதான் சமர் தீவிரமாக இருக்கப் போகிறது.

வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் ஓமந்தை பஸ் நிலையத்தில் இருந்து 1/4 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பாடசாலை வரை முன்னேறிய படையினர் அப்பாடசாலை கட்டிடத்தை தமது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு அங்கிருந்து அடுத்த கட்ட தயாரிப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா- கிளிநொச்சி நெடுஞ்சாலையில் பன்றிக்கெய்த குளம் என்ற இடத்தில் தற்போது புலிகளின் நிலை உள்ளது. புலிகளின் ஆட்டிலெறிகள் வவுனியா பாதுகாப்பு நிலைகளை எட்டாத தூரம் வரை படையினர் செல்ல வேண்டுமனால் ஓமந்தையில் இருந்து மேலும் பத்துகிலோமீட்டர் தூரம் வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் செல்லவேண்டும்.

**எனவே படையினரின் அடுத்த கட்ட நடவடிக்கை முல்லை முற்றுகையை இறுக்க ஓமந்தை நெடுங்கேணி சாலையை கைப்பற்றுவதாகவும், வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் மேலும் பத்து கிலோமீட்டர் தூரத்தை எட்டுவதாகவும் திட்டமிடப்பட்டிருக்கலாம்.**

ஆனால் புலிகள் தம்மை நோக்கி வீசப்படும் சுருக்குக் கயிறை வெட்டி எறியும் மூர்க்கத்தோடு சண்டையிடுகின்றனர்.

ஓமந்தையில் நிலைகொண்டுள்ள படையினரை புலிகளும் தமது பொறிக்குள் சிக்கவைக்க முயன்றனர்.

ஓமந்தையை நோக்கி விளாத்திக்குளம் காட்டுப் பகுதியில் இருந்து இடதுபுறமாக ஒரு அணியும், வலது புறமாக மற்றொரு அணியும் இரு புறமாகத்தாக்கிக் கொண்டிருக்க, பன்றிக்கெய்த குளத்தில் இருந்து நெடுஞ்சாலை வழியாக மூன்றாவது அணியொன்று தற்காப்பு தடுப்பில் ஈடுபட்டது.

புலிகளின் பொறியில் சிக்காமல் தப்பவே விளாத்திக்குளம் காடுகளுக்குள் விமானப் படையினர் குண்டுகளைப் பொழிந்தனர். அதன்மூலம் புலிகளின் இடதுபுறமான தாக்குதல் வேகம் குறைக்கப்பட்டது.

நேருக்கு நேர் மோதல் என்று செய்திகள் வெளியானதால் ஏதோ பரந்தசாலையில் இரு அணிகளும் மரபுப்போர் புரிந்ததுபோல் கருதப்பட்டது. அவ்வாறு போரிட்டிருந்தால் புலிகளுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டிருக்கும். படையினரின் பீரங்கிக் குண்டுகள் எதிரே நிற்கும் அணிகளை துவம்சம் செய்திருக்கும்.

உண்மையில் பங்கர்கள் ஊடாகவும் காட்டுப் பகுதிகளின் சாதகமான பதுங்கு நிலையில் இருந்துமே புலிகளின் அணிகள் திடீர் பாய்ச்சல்களை நடத்தியிருந்தன.

நிலத்திற்கு கீழே வெட்டப்பட்ட பங்கர்கள் ஊடாகவும் பதுங்கிவந்து திடீரென்று படையினரின் பின்புறமாக ஓமந்தைக்குள் தாக்குதல் நடத்தியிருக்கிறது. அதுதவிர மோட்டார் ஷெல்களையும் புலிகள் பெருமளவில் ஏவினார்கள். ஓமந்தை பரந்த வயல் வெளிப் பகுதி என்பதால் மோட்டார் தாக்குதல்கள் படையினருக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியது.

படையினர் தரப்பில் ஒருவார மோதலில் 75க்கு மேற்பட்டோர் பலியானதாகவும், 300 பேர் வரை காயமடைந்ததாகவும் தென்னிலங்கை பத்திரிகைகளே செய்தி வெளியிட்டுள்ளன.

**படையினர் முன்னேறும்போது எதிர்கொண்டு தடுத்து தாக்கியதைவிட பங்கர்கள் மூலமாகவும், திடீர் பாய்ச்சல்கள் மூலமாகவும் பக்கவாட்டிலும், பின்புறமாக வளைத்து ஊடறுத்தும் புலிகள் நடத்திய தாக்குதல்கள் தான் பிரதானமாக இருந்தது.**

மரபுப்போர் படைகளை கெரில்லா பாணியில் புலிகள் சந்தித்தமையாலும், மோட்டார் தாக்குதல்களாலுமே படையினர் தரப்பு இழப்பு அதிகமாகவும், இதுவரை புலிகள் தரப்பு இழப்பு குறைவாகவும் இருக்கிறது.

தமது தளத்தை பாதுகாக்கும் களமாக இருப்பதால் புலிகளும் மூர்க்கமாகவே எதிர்த்து நிற்கின்றனர். அதேவேளை படைத்தரப்பும் இழப்புக்கள் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து போரிடுவதில் குறியாக இருக்கிறது. ஆனால் வன்னிப் போரில் குறுகிய காலத்தில் இரண்டில் ஒன்று தெரியப்போவதில்லை. இதுதான் இறுதி யுத்தம் என்ற கணிப்புக்களும் சரியானதல்ல.

நாரதர்

---

## அதிரடி அய்யாத்துரை



**கிளிநொச்சியில்** விகாரை ஒன்றைக் கண்டுபிடித்து, புதுப்பித்து வழிபாடும் நடத்திமிருக்கினம் பாதுகாப்புத் தரப்பார். அதனை யாரும் தவறாக விளங்கிக்கொண்டாலும் எண்டு இன மத பேதம் இல்லாமல் வழிபாடு நடந்ததாக வானொலியில் செய்தி சொன்னவை. அங்கேதான் சனமே இல்லையே! பிறகென்ன இனமும் மதமும்?! செய்திகளைக் கொஞ்சம் யோசிச்சுச் சொல்லப் படாதோ?

**தீர்வுப் பொதிக்கு** எதிராக பேசுவோர், எழுதுவோர் விபரங்களை கரிசனமாகத் திரட்டும் வேலையில் இறங்கியிருக்கிறாராம் ஒரு புள்ளி. பொதியைத் தயாரிக்க உதவியதால் இப்போது பொதிக்கு எதிரானவர்களின் பெயர்கள் திரட்டும் வேலையாம். 'முரசு' பற்றியும் மேலிடத்தில் புகாரிட்டவராம். யார் எண்டு ஊகிச்சு இருப்பியள். கூட்டான கட்சியின் நிலமானவர் எடுத்துள்ள புதிய கோலம்தான் துப்பறியும் வேலை. தனக்கிடா உத்தியோகம் தன் பிடிறிக்குச் சேதம்.

**யாழில்** சிவில் அதிகாரிகள் சிலரை சீருடை அதிகாரி ஒருவர் அழைத்து கூட்டம் நடத்தினவராம். சிவில் அதிகாரிகளிடம் நேரம் என்ன? என்று கேட்கப்பட்டதாம். அவை பழைய நேரத்தை பட்டென்று சொல்லியிருக்கினம். "ரெண்டு எழுத்தாரின் நேரத்தைத்தான் ஃபலோ பண்ணுறியளோ?" எண்டு கேட்டாராம் ஒரு கேள்வி. அதிகாரிகள் சத்தியமாக முச்சுவிடேல்லை. உடனடியாக மணிக்கூட்டில் நேரமாற்றம் செய்து முடிச்சுப் போட்டுத்தான் முச்சுவிட்டவையாம்.

**'நம்பாதேங்கோ, நம்பாதேங்கோ'** எண்டு படிச்சுப் படிச்சு சொன்னான் இந்த அய்யாத்துரை. 'ஏதோ கோபமாக்கும்' எண்டு நினைச்சினம் சிலபேர். இப்ப வெளிச்சிட்டுது. அவனவன் அடிப்பட்டுச் சாகிறான். பனையேறி விழுந்தவனை மாடேறி மிதிச்சமாதிரி கூட்டான கட்சிப் பிரமுகர் சொன்னாராம்: "தரைப்பாதை திறக்கப்பட்டால் அது ஒரு வரப்பிரசாதம்" என்டாராம். அரச வானொலியில் தலைப்புச் செய்தி. அடியடா படலயிலை என்டானாம். 'அண்ணன் எப்ப சாவான் திண்ணை எப்ப காலியாகும்' என்பது பழைய பழமொழி. 'தம்பிமார் எப்ப சாவினம் திண்ணை எப்ப காலியாகும்' எண்டு அண்ணன்மார் காத்திருப்பது புதுமொழி. நெஞ்சில் குத்துபவனை மன்னிக்கலாம்; மரியாதை செய்யலாம், முதுகில் குத்தும் மனிதர்களை என்ன செய்யலாம்?!

**மலையின்** தனித்துவத் தலைவரும் சிஷ்யரும் ஒன்று சேர்ந்தது மக்கள் நலனுக்கு எண்டமாதிரி சிலர் பாராட்டி எழுதிய மை காயமுன்னரே சாயம் வெளுத்துப்போச்சுது. சிஷ்யர் கட்சி தலைவர் கட்சியை கிண்டலடிக்க தலைவர் தன் ஆளைவிட்டு பதிலடி கொடுத்திருக்கிறார். சின்ன மீனை பெரியமீன் விழுங்கும் தத்துவத்தை நம்பித்தான் ஒற்றுமையின் பக்குவம் பற்றி உபதேசிக்கப்பட்டதாக முன்னணி வட்டாரம் விழிப்பாக இருக்கிறது. "எங்களை விழுங்க அவை நினைக்கினம், எங்களை தீண்டப்படாத ஆட்கள் எண்டு அவை சொல்ல முடியாதமாதிரி இந்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்துகிறோம்" எண்டு முஷ்டியை உயர்த்திக் காட்டுகினம் முன்னணியினர். சபாஷ், சரியான அரசியல் போட்டி.

**திருவான மலையின்** நகரத்தின் சூரியருக்கும் தலைகால் தெரியேல்லை. மாகாணத்தின் சபை உயரதிகாரிகள் சிலரை 'மண்டையில் போடுவேன்' எண்டு மிரட்டுவதுதான் அவரது வாடிக்கையாம். சமீபத்தில் கலாசார அதிகாரி ஒருவர் விழா அழைப்பிதழை தன்னிடம் நேரில் தரவில்லை எண்டு 'சூரியர்' துள்ளினாராம். இவரது வண்டவாளம் என்ன, வாய் நீளம் என்னவென்று தெரிந்த அதிகாரி 'ப்பூ' எண்டு அலட்சியம் செய்துவிட்டார். இறுதியாக இப்போது கடைசி ஆயுதத்தைக் காட்டி மிரட்டுகிறாராம். "அந்த அதிகாரியின் வீட்டுமுன்பாக குப்பையைக் கொட்டுவேன்." என்கிறாராம்! அதுசரி, யார் யாரிடம் என்ன இருக்கிறதோ அதைத்தானே கொட்டலாம். பணம் இருப்பவன் பணத்தை தானமாகக் கொட்டுவான், நல்ல மனம் இருப்பவனோ அன்பைக் கொட்டுவான், அறிவு இருப்பவன் நல்ல யோசனைகளைக் கொட்டுவான்.. சூரியரும் தன்னிடம் எது அதிகமாக இருக்கிறதோ அதைத்தான்.. ஹா ஹா ஹா.

**இந்தியப் பத்திரிகைகள்** சிலவற்றில் நம் நாட்டுச் செய்திகள் சிரிப்பாக இருக்கும். ஓமந்தை என்றால் ஏதோ பெரிய நகர் எண்டு நினைத்து சமீபத்தில் செய்தி போட்டார்கள்: "பிரதான நகர் வீழ்ந்தது". அவர்களைச் சொல்லி என்ன பயம்? ஓமந்தைவரை படை செல்ல முன்னரே "காடுகளை ஊடுருவிச் செல்லும் படைகளை தடுத்து சண்டை" எண்டு உள்ளூர் செய்திகளும் சொல்லின. ஓமந்தைவரை காடே இல்லை- செய்திகளில் முளைத்தது எப்படி? ரொம்பத்தான் குழப்புகிறார்கள்.

தமிழக அரும் கவிஞர்களுள் ஒருவர் வல்லிக்கண்ணன். அவரது கவிதையில் இருந்து சொட்டும் ஒரு துளி இது:

"வெள்ளம் பெருகி ஓடினும்
நாய் நக்கியே குடிக்கும்;
வெள்ளமாய் ஒளி
வெளியை நிறைக்கிலென்?
உள்ளக் குகையில்
இருட்டே இருந்தால்
உலகமும் இருளாம்.."



படிப்பகம்

www.padippakam.com

## கொள்ளையும்-கண்டுபிடிப்பும்

நிதிக்கையாடல் மற்றும் இயக்க விரோத நடவடிக்கைகள் காரணமாக மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட விருந்த கிருபாகரன் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிதியமைச்சராக இருந்த விந்தை பற்றி கடந்த வாரம் கூறியிருந்தேன்.

புலிகள் அமைப்பினருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கும் இடையே கிழக்கில் நடைபெற்ற மற்றொரு சுவாரசியமான சம்பவத்தைக் இந்தவாரம் கூறுவதாக தெரிவித்திருந்தேன்.

இயக்க மோதலுக்கு முற்பட்ட காலத்தில் நடைபெற்ற சம்பவம் இது.

தனியார் வீடொன்றில் கொள்ளை நடந்திருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். இடமும், புலிகளிடமும் முறையிடப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக அந்தப் புகாரைப் பெற்றுக்கொண்டவர் கிருபாகரன்.

இரண்டு இயக்கங்களுமே கொள்ளை

181

மைக்கு புலிகளின் கடும் நடவடிக்கைகளும் ஒரு முக்கிய காரணம் எனலாம்.

**யாழ் குடாநாட்டை கைப்பற்றிய இந்தியப் படையினர் மாங்குளம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய வன்னி நிலப் பகுதிகளையும் கைப்பற்றி நிலைகொண்டனர்.**

பரா கொமாண்டோக்களும், கூர்க்கா படையினரும் வன்னிப் போரில் முக்கிய பாத்திரம் வகித்தனர்.

### வன்னி முற்றுகை

வன்னித் தரைப் பகுதிகளை கைப்பற்றி

பார்த்த மற்றத் தோழர்கள் ஓடிவந்து பயறைப் பொறுக்கத் தொடங்கினார்கள்.

பின்னர் பிரபாகரனே தன் கையால் பயறை அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். கடைசியில் அவருக்கு எதுவும் மிஞ்சவில்லை. தண்ணீரைக் குடித்துவிட்டுக் காய்ந்த வயிற்றுடன் அவர் படுத்துக்கொண்டதைக் கண்ட உறுப்பினர்கள் நெஞ்சம் கரைந்தனர். என்று அவர் நினைவுகூர்ந்திருந்தார்.

படிப்படியாக மணலாற்றுக் காட்டுப் பகுதிக்குள் இருந்த புலிகளுக்கு தேவையான விநியோகங்கள் கிடைக்கத் தொடங்கின.

கிழக்கு மாகாணத்தோடும் காட்டு வழியூடான தரைத்தொடர்பும் விநியோகமும் புலிகள் இயக்கத்தினருக்கு இருந்தது.

கடல் வழித் தொடர்பு மூலம் தமிழ்நாட்டில் இருந்தும் உணவு மற்றும் தேவையான விநியோகங்களை புலிகள் பெற்றுக்கொண்டனர்.

மணலாற்றுக் காட்டுக்குள் சகல வசதிகளும் கொண்ட தலைமையகத்தை புலிகள்

# வன்னிக் காட்டில் பிரபாகரன் முற்றுகையிட்ட இந்தியப்படை

யர்களைப் பிடித்துத் தருவதாக ஒப்புக் கொண்டன.

**கொள்ளையில் ஈடுபட்டவர்கள் கொள்ளை நடவடிக்கையின்போது தமக்குள் ஒருவரை ஒருவர் பெயர் சொல்லி அழைத்துக் கொண்டனர்.**

**அப்படி அழைக்கப்பட்ட பெயர்கள் புலிகள் இயக்க உறுப்பினர்களின் பெயர்களாக இருந்தன.**

அதனால் புலிகள்தான் அக்கொள்ளையில் ஈடுபட்டதாக கிருபாகரனும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களும் கூறினார்கள்.

மக்கள் மத்தியிலும் அக் கதையே பரவத் தொடங்கியது. அதனால் புலிகள் இயக்கத்தினரும் கொள்ளயர்களை இனம் காணத் தீவிரமாக முயன்றனர்.

இறுதியாக கொள்ளயரில் ஒருவரை புலிகள் இயக்கத்தினர் பிடித்துவிட்டனர்.

அவருக்கு மரணதண்டனை விதிப்பதாகவும் முடிவானது. மரண தண்டனையின் பின்னர் அவரைப் புதைக்க குழி வெட்டினார்கள்.

யாருக்கு மரணதண்டனை விதிக்கப்பட இருந்ததோ அவரைக் கொண்டே குழிவெட்டினார்கள்.

குழியை வெட்டும்போதுதான் மரண பயம் அவரைப் பிடித்துக் கொண்டது.

என்னைக் கொல்லாதீர்கள். கிருபாகரன் சொல்லித்தான் கொள்ளை நடந்தது. நான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் என்று மன்றாடினார் அவர்.

அவரை ஒரு வாகனத்தில் ஏற்றிக் கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாமுக்கு சென்றனர் புலிகள்.

அங்கு கிருபாகரன் இருந்தார். அவரிடம் சென்ற புலிகள் இயக்க பொறுப்பாளர் "கொள்ளையில் சம்பந்தப்பட்டவரை பிடித்துவிட்டோம். ஆளை வாகனத்தில் கொண்டுவந்திருக்கிறோம். அவர் தன்னை உங்கள் ஆள் என்று சொல்கிறார்." என்று கூறினார்கள்.

கிருபா வாகனத்தில் இருந்தவரைச் சென்று பார்த்து விட்டு "இவர் எங்கள் ஆள் அல்ல" என்று சொல்லிவிட்டார்.

"நாங்களும் அப்படித்தான் நினைத்தோம். இவரை நாங்கள் கொண்டுபோய் மரணதண்டனை விதிக்கப்போகிறோம். குழியும் வெட்டி வைத்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம்" என்றனர் புலிகள் இயக்கத்தினர்.

உடனே கிருபாகரனின் முகம் மாறிவிட்டது. கிருபாகரனும் அவரது சகாக்களும் தனியாகச் சென்று குசு குசுத்தனர்.

பின்னர் புலிகள் இயக்கத்தினரிடம் வந்தார் கிருபாகரன்.

**"தோழர் தவறு ஒன்று நடந்து போச்சுது. இவர் எங்கள் முன்னாள் தோழர்தான். அதனால் நாங்கள் இவரை பார்த்துக் கொள்கிறோம். எங்களிடம் தாருங்கள்"** என்று கேட்டார்.

"அவர் உங்கள் முன்னாள் தோழர் என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும். கொள்ளை நடந்த இடத்திலும் சொல்லவேண்டும்" என்று புலிகள் இயக்கத்தினர் நிபந்தனை போட்டனர். அதனைக் கிருபாகரன் ஏற்றுக்கொண்டதால் தாம் பிடித்துவைத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினரை அவர்களிடமே ஒப்படைத்துச் சென்றனர் புலிகள் இயக்கத்தினர்.

### காடுகளின் பாதுகாப்பு.

நாம் இப்போது மீண்டும் 1988ம் ஆண்டுக்கு செல்லலாம்.

இந்தியப்படைக்கு எதிரான போரில் புலிகளுக்கு முல்லைத்தீவு காடுகள்தான் அடைக்கலம் கொடுத்தன.

முல்லைத்தீவு காடுகள் போராட்டத்தில் பிரதான பங்கு வகிக்கும் என்பதை பிரபாகரன் எப்போதுமே நினைவில் வைத்திருந்தார்.

அதனால் காடுகளுக்குள் களவாக மரம் வெட்டுபவர்களுக்கு புலிகள் கடும் தண்டனைகளும் விதித்துவந்தனர்.

களவாக வெட்டப்படும் மரங்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் பிடிபட்டால் மரங்களை இறக்கிவிட்டு லொறிகளை தீயிட்டுக் கொளுத்துமாறும் பிரபாகரன் உத்தரவிட்டிருந்தார்.

வன்னிக் காடுகள் குறிப்பாக முல்லைத்தீவு காடுகள் பாதுகாக்கப்பட்ட

நிலைகொண்டபின்னர் பிரபாகரனின் பிரதான முகாமை காட்டுக்குள் சென்று நிர்மூலம் செய்வதுதான் இந்தியப் படைத் தளபதிகளின் திட்டமாக இருந்தது.

பிரபாகரன் மணலாற்றுக் காட்டுப் பகுதியில் அலம்பில் என்னும் இடத்தில்தான் பிரதான முகாம் அமைத்து இருக்கிறார் என்று இந்தியப்படையினருக்கு தகவல் கிடைத்திருந்தது.

**காட்டுப் பகுதியை தாம் படிப்படியாக சுற்றிவளைப்பதால் பிரபாகரன் இந்தியப் படையுடன் சமாதானத்துக்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை என்று நினைத்தது இந்திய அரசு.**

முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய இடங்களில் அப்போது இலங்கை அரசின் இராணுவ முகாம்களும் இருந்தன. மாங்குளம் இராணுவ முகாம் பாரியது.

இந்தியப் படையினரும், இலங்கை இராணுவத்தினரும் வன்னி நிலப்பரப்பில் பரவலாக நிலைகொண்டிருந்ததால் மணலாற்றுக்காட்டுக்குள் இருந்த பிரபாகரனும் புலிகளும் முற்றுகைக்குள் சிக்கிவிட்டனர் என்றே நம்பப்பட்டது.

காட்டுக்குள் சில காலம் உணவுப் பொருட்களுக்கு பஞ்சம் நிலவியது. புலிகள் அமைப்பின் தளபதிகளில் ஒருவரான அன்பு அப்போது நடைபெற்ற ஒரு சம்பவத்தை பின்னர் நினைவு கூர்ந்தார்.

"காட்டுக்குள் உண்பதற்கு எதுவும் கிடைக்காமல் தோழர்கள் பட்டினியில் வாடியபோது யாரோ ஒரு உறுப்பினர் எங்கிருந்தோ பயறு கொண்டுவந்தார். அதனை அவித்துச் சாப்பிட ஏற்பாடுகள் நடந்தன. பசியோடும், ஆவலோடும் எல்லோரும் காத்துக்கொண்டிருந்த வேளையில் எதிர்பாராதவிதமாக சட்டி உடைந்து பயறும் அடுப்பில் கொட்டி நெருப்போடும் சாம்பலோடும் கலந்துவிட்டது.

சோதனைக்குமேல் சோதனையாக நடந்த இந்நிகழ்ச்சி அனைவரையும் திடுக்கிடவைத்தது. மனம் கலங்கவைத்தது.

ஆனால், பிரபாகரன் கொஞ்சமும் கலங்காமல் அடுப்பருகே மண்டியிட்டு அமர்ந்தார். தீயை அணைத்தார். சாம்பலோடு கிடந்த பயறுவகையைக் கைகளால் பொறுக்கி ஊதி மற்றொரு பாத்திரத்தில் போட்டார். கொஞ்சம் கூட சலிப்படையாமல் அவர் செய்ததைப்



மணலாற்றுக் காட்டுக்குள்

நிறுவிக் கொண்டனர். அங்கிருந்து வடக்கு-கிழக்கில் இந்தியப் படைக்கு எதிரான போரை நெறிப்படுத்திக் கொண்டிருந்தார் பிரபாகரன்.

### புலி வேட்டை

புலிகளின் கதை இனிமேல் முடிந்தது.. புலிகள் மிக மோசமாக பலவீனமாகி விட்டனர்

## "துருப்பிடித்த ரிவோல்வர்"



"எம்முடைய இயக்கம் ஆரம்பக் காலகட்டத்தில் ஒரே ஒரு துருப்பிடித்த ரிவோல்வரைச் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது.

எம்முடைய தலைவர் முதன் முதலில் ஒரு துரோகியைக் கொல்வதற்காக அவரிடம் இருந்ததும் துருப்பிடித்த துப்பாக்கிதான்.

ஆனால் அவரிடம் தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்பன தாராளமாக இருந்தன. அந்த விடாமுயற்சி காரணமாகவே இன்று உலகம் வியக்கும் வண்ணம் எம்மை உயரச் செய்தது.

ஆயுதங்களை இயக்குவது பற்றிக்கூட சினிமாப் படங்கள் ஊடாகவும், புத்தகங்கள் ஊடாகவுமே நாம் படித்து அறிந்து இருக்கிறோம்.

முதன் முதலில் உப இயந்திரத் துப்பாக்கியைப் பார்த்தபோது, அதுவும் இராணுவத்தினரின் கைகளில் சற்றுத் தூரத்தில்தான் பார்த்திருக்கிறேன். அதன் பக்கவாட்டாக அமைந்துள்ள காற்றுச் செல்லும் துளைகள் ஊடாகவும் குண்டுகள் பாயுமோ என்ற சந்தேகம் கூட என்னுள் இருந்தது." இப்படிக் கூறியவர் புலிகளின் முன்னாள் யாழ் மாவட்ட தளபதி மறைந்த கிட்டு.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல்தொடர்

அற்புதன் எழுதுவது



1983க்கு பின்னர் உறுப்பினர் திரட்டலில் ஏற்பட்ட பாரிய வீக்கமும், இயக்க வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருந்த திறமையான உறுப்பினர்களிடம் முடிவெடுக்கும் அதிகாரங்கள் இல்லாதிருந்தமையுமே ஈ.பி.ஆர்.எல்.எஃப் படிப்படியாக சரிவை எட்டக் காரணமாக இருந்தது.

### வெளிப்பகட்டு

1983க்கு பின்னர் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூலம் பரபரப்பையும், ஆரவாரத்தையும் காட்டும் ஒரு அமைப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் இருந்தது.

அந்த ஆரவாரத்தை பார்த்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஒரு பலமான கட்சி. புலிகளுக்கு மாற்றான சக்தி என்றெல்லாம் நம்பியிருந்தனர். ஆனால் ஒரே இரவுக்குள் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பை புலிகள் தடைசெய்து முடித்தபோது அந்தப் பிரமைகள் தகர்ந்தன.

பெரும் அலுவலகங்கள், எங்கும் முகாம்கள், வாகன வலங்கள், வாய்வீச்சுக்கள் என்று வெளிப்பகட்டில் காட்டிய அக்கறையை உட்கட்டமைப்பில் காட்ட முடியாதபோது, உட்கட்டமைப்பிலே உறுதிவாய்ந்த புலிகளை எதிர்கொள்ள முடியாமல் ஒரே இரவில் தகர்ந்தது.

இது ஒரு வரலாற்றுப் படிப்பினையாகும்.

ஆயினும் தனது வீழ்ச்சியில் இருந்தும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பது இந்தியப் படையோடு அந்த இயக்கத்தினர் வந்த போது மேற்கொண்ட அணுகுமுறைகளில் தெரிந்தன.

இயக்கத்தில் ஒழுக்க மீறல்கள் காரணமாக விலக்கப்பட்டிருந்தவர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது.

மட்டக்களப்பில் கிருபாகரன் போல யாழ்ப்பாணத்திலும் பல கிருபாகரன்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டது.

**அசோகா ஹோட்டலில் பத்மநாபாவைச் சென்று சந்தித்தால் எத்தனை மோசமானவர்களாக இருப்பினும் அவர்கள் பாபவிமோசனம் பெற்றுவிட்டார்கள் என்று அர்த்தம்.**

என்று இந்தியப் படையினர் மட்டுமல்ல, ஏனைய தமிழ் இயக்கங்களும் அவ்வாறே நினைத்தன.

அதனால் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இந்தியப் படைக்கும், இந்திய அரசுக்கும் விசுவாசமாக நடந்து நல்ல பெயர் எடுப்பதில் முக்கியமாக மூன்று இயக்கங்கள் போட்டி போட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்,- ஈ.என்.டி.எல்.எஃப், ரெலோ ஆகியவைதான் அந்த மூன்று இயக்கங்கள்.

போட்டியில் முன்னணியில் நின்றது ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புத்தான்.

யாழ் நகரில் உள்ள அசோகா ஹோட்டலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தினர் தமது அலுவலகத்தை திறந்தனர். அக் ஹோட்டலுக்கு அருகே இந்தியப் படையின் பெரிய முகாம் ஒன்று இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட அந்த இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் அசோகா ஹோட்டலில் வந்து தங்கிக்கொண்டனர்.

அங்கிருந்து கொண்டு முன்னாள் உறுப்பினர்களைத் திரட்டத் தொடங்கினார்கள்.

**பத்மநாபா இயக்கத்துக்கு ஆள் திரட்டுவதில் எந்தவொரு அளவு கோலையும் வைத்திருந்தவரல்ல. கட்டுப்பாடு விடயத்திலும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தவரும் அல்ல.**

அவ்வப்போது தோன்றும் தேவைகளுக்கு ஏற்ப யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்வலாம் என்பதுதான் பத்மநாபாவின் உறுப்பினர் சேர்ப்புக்கான விதியாக இருந்தது.

உறுதியான உறுப்பினர்களை பயிற்றுவிப்பது, கட்டுப்பாட்டை மீறும் உறுப்பினர்களை தண்டிப்பது, தவறான சக்திகளை இயக்கத்தின் உள்ளே கொண்டுவந்து இயக்க அமைப்புக்களை பலவீனப்படுத்தாமல் இருப்பது போன்றவை ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்க விதிகளாக இருந்த காலமும் உண்டு.

அக் காலகட்டத்தில்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப் என்பது ஏனைய இயக்கங்களில் இருந்து வேறுபட்ட புரட்சிகர அமைப்பாக நோக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் **வளர்ச்சி** அதே **திசையில் சென்றிருக்குமானால் புலி களுக்கு சமமான ஆனால் வித்தியாசமான புரட்சிகர அமைப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் இன்று விளங்கியிருக்கும்.**

முன்னர் என்ன பாபம் செய்திருந்தாலும் அவர்களுக்கு உறுப்பினர் தகுதி வழங்கப்பட்டு கையில் ஆயுதம் தரப்பட்டது.

"புலிகள் பாசிஸ்டுக்கள். அவர்களை ஒழிக்க போராட வேண்டும்" என்றனர். தாம்கூறிய பாசிஸ்டுக்களை ஒழிக்க சமூகவிரோதிகளை வளர்த்துவிடலாமா என்று நினைத்துப் பார்க்க நேரம் இருக்கவில்லை.

யாழ்ப்பாணமெங்கும் ஒரே பரபரப்பு. ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பை சுருக்கமாக ஈப்ஸ் என்று அழைத்தனர் மக்கள்.

'ஈப்ஸ் வந்துவிட்டது. அசோகா ஹோட்டலில் குவிந்து நிற்கிறார்கள். இனி ஈப்ஸின் காலம்தான். புலிகள் தலையெடுக்கவே முடியாது' என்றெல்லாம் எங்கும் ஒரே பேச்சு.

யாழ்ப்பாணத்தில் புலி வேட்டையில் இறங்கியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

உண்மையிலேயே பத்மநாபா சாதாரண மக்களை துன்புறுத்தும் நடவடிக்கைகளை மனதார வெறுக்கும் ஒரு தலைவராகவே இருந்தார்.

ஆனால் அவர் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள், அவரால் பாப விமோசனம் வழங்கப்பட்டவர்கள் பத்மநாபாவுக்கே தண்ணிகாட்டக் கூடியவர்களாக இருந்தனர்.

விளைவு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினர்மீது வெறுப்புக் கொண்டிருந்த மக்கள் கூறினர்: "இந்தியப் படையினர் பரவாயில்லை. ஈப்ஸ்தான் மோசமப்பா!"

மக்கள் நினைத்தது சரிதான் என்பதற்கு உதாரணமாக மட்டுமல்லாமல், யாருமே நினைத்தும் பார்க்க முடியாத சில கோரச் சம்பவங்கள் அரங்கேற ஆரம்பித்தன.

நெஞ்சை உலுக்கும் அச் சம்பவங்கள் பற்றி வரும் வாரம் கூறுகிறேன்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

# வெற்றி நிச்சயம் யாருக்கு?

## அலசுவது- இராஜதந்திரி



'**வெ**ற்றி நிச்சயம்' என்று பெயரிட்டு வன்னிக்காடுகளுக்குள் ஊடுருவும் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் பதினைந்தாயிரத்துக்கும் அதிகமான படைவீரர்கள் கனரக ஆட்டிலறிப் பீரங்கிகள், யுத்த டாங்கிகள் சகிதம் விமானப்படை உதவியுடன் இந்த இராணுவ நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

வவுனியாவுக்கு வடக்கே இருந்து இரு அணிகளும், வடகிழக்கே வெலிஓயாப்பகுதியிலிருந்து மற்றொரு அணியும் 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கையின் பிரதான நகர்வுகளை ஆரம்பித்தன.

**வன்னியில் ஆரம்பமாகியுள்ள யுத்தம் எல்.ரி.ரி.ஈ.யினரை முழு அளவில் பலவீனமாக்குவது என்ற வகையிலேயே ஆரம்பமாகியுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.**

வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது முதல் வன்னி வனாந்தரங்களே எல்.ரி.ரி.ஈ.யினரின் முக்கிய தளங்களாக இருந்து வருகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டை எல்.ரி.ரி.ஈ. தம்வசப்படுத்தி வைத்திருந்தபோதுகூட அவ் இயக்கத்தின் தலைவர் வன்னிக்காடுகளுக்குள்ளேயே பெரும்பாலும் இருப்பதுண்டு, இதுதவிர இரு வருடங்கள் இந்தியப் படையினர் வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்தபோதுகூட திரு.பிரபாகரன் வன்னியிலேயே வாசஞ்செய்திருந்தார்.

எனவே தற்போதைய படையெடுப்பு எல்.ரி.ரி.ஈ. இயக்கத் தலைவரையே குறிவைத்ததாகவும் அமைந்துள்ளது.

இருந்தபோதிலும் இந்த இலக்கை அடைவதில் யாருக்கு வெற்றி நிச்சயம்? என்பதே பிரதான கேள்வியாகவுள்ளது.

மிகவும் அடர்த்தியான வன்னிக் காடுகளுக்குள் ஊடுருவுவதென்பது எளிதான காரியமல்ல.

எல்.ரி.ரி.ஈ.யினர் கடந்த ஒரு வருடகாலமாகவே இத்தகையதொரு பெருந்தாக்குதலை நன்கு எதிர்பார்த்தே இருந்திருப்பர்.

படையினரது ஊடுருவல்கள் ஏற்படக்கூடிய பகுதிகளைக்கூட அனுமானித்து வைத்திருந்திருப்பர்.

**எனவே கடந்த ஆண்டில் யாழ்குடாநாட்டினுள் இலகுவாக ஊடுருவியதைப்போல எல்.ரி.ரி.ஈ. இலக்குகளைத் தேடிச்சென்று தாக்குவதென்பது தற்போதைய கானக யுத்தத்தில் கடினமான காரியமாகவே இருக்கும்.**

ஓரிருமாதங்களுக்கு முன்னர் மன்னார்ப் பகுதியையும், வவுனியாவையும் இணைக்கும் போக்குவரத்து வீதியைக் கைப்பற்றும் விதத்தில் 'எடிபல' இராணுவ நடவடிக்கை நடத்தப்பட்டிருந்தது.

இதில் இருதரப்புக்குமே சேதம் அதிகம் ஏற்படவில்லை. அத்துடன் மன்னார்-வவுனியாப்பாதையைத் திறக்கும் நோக்கத்தில் படையினர் வெற்றியையும் ஈட்டியிருந்தனர்.

**இந்நிலையில் தற்போதைய யுத்தமும் இரு நோக்கங்களை மையமாகக் கொண்டதாக இருக்கின்றது. வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதும், எல்.ரி.ரி.ஈ.யினரைப் பலவீனப்படுத்துவதுமே அவ்விரு நோக்கங்களுமாகும்.**

## தன் மீதான அழுத்தங்களை ஏறிட்டுப் பார்க்க வேண்டிய எல்.ரீ.ரீ.ஈ.

சிங்களத்தில் 'ஜயசிக்குறுய்' (வெற்றி நிச்சயம்) என்று பெயரிடப்பட்ட தற்போதைய இராணுவ நடவடிக்கை ஓமந்தைப் பிரதேசத்தை எட்டியதும் பலத்த பதிலடிக்குள்ளாகியிருந்தது. இதில் ஏராளமான படையினர் கொல்லப்பட்டும், காயமடைந்துமிருந்தனர்.

வவுனியாவின் தாண்டிக்குளத்திற்கு அடுத்ததாக வவுனியாவில் இருந்து பத்துகிலோமீட்டர் தூரத்தில் உள்ள பிரதேசமே ஓமந்தையாகும்.

ஓமந்தைப் பிரதேசத்தைத் தாண்டியதும் இரு புறங்களும் அடர்ந்த காடுகளையுடைய நெடுஞ்சாலையையே படையினர் காணமுடியும்.

இந்த நெடுஞ்சாலையைக் கைப்பற்றி யாழ்குடா நாட்டுக்கும் வவுனியாவுக்குமிடையிலான தரைவழிப்பாதையைத் திறப்பதில் படையினர் குறியாக இருப்பர் என்பதை எல்.ரி.ரி.ஈ.யினர் நன்கு அறிந்து வைத்திருப்பர்.

எனவே அந்நெடுஞ்சாலையை பல்வேறு தடைகளாலும் தடைசெய்து படையினரின் உத்தேச பயணத்தை முறியடிக்கும் உத்திகளை எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்டிருப்பர் என்பதையும் எதிர்பார்க்க முடியும்.

எல்.ரி.ரி.ஈ.யினரின் கடுந் தாக்குதல்களையும் எதிர்கொண்ட நிலையில் அந்நெடுஞ்சாலைத் தடைகளையும் படையினரால் எளிதில் அகற்றிவிட முடியாததாகவே இருக்கும்.

இந்நிலையில் எடுத்த மாத்திரத்தில் எதிர்ப்புகள், இழப்புகள் மத்தியில் நெடுஞ்சாலையைச் சுத்திகரிக்கும் பணியை முன்னெடுப்பதை விடுத்து படிப்படியான முன்னேற்றத்தையே படையினர் திட்டமிட முடியும்.

ஓமந்தையைக் கைப்பற்றி அதனோடிணைந்த ஏனைய பகுதிகளில் தமது நிலைகளைப் பலப்படுத்திய பின்னரே அடுத்தகட்ட நகர்வுக்கு படையினர் திட்டமிடுவர் என எதிர்பார்க்க முடியும்.

அதே சமயம் வெலி ஓயாவில் இருந்து நகரும் மற்றைய படையணி, வன்னியில் இருந்தும் நகரும் மற்றய படையணி ஆகியன தொடர்ந்து எல்.ரி.ரி.ஈ.யினரது இலக்குகள், மற்றும் இலக்குகளாக அனுமானிக்கப்பட்ட பகுதிகள் மீது தமது தாக்குதல்களை நடத்தியவையாகவே இருக்கும்.

எல்.ரி.ரி.ஈ.யினரைப் பொறுத்தவரை வன்னிப்பகுதியில் தம்மைத் தப்பவைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கவே காணப்படும்.

ஏனெனில் கடந்த ஆண்டுகளில் வன்னிப் பிரதேசம் அவர்களது பிரதான தளமாகவும், மறைவிடமாகவும் விளங்கியிருந்தது.

யாழ்குடா நாட்டைத் தமது பகிரங்க நடவடிக்கைகளுக்குரிய பிரதேசமாகவும், வன்னிப் பகுதியை அந்தரங்க நடவடிக்கைகளுக்குரிய பிரதேசமாகவுமே எல்.ரி.ரி.ஈ.யினர் வைத்திருந்தனர்.

ஆனால் தற்போது நிலைமை வேறு; யாழ்ப்பாணக் குடாநாட்டைப் படையினரிடம் முற்றாக இழந்த நிலையில், வன்னியிலேயே நிரந்தரமாகத் தஞ்சமடைய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு எல்.ரி.ரி.ஈ.யினர் உள்ளாகியுள்ளனர்.

ஆயுதப் படையினரும் படிப்படியாக தமது நிலைகளைப் பலப்படுத்தி விஸ்தரிக்கும் பட்சத்தில் எல்.ரி.ரி.ஈ.யினரால் வன்னியில் நெருக்கடியான சூழ்நிலைகளையே எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை வன்னிப் பகுதிக்குள் கடத்திவர எல்.ரி.ரி.ஈ.யினர் முனையலாம். ஆனால் இன்றுள்ள நிலையில் அத்தகையதொரு முயற்சி பெருஞ் சிரமமானதாகவே இருக்கும்.

யுத்தமொன்று மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தருணத்தில் கிழக்கிலங்கைக் காடுகளிலிருந்தும் உதவிகளை நினைத்த மாத்திரத்தில் பெறுவது கடினமானதாகவே இருக்கும்.

கிழக்கில் காடுகளை அண்டிய பல்வேறு கிராமங்கள் இன்றுங்கூட எல்.ரி.ரி.ஈ.யினரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

ஆயினும் கிழக்கிலும் தமது நிலைகளைப் பலப்படுத்த வேண்டிய நிலையில் அங்கிருந்தும் இன்றைய சூழலில் அத்தியாவசியப் பொருட்கள், ஆளணிகளை எல்.ரி.ரி.ஈ.யினர் வடக்கிற்கு உடனுக்குடன் கொண்டு வரமுடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

வடக்கே நன்கு பலமுற்றிருந்த நாட்களில் தமிழ்நாட்டிலிருந்து தமக்குத் தேவையானவற்றை எல்.ரி.ரி.ஈ.யினர் பெற்று வந்தனர். ஆனால் இன்று அத்தகையதொரு நிலை காணப்படவில்லை.

**இந்தியாவின் தற்போதைய இந்தர்குமார் குஜ்ரால் அரசாங்கம் இலங்கையின் சந்திரிகா அரசுடன் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளது.**

**இது தவிர கலைஞர் கருணாநிதி தலைமையிலான இன்றைய தமிழக மாநில அரசு எல்.ரி.ரி.ஈ.யினரிடமிருந்து தன்னை வெகு தொலைவில் வைத்திருக்கவே விரும்புகின்றது.**

அண்மையில் கூட தமிழக சட்டசபையில் உரை நிகழ்த்திய முதலமைச்சர் மு.கருணாநிதி எல்.ரி.ரி.ஈ.யிருக்கு எவ்விதத்திலும் தனது அரசு ஆதரவு வழங்கமாட்டாது எனத் தெரிவித்திருந்தார்.

ஒரு காலத்தில் 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்று இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக முழங்கிய கலைஞர் மு. கருணாநிதி இன்று இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலைபோடுவதை ஓர் ஆபத்தான விடயமாகவே கருதுவதைக் காணமுடிகின்றது.

தனது சொந்த அரசியல்லாபங்களையே கலைஞர் கருணாநிதி முதன்மைப்படுத்திய நிலையில் தமிழகத்திலிருந்து முற்று முழுதான தமது இராணுவ நிலைப்பாட்டுக்கு ஆதரவு எதனையும் எல்.ரி.ரி.ஈ.யினரால் எதிர்பார்க்க முடியாது.

**இந்நிலையில் கடந்த 17 வருடகாலத்தில் ஆயுதப்போராட்டத்தையே பிரதானமாகக் கொண்டிருந்த எல்.ரி.ரி.ஈ. அமைப்பு தனது தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள தன் சொந்தக் கால்களில், சொந்த பலத்துடன் மட்டுமே இயங்கவேண்டியுள்ளது.**

அரசியல் ரீதியாக வலுப்பெறக்கூடிய சந்தர்ப்பங்களை எல்.ரி.ரி.ஈ. அமைப்பு பெரிதும் புறக்கணித்தே வந்துள்ளது.

கடந்த காலங்களில் இராணுவ ரீதியாகப் பெரும் வெற்றிகளை ஈட்டி இலங்கையின் ஆட்சியாளர்களையும், சர்வதேச சமூகத்தையும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு வியப்பில் ஆழ்த்தியிருந்தது.

ஆனால் அவ்வெற்றிகள் மூலமாக தகுந்த அரசியல் நிலைப்பாடுகளைக் கட்டி எழுப்ப எல்.ரி.ரி.ஈ. தவறியிருந்தது.

**குறிப்பாக முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்ப்பட்டமைகூட எல்.ரி.ரி.ஈ. தன் இராணுவ வலிமைமீது கொண்டிருந்த அளவுக்கதிகமான நம்பிக்கைக்கும், நட்பு சக்திகளை உருவாக்கும்அரசியல் ரீதியான அணுகுமுறையில் ஈடுபாடு இல்லாதிருந்தமையுமே பிரதிபலித்தது.**

இந்தியப் படைக்கும், எல்.ரி.ரி.ஈ. இனருக்கும் இடையே நடைபெற்ற யுத்தம் எல்.ரி.ரி.ஈ.யின் இராணுவ வலிமைக்கு சான்றாக அமைந்தது.

எல்.ரி.ரி.ஈ. இனரை தான் குறைவாக மதிப்பிட்டதின் தவறை ராஜீவ்காந்தியும் பின்னர் உணர்ந்தே இருப்பார். அவ்வாறான நிலையில் தந்திரோபாய ரீதியாக ராஜீவுடன் அரசியல் நட்பை எற்படுத்தியிருக்க முடியும்.

ஆயினும் தமது இராணுவ வலிமையில் கொண்டிருந்த நம்பிக்கை காரணமாக ராஜீவ்மீது எல்.ரி.ரி.ஈ.யினர் கைவைத்தனர்.

அரசியல் ரீதியான அணுகுமுறையை தமது இராணுவ நிலைப்பாடு சார்ந்த ஒன்றாகவே மேற்கொண்டமைதான் எல்.ரி.ரி.யின்மீதான இன்றைய அழுத்தங்களுக்கு முக்கிய காரணமாகிறது.

குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றிகளை ஈட்டிய எல்.ரி.ரி.ஈ. அமைப்பு இன்றைய சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தனக்கு நேர்ந்துள்ள அழுத்தங்களை ஏறிட்டுப் பார்க்கவேண்டியுள்ளது.

எனவே, தமது பலத்தைத் தக்கவைக்க அரசியல் ரீதியான அணுகுமுறைகளையும் முன்னெடுப்பது எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு இனி வரும் காலங்களில் ஓர் உந்துசக்தியாக இருக்க முடியுமென்றே நம்பமுடியும். இதன்மூலமே எல்.ரி.ரி.ஈ. தனது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

---

# கூட்டணித் தலைவருக்கு ஒரு அவசர மடல்

**ஐயா சிவா அவர்களுக்கு,**

பணிவன்புடன் எழுதிக்கொள்ளும் மடல் அல்லது கடிதம்.

வன்னியில் யுத்தம் வெடித்ததும் வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாக உங்களிடமிருந்து கிளம்பி வந்த அறிக்கையைக் கண்ணுற்றேன்.

படையினர் வன்னியில் ஷெல்களை ஏவுகிறார்கள். விமானக் குண்டுகளை வீசுகிறார்கள்.

நீங்களும், தமிழ்க்கட்சிகளும் கொழும்பில் இருந்து தமிழ் மக்களை நோக்கி அடிக்கடி அறிக்கைகளை ஏவிவிடுகிறீர்கள்.

யுத்தம் ஆரம்பித்தால் மறுநாள் யுத்த நிறுத்தம் கோரி தமிழ்க் கட்சிகள் அறிக்கை விடுவது என்பது உங்களுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் ஒரு அரசியல் மரபுபோல ஆகிவிட்டது.

யுத்த நிறுத்தம் கோருவது கூடாது என்று சொல்லவில்லை. கோருங்கள். உரத்துக் கோருங்கள்!

ஆனால் பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவிக்காதீர்கள் என்றுதான் சொல்கிறேன்.

வீட்டைக் கொளுத்த கொள்ளியையும் எடுத்துக் கொடுத்துக் கொண்டு, வீடு பற்றி எரியும்போது 'தீயை நிறுத்து' என்று எங்கள் செவிகளுக்கு மட்டும் கேட்கக்கூடியதாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதுதான் பொறுக்கவில்லை.

"வன்னிப்போர் சமாதான முயற்சியை தவிடு பொடியாக்கும்" என்று கூறியிருக்கிறீர்கள்.

ஐயா அவர்களே! சமாதான முயற்சியை தவிடு பொடியாக்குவதாக அரசுமீது நீங்கள் அதிகம் ஆத்திரப்பட்டு விட்டீர்கள். பயமாக இருக்கிறது. அரசு ஆட்டம் கண்டு விடப்போகிறதோ என்று பயமாக இருக்கிறது.

ஆனால் அரசுமீது உங்கள் ஆத்திரம் அர்த்தமில்லாதது என்பதை தாழ்மையுடன் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

சமாதான முயற்சியில் சமீபகாலமாக அரசு சற்றும் ஆர்வம் காட்டியதும் இல்லை. துளியளவுகூட ஈடுபாடு காட்டியதும் இல்லை.

ஆக, அப்படி ஒரு முயற்சியே இல்லாத போது எப்படி தவிடு பொடியாக்க முடியும்?

சமாதான முயற்சி என்று தாங்கள் நினைப்பதும், நிரூபிக்க விரும்புவதும் எதனை?

மிஸ்டர் பொக்ஸ் பிரிட்டிஷ் தேர்தல் பிரசார சூட்டுக்காக இங்கு வந்து நடத்தினாரே ஒரு நாடகம், அதுவா?

உலக அரங்கில் தத்தம் 'இமேஜை' காப்பாற்ற அரசும், எதிர்க்கட்சியும் 'புரிந்துணர்வு கண்டோம்' என்று அரங்கேற்றிய நாடகத்தில் பொக்ஸ் கௌரவ நடிகராக நடித்ததை நீங்கள்கூட அறிக்கைவிட்டு பாராட்டினீர்களே அதுவா?

'புரிந்துணர்வு நாடகம்' மூலமாக சர்வதேச மத்தியஸ்த கோரிக்கையை அரசு வெட்டியாடியதே.... அதுவா?

'அரசு-எதிரணி புரிந்துணர்வு புலிகளுடன் பேசுவதற்கானதல்ல' என்று அமைச்சர் கதிர்காமர் சொன்னதுகூட காதில் விழாததுபோல 'அரசும், எதிர்க் கட்சியும் புலிகளுடன் பேச உடன்பட்டதை வரவேற்கிறோம்' என்று ஐயா விட்டீர்கள் பாருங்கள் ஒரு அறிக்கை ஓ.. அதுவா?

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற 'எடிபல' நடவடிக்கையை அரசு நடத்தியது. உள்ளூராட்சித் தேர்தல் பிரசார கூட்டங்களில் யுத்தத்தில் வெல்வோம் என்று ஜனாதிபதி சூளுரைத்தாரே... ஓ.. அதுவா... ஓ.அதுவா?

அப்படியிருந்தும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தரப்பை ஆதரிக்குமாறு அறிக்கை விட்டீர்களே ஓ.. ஓ. அதுவா?

எது ஐயா சமாதான முயற்சி? இதெல்லாம் சமாதான முயற்சிகள் என்று நீங்கள் உளமார நம்பியிருப்பீர்கள் என்றால், உங்கள் அரசியல் அனுபவம், உங்கள் சட்ட அறிவு, உங்கள் சாணக்கியம் போன்றவை எல்லாமே கேள்விக்குள்ளாகின்றன.

ஒரு காலத்தில் உங்களை பெரும் தலைவர்களில் ஒருவராக நினைத்ததற்காக நானும் வெட்கப்படுகிறேன்.



யுத்த வியூகங்களை சமாதான வியூகங்கள் என்று கற்பனை பண்ணுமளவுக்கா உங்கள் அரசியல் ஞானம் மங்கி விட்டது?

அப்படி இல்லை, உங்கள் அரசியல் ஞானம் மங்கவில்லை என்றால், நீங்கள் தெரிந்தே தமிழ் மக்களை ஏமாற்றுகிறீர்கள். அறிந்தே அரசின் யுத்த வியூகங்களுக்கு துணைபோனீர்கள் என்றுதான் அர்த்தமாகும்!

வன்னி யுத்தத்துக்கான படைக்குவிப்பு ஏறக்குறைய ஒருமாதகாலமாக நடந்து கொண்டிருந்தது உங்களுக்கு தெரியாமல் இருந்திருக்காது.

படைக்குவிப்பையும் சமாதான முயற்சிக்கான ஒத்திகை என்று நினைக்குமளவுக்கு நீங்கள் போயிருக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எவக்குண்டு.

உண்மையிலேயே யுத்தத்தை விரும்பாவிட்டால் நீங்கள் மூத்த தலைவர், அரசியல் விவேகமானவர் என்ன செய்திருக்க வேண்டும்?

ஏனைய தமிழ்க் கட்சிகளையும் அழைத்து யுத்த வியூகத்துக்கு எதிரான அரசியல் வியூகம் வகுத்திருக்க வேண்டும்.

ஏனெனில் வன்னி யுத்தம் புலிகளைப் பலவீனப்படுத்தும் யுத்தம் மட்டுமல்ல, தமிழர் தரப்பின் பேரம் பேசும் பலத்தையும் பலவீனமாக்கும் யுத்தமாக பரிமாணம் கொள்ளக்கூடிய யுத்தமாகும்.

தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும், எதிர்க்கட்சியுடனான சந்திப்புக்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருப்பதும், தங்கள் விளம்பரங்களுக்காக அந்த சந்திப்புக்களையும், விவாதங்களையும் ஆரோக்கியமாக காட்ட முற்படுவதும்தான் இன்றைய யுத்த வியூகங்களுக்கு அரசியல் நியாயம் கற்பிக்க அரசுக்கு உதவுகிறது.

அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் ஒருபுறத்தில் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருப்பதுபோன்ற தோற்றத்தை வெளியுலகம் முன்பாக காண்பிக்கவும் நீங்களும், தமிழ்க் கட்சிகளும் துணைபோய்க் கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் இன்றுவரை தமிழ் மக்களின் போராட்டம் எந்த அடிப்படை நோக்கங்களை ஈடேற்ற ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த அடிப்படை நோக்கங்கள் பற்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் விவாதிக்கப்படவில்லை. எதிர்க்கட்சியுடனான சந்திப்பிலும் பேசப்படவில்லை.

இறுதியாகப் பேசலாம் என்கிறார்கள்? எப்போது பேசப்போகிறார்கள்?

புலிகளை ஒரம்கட்டிய பின்னர் பேசலாம் என்பதுதான் அவர்களின் நோக்கம்

புலிகள் பலமாக இருந்தால் நீங்களும், தமிழ்க் கட்சிகளும் அரை குறையான சில தீர்வுகளை ஏற்கத் தயக்கம் காட்டுவீர்கள்.

"புலிகள் விடமாட்டார்கள், அதுதான் எங்கள் தயக்கத்துக்கு காரணம்" என்று கூறி நழுவுவீர்கள். அதனால் புலிகளை ஒரம் கட்டிவிட்டால் பின்னர் தமிழ்க் கட்சிகளை திருப்தி செய்யலாம். முடியாவிட்டால் பலப்பிரயோகம் கூடச் செய்யலாம் என்று கருதக்கூடும்.

இதுகூட புரியாமல் கடைசியாக முக்கிய பிரச்சனைகளைப் பேசலாம் என்று கால அவகாசம் கொடுத்துள்ள தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு விவேகமா? துரோகமா?

தயவு செய்து சிந்தியுங்கள். இப்போதாவது மீனுக்கு வாலையும் பாம்புக்கு தலையையும் காட்டும் போக்கை கைவிட்டு, இதுவரைகால இழப்புக்களை விரயமாக்காமல் உரமாக்கும் முயற்சிக்கு ஏனைய தமிழ்க் கட்சிகளையும் அழையுங்கள்.

அடிப்படையான பிரச்சனைகளில் அரசினதும், எதிர்க்கட்சியினதும் நிலைப்பாடு என்ன?

முதலில் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அரசியல் தீர்வை முன்வைத்த பின்னர் அது திருப்திகரமான தீர்வாக இருந்தால் அரசின் முயற்சிகளுக்கு நாமும் தோள் கொடுத்து நிற்போம். அதற்கு முன்னர் இராணுவ அழுத்தத்தை பிரயோகிப்பதனால் அரசுடன் எந்த விடயத்திலும் ஒத்துழைக்க மாட்டோம்" என்று பிரகடனம் செய்யுங்கள்.

அதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? இல்லாவிட்டால் உங்கள் யுத்த நிறுத்த கண்டன அறிக்கைகள் கண்துடைப்பாகவே கருதப்படும்.

நன்றி வணக்கம்

**உங்கள் முன்னாள் ஆதரவாளன்**
**முத்தமிழன்**


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி 45

தருவது ரசிகன்

## பாகம் 02


பூலான்

**கடந்த வாரம்**
பாபா மஸ்தக் என்பவன் தலைமையிலான கொள்ளைக் கோஷ்டியும் தனது கோஷ்டியும் சேர்ந்து செயல்படலாம் என்று தீர்மானிக்கிறான் மல்லா. பூலானும் அந்த யோசனையை ஏற்றுக் கொள்கிறாள். பாபாவை சந்திக்க பூலானையும் அழைத்துச் செல்கிறான் விக்ரம் மல்லா
**இனி....**

பாபா மஸ்தக் பூலானைக் கண்டதும் பார்த்த பார்வையில் வியப்புத்தான் நிரம்பியிருந்தது. அதே சமயம் பாபாவின் உதடுகள் சற்றே இகழ்ச்சியாகவும் மடிந்து விரிந்தன.

"யார் இந்தப் பெண்?" என்று மல்லாவிடம் பாபா கேட்ட கேள்விகூட வேண்டா வெறுப்பான தொனியிலேயே ஒலித்தது.

"இவள்தான் பூலான் தேவி" என்றான் மல்லா. அதைச் சொல்லும்போது மல்லாவின் குரலில் இருந்த பெருமிதத்தைக் கவனித்த பாபா, "உன் காதலியா?" என்றான்.

"என் மனைவி!" என்றவன் தொடர்ந்து, "எங்கள் கோஷ்டியிலும் ஒருத்தி!" என்றபோது பாபா தன் கண்களை மறுபடியும் ஆச்சரியத்தில் அகல விரித்தான்.

"என்ன மல்லா இது? பெண்களைப் போய் எமது குழுக்களில் சேர்க்கலாமா? ஏன் இந்த விஷப் பரீட்சை? உன்னை எனக்குச் சமமான வீரன் என்று நினைத்திருந்தேன். கேவலம் ஒரு பெண்பிள்ளையை நம்பிக்கொண்டிருக்கிறாயே நீ!"

பாபா எவ்வித ஒளிவும் மறைவும் இல்லாமல் உரத்த குரலில்தான் சொன்னான். அவன் அப்படிச் சொன்னபோது அவனது ஆட்களில் சிலர் தன்னைக் கேலியாகப் பார்ப்பதையும் பூலான் கவனிக்கவே செய்தாள்.

பூலானுக்கு அவமானமாக இருந்தது. 'ஏன் இங்கே வந்தோம்' என்று இருந்தது. பாபாவைக் கண்டதும் அவன்மேல் ஏற்பட்ட மரியாதையையும் மனதில் இருந்து உதறிப்போட்டுவிட்டாள்.

மல்லா பாபாவின் கருத்தை மறுத்து உறுதியான குரலில்; "இல்லை பாபா, பூலான் சாதாரண பெண்ணல்ல. புத்லிபாயின் அவதாரம். நான்கு பொலிஸ்காரர்களை கண்மூடி கண்திறப்பதற்குள் சுட்டுத் தள்ளினாள் என்றால் பாருங்களேன்! பூலானின் துணிச்சலும் வேகமும் ஆண்களிடம் கூட நான் கண்டதில்லை. என் அனுபவத்தில் இருந்துதான் சொல்கிறேன்" என்றான் மல்லா.

தன்னைப் பற்றி மிகையாகப் புகழ்ந்து மல்லா கூறியதும் பூலானுக்கு ஒருவித மான கூச்சமாகத்தான் இருந்தது. ஆனால் தன்னை அற்பமாக நினைத்த பாபாவுக்கும் அவன் கூட்டத்துக்கும் முன்பாக மல்லா தன்னைப் புகழ்ந்தது இதமாகவும், அடிக்கு அடிபோலவும் இருந்தது.

பாபாவும் நம்புவதா விடுவதா என்பதுபோல மல்லாவையும் பூலானையும் மாறி மாறிப் பார்த்தான். எப்படியோ பூலானிடம் அவனுக்கு முன்பிருந்த இகழ்ச்சியும் அலட்சியமும் இப்போது பாதிக்கு மேல் குறைந்திருந்தது.

மல்லாவின் மீது அவனுக்கு அபரிமிதமான மதிப்பு இருந்ததால், அவனுடன் வந்திருப்பவள் அத்தனை சாதாரணமாக இருக்கமாட்டாள் என்று தான் நினைக்காமல் போனதற்காக தன்னையே நொந்து கொண்ட பாபா, அடுத்துச் சொன்ன வார்த்தை பூலானையே நெகிழவைத்து விட்டது. மறுபடி அவன்மீது அவளுக்கு மதிப்பை ஏற்படுத்தியது.

"மன்னித்துக்கொள் சகோதரி!" என்ற ஒரே வார்த்தையால் தன் பெருந்தன்மையைப் புலப்படுத்திவிட்டான் பாபா.

பாபாவும் மல்லாவும் அன்றிரவும், மறுநாளும் நீண்டநேரம் பேசினார்கள். இரண்டு கோஷ்டிகளும் எந்தெந்த விதத்தில் சேர்ந்து செயற்படுவது என்று விவாதித்தார்கள்.

பெரிய கொள்ளை என்றால் இரு குழுக்களும் சேர்ந்து திட்டமிடுவது. சேர்ந்தே கொள்ளையடிப்பது. கொள்ளையில் கிடைக்கும் பலன்களை இரண்டு குழுக்களும் சமமாகப் பங்கிடுவது. ஒரு குழுவுக்கு பொலிசாராலோ, அல்லது வேறு கொள்ளைக் கோஷ்டிகளாலோ ஆபத்து ஏற்பட்டால் மற்றக் குழு உதவுவது என்று பாபாவும் மல்லாவும் உடன்பாட்டுக்கு வந்தனர்.

மல்லாவுக்கும், பூலானுக்கும் அவர்களுடன் வந்தவர்களுக்கும் ராஜ உபசாரம் செய்தான் பாபா.

பாபாவின் பார்வை ஒரு முறைகூட தன்மீது தப்பான அர்த்தத்தில் படவில்லை என்பதே பூலானுக்கு அவன்மீது ஒரு பக்தியையே ஏற்படுத்திவிட்டது.

கொள்ளைக்கோஷ்டி என்று இகழ்வாகப் பேசுகிறார்கள். பொலிஸ்காரர்களையும், பொறுக்கிகளான கிராம அதிகாரிகளையும் கௌரவமாக மதிக்கிறார்கள். அவர்களிடமெல்லாம் இல்லாத பெருந்தன்மையும், களங்கமில்லாத மனமும் கொண்டவர்கள் கொள்ளைக் கோஷ்டிகளில்தான் இருக்கிறார்கள் என்பது எத்தனை பேருக்கு தெரியும்– என்று நினைக்கவே, பூலானுக்கு தன் காதலனான மல்லா மீதும், பாபாமீதும்– அவர்களை சந்திக்கவும் பழகவும் தனக்கு முடிந்ததை யிட்டும் பெருமையாக இருந்தது.

பாபாவிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பியபோது பூலானின் மனது நிறைவாக இருந்தது.

திரும்பிக்கொண்டிருந்தபோது, மல்லா வழக்கம்போல புதிர்போட்டுப் பேசினான்:

"இன்றிரவு ஒரு காரியம் செய்து விட்டு நம் முகாம் திரும்பலாம்."

"என்ன காரியம்?" என்றாள் பூலான்.

"ஒரு கணக்கைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. உனக்கும் சந்தோசமாக இருக்கும்."

அவன் சொன்னதில் இருந்தே தன் சம்பந்தப்பட்ட விடயம்தான் என்று பூலானுக்கு புரிந்தது. ஆனாலும் அறியும் ஆவலில் "எனக்கென்ன சந்தோசம்?" என்றாள்.

"உஷ்! அது இப்போது தெரியாது. நீயே நேரில் பார்!" என்றான்.

நன்றாக இருட்டும்வரை கிராமத்திற்கு வெளியே ஓய்வெடுத்துவிட்டு நள்ளிரவான போதுதான் "புறப்படலாம்" என்று உத்தரவிட்டான் மல்லா.

பூலானுக்கோ தாங்க முடியவில்லை. மல்லாவின் திட்டம் என்ன, எங்கே அழைத்துப்போகப் போகிறான், என்று அறியாவிட்டால் தலையே வெடித்துவிடும் போல இருந்தது.

பலமுறை பலவிதமாகக் கேட்டுப் பார்த்தும் மல்லா வாயே திறக்கவில்லை. மர்மமாக புன்னகைத்துக் கொண்டிருந்தான்.

மல்லா முன்னால் செல்ல பூலானும் மற்றவர்களும் பின் தொடர்ந்தனர். சிறிது தூரம் சென்றதும் அந்தப் பாதை எங்கே போகிறது என்று பூலானுக்குப் புரிய ஆரம்பித்தது.

அது 'கல்பி' பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் பாதை.

எந்தப் பொலிஸ் நிலையத்தில் வைத்து பூலானை முதன்முதலில் சின்னாபின்னப் படுத்தினார்களோ அந்தப் பொலிஸ் நிலையம் தான் அது.

கல்பி பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் பாதைதான் அது என்று தெரிந்ததுமே பூலானின் உணர்ச்சிகள் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டன.

அதுவரை மல்லாவைச் சீண்டிச்சீண்டிப் பேசிக்கொண்டு வந்தவள், அதன்பின்னர் பாறைபோன்று இறுகிப் போனாள்.

போதையின் நாற்றத்துடன், காவிப் பற்களுடன் நரிமாதிரி- சிரித்தபடி அவளை அனுபவிக்க நெருங்கி, அது முடியாமல் போக நாய்போல பாய்ந்து கடித்துக் குதறிய அந்த இன்ஸ்பெக்டரின் முகம், அந்த இன்ஸ்பெக்டருக்கு மேலதிகாரியான இன்னொரு காமமிருகத்தினது முகம், இரக்கமேயில்லாமல் அனைத்தையும் சப்புக்கொட்டி இரசித்து; இரசித்து... தூ... நாய்கள்... மனித நாய்கள்.... பூலானுக்கு ஒன்றுமே மறக்கவில்லை.

'எப்படி மறக்கும்?'

என்றோ ஒரு நாள்! எப்படியும் என்றோ ஒருநாள் என்று பொத்திப் பொத்தி நெஞ்சுக் கூட்டுக்குள் பத்திரப்படுத்திப் பாதுகாத்து வரும் நினைவுகள் எப்படி மறக்கும்!

"எங்கே போகிறோம் சொல்லு!" என்று மல்லா கேட்டபோதுகூட பூலான் கொந்தளிக்கும் உணர்ச்சிக் கடலில் இருந்து மீளாமலேயே ஒற்றைவரியில் "தெரியும்!" என்றாள். குரலும் இறுகிக் கடினமாகியிருந்தது.

மல்லாவுக்கு அவளை அணைத்து ஆதரவாகப் பேச ஆசையாக இருந்தது. தன் ஆட்களும் கூடவே இருந்ததால் அந்த ஆசையை புதைத்துவிட்டான்.

"என்ன செய்யப்போகிறோம் தெரியுமா?" என்று மல்லா கேட்டபோது பொலிஸ் நிலையத்தை அவர்கள் அண்மித்துவிட்டனர்.

மல்லாவுக்கும், மற்றவர்களுக்கும் பொலிஸ் நிலையத்தின் வெளித்தோற்றம் மட்டும்தான் கண்களில் தெரிந்தது.

பூலானின் கண்களில் பொலிஸ் நிலையத்தின் உள்ளே இருந்த அதிகாரியின் அறை, சிறைக்கூண்டு, அந்தச் சிறைக்கூண்டில் பாய்ந்து வெறிபிடித்தாடிய மிருகங்கள் எல்லாமே தெரிந்தன.

பூலானால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பூலானால், தன் மனக்கண்முன்பாகத் தோன்றிய வெறி நாய்களைக் கண்ட பின்னர் நிதானத்தைக் காட்ட முடியவில்லை.

-அதனால் பூலான்-

-யாருமே எதிர்பாராதபடி-

-மல்லாவே கூட ஈடுகொடுக்க முடியாதபடி-

எதிரே தெரிந்த பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடினாள்.

"பூ.. பூலான் நில்.. நில்!"

என்று கத்தியபடி ஓடிய மல்லாவாலும், மல்லாவைத் தொடர்ந்த அவனது ஆட்களாலும்கூட பூலானின் வேகத்திற்கு ஈடுகொடுக்க இயலவில்லை.

பொலிஸ் நிலையம் அந்த நள்ளிரவில் தூங்கி வழிந்து கொண்டிருந்தது.

ஐந்து பொலிசார் மட்டும்தான் அன்று இரவுக் கடமையில் இருந்தனர்.

அதிலே மூன்றுபேர்தான் பூலான் அங்கு சின்னாபின்னமானபோது கடமையில் இருந்தனர். மற்றைய இருவரும் புதிதாக மாற்றலாகி வந்திருந்தவர்கள்.

ஐந்துபேரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தனர். இரவுக் காவலுக்குப் பொறுப்பான பொலிஸ்காரரின் குறட்டைச் சத்தம் மட்டும் தான் அமைதிக்குப் பங்கம் விளைவித்துக் கொண்டிருந்தது.

"பூலான் நில்...!"

மல்லா கத்திக்கொண்டே வந்தான். பூலானின் காதில் மல்லாவின் குரல் விழவே இல்லை.

ஓடினாள்..... ஓடினாள்.

அதேவேகத்திலேயே பொலிஸ் நிலைய வாயில் கதவை காலால் உதைத்தாள்.

டமார்

கதவு பிளந்தது.

அத்தனை பலமான கதவல்ல. 'யார் உடைக்கப்போகிறார்கள். பொலிஸ் நிலையத்துக்கு கதவு எதுக்கு' என்று நினைத்தோ என்னவோ பலமில்லாத கதவாகத்தான் போட்டிருந்தார்கள்.

பூலான் சுயநினைவோடு செயற்படுபவள் போலத் தெரியவில்லை. அவள் முகத்தில் ஒரு கொடூரம் தெரிந்தது. கண்கள் இரண்டும் நெருப்புத் துண்டுகள்போல சிவந்து ஒளிர்ந்து கொண்டிருந்தன.

கதவு உடைபட்ட சத்தத்தில் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த பொலிஸ்காரர்களுக்கு பூலானையும் அவள் கண்களையும், கையிலுள்ள துப்பாக்கியையும் பார்த்ததும் பேயைக் கண்டதுபோல திகைப்பு ஏற்பட்டது.

"எழும்புங்கடா நாய்களே!" என்று பூலான் கத்தியபோதுதான் தம் எதிரே நிற்பது பேய் அல்ல மனித உருவம்தான் என்ற நம்பிகை வந்தது.

அதேநேரம் துப்பாக்கிகளை நீட்டியபடி மல்லாவும் அவன் ஆட்களும் உள்ளே புகுந்தனர்.

மல்லாவுக்கு, பூலானை துரத்திக் கொண்டு ஓடி வந்ததில் மூச்சிரைத்தது.

தனியாகப்போய் மாட்டிக்கொள்ளப் போகிறாளே என்ற அந்தரத்திலும் பதட்டத்திலும் இதயத்துடிப்பும் அவனுக்கு ஏறியிருந்தது.

பொலிஸ்காரர்களுக்கு தூக்கக் கலக்கம் சுத்தமாகப் பறந்து போய், மரணபீதி கண்களில் தெரிந்தது.

கைகளை உயர்த்தியபடி- கண்களால் கெஞ்சியபடி படுக்கையில் இருந்து எழுந்து நின்றனர்.

பூலானை யாருக்குமே அடையாளம் தெரியவில்லை.

ஓடிவந்ததில் பூலானுக்கும் மூச்சிரைத்தது.

அதனால் பெரிதாக மூச்சு வெளிப்பட அவள் மார்புகளும் விம்மித் தணிந்தன.

குரலும், விம்மிப் புடைத்து தணிந்த மார்புகளுமே- தங்கள் முன்பாக நிற்பது பெண்தான் என்று பொலிஸ்காரர்களுக்குத் தெரியவைத்தது.

'ஒரு பெண்..! பெண்ணா இப்படி...?'

பொலிஸ்காரர்களால் நம்ப முடியவில்லை.

அவள் முகத்தை கூர்மையாகப் பார்த்திருந்தால் ஒருவேளை அடையாளம் தெரிந்திருக்கலாம்.

பயம் காரணமாக அவள் முகத்தையே யாரும் சரியாகப் பார்க்கவில்லை.

"நான் யார் தெரியுமாடா நாய்களே?"

அவர்கள் நடுங்கினார்கள்.

"சொல்லுங்களடா?"

"தெ. தெ.. தெரி..யாது!"

"தூ... தொடை நடுங்கிகள்! தனியாக வந்து பெட்டைப்பிள்ளை மாட்டினால்மட்டும் தூ.." காறி ஒருவன் முகத்தில் துப்பிவிட்டு, "வீரம் கொப்பளிக்குமாக்கும். நான்தானடா பூலான்தேவி! கழற்றிப்போடுங்கடா துணிகளையெல்லாம்!"

கத்தியவள், சடாரென்று ஒரு பொலிஸ்காரனை நோக்கி தன் துப்பாக்கியைச் சுழற்றி அடித்தாள்.

குபீர் என்று இரத்தம் பாய்ந்தது அவன் தலையில் இருந்து.

அவன்தான்-இன்ஸ்பெக்டர் பூலான்மீது பரவியபோது அவளைத் திமிறவிடாமல் அமுக்கிப் பிடித்திருந்தவர்களில் ஒருவன்.

அவனது அடையாளம் சட்டென்று புரிந்ததும்தான் துப்பாக்கியால் அடித்து மண்டையைப் பிளந்தாள் பூலான்.

குபீரிட்ட இரத்தம் பூலானின் சட்டையிலும் தெறித்தது.

அதேநேரம் தனியாக ஒரு மூலையில்– பூலானின் பார்வையோ, மல்லாவின் பார்வையோ படாத மூலையில்-கிடந்த ஐந்தாவது பொலிஸ்காரன் தன் துப்பாக்கியை மெல்ல எடுத்தான்.

மறைந்து கிடந்தபடி பூலானை நோக்கிக் குறிவைத்தான்.

விசையைத் தட்டினான்.

**(தொடர்ந்து வரும்)**

---

## ஆசைக்கு கிடைத்த பரிசு
## நறுக்-நறுக்-நறுக்

**68 வ**யதான முதியவர் ஒருவர் விபரீத ஆசைக்கு விலையாக மிக மிகப் பெறுமதியான இழப்பை சந்தித்திருக்கிறார். இது நடந்தது ஸ்பெயின் நாட்டில்.



19 வயதான பெண் ஒருவர் மீது 68 வயது முதியவருக்கு முதிர்ந்தது ஆசை. அந்த முதியவர் அவளுக்கு மேலதிகாரி.

மேலதிகாரியின் சபலம் தெரிந்த அந்த இளம்பெண் 25 ஆயிரம் பெசட்டாஸ் (11 ஆயிரம் ரூபாய்கள்) தந்தால்தான் ஆசைக்கு இணங்குவேன் என்றாளாம். அத்தனை பணம் கேட்டால் முதியவர் அலறியடித்துக் கொண்டு ஓடிவிடுவார் என்றுதான் நினைத்தாள்.

முதியவரோ சபல சக்கரவர்த்தியாக இருந்தார். 'பணம் என்ன பணம், நீ சம்மதித்தால் போதும் பிடி என்று அவள் கேட்ட பணத்தை எடுத்துக் கொடுத்தார். அவளையும் ஒரு அறைக்குள் இழுத்துப் போனார்.

என்ன செய்வது என்று தெரியாமல் திக்குமுக்காடிப்போன பெண்மணி அறையில் கிடந்த கத்தியை எடுத்தாள். முதியவரின் ஆண் உறுப்பை ஒரே நறுக்.

முதியவர் போட்ட கூச்சலில் ஓடிவந்த பணியாட்கள் அவரை மருத்துவ மனையில் சேர்ப்பித்தனர். அபாயகரமான கட்டத்தில் இருக்கிறார். நறுக் நறுக் வீரப் பெண் பொலிஸ் காவலில் இருக்கிறார். ரோய்ட்டர் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தி இதது

முதன் முதலில் 'நறுக்' தாக்குதலை அறிமுகம் செய்தவர் பாபிட் என்ற அமெரிக்கப் பெண் என்பதும் அச் செய்தி சுடச் சுட சுட முரசில் தரப்பட்டதும் தெரிந்ததே. பாபிட் விவகாரம் படமாகவும் வந்துள்ளது. பாபிட் வழியில் பல பெண்கள் 'நறுக்' தாக்குதல் நடத்திய செய்திகள் பல வெளிவந்துள்ளன. சபலிஸ்டுக்களே ஜாக்கிரதை இழப்பு கடுமையாக இருக்கும்.

## "மணந்தேன்–கலந்தேன்"



**ம**யக்கும் அழகிகளின் விழிவீச்சில் மகுடங்களை மட்டுமல்ல, மாண்டபின்னரும் தம் புகழுக்கே களங்கம் தேடிய மன்னர்கள் பலர் உண்டு.

எகிப்தின் மன்னர் பரூக் எப்படிப்பட்டவர் என்பது தெரியவில்லை. ஆனால் இர்மா என்னும் பெயருடைய எடுப்பான அழகி ஒருத்தி 'நான் மன்னரின் மனைவி' என்று உரிமை கோரி புறப்பட்டிருக்கிறாள்.

மன்னரை மணந்தேன். மஞ்சத்தில் அவருடன் கூடிச் கலந்தேன் என்று இர்மா கூறுவதை யாரும் நம்ப மறுக்கிறார்கள். "இர்மா மன்னரின் பெண் நண்பியாக இருந்திருக்கலாம். அவ்வளவுதான்" என்கிறார்கள் எகிப்தின் சரித்திரப் பேராசிரியர்கள்.

மன்னர் பரூக்குடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தை இர்மா வெளியிட்டிருக்கிறார். சும்மா சொல்லக் வடாது இர்மா அந்தக் காலத்தில் ஜிம்மாதான் என்று படமே சான்று தருகிறது.

## ரஜினியின் எச்சரிக்கை

**இ**மயமலை ரிஷிகேசத்துக்கு சென்றிருந்த ரஜினி சமீபத்தில் சென்னை வந்துவிட்டு மீண்டும் ரிஷிகேஷத்துக்கு பறந்துபோய் விட்டார்.

'அருணாச்சலம்' படத்தை முடித்து விட்டு, படம் வெளியானதும் வரவேற்பையும் பார்த்துவிட்டு உடனே ரிஷிகேஷம் சென்றார் ரஜினி. இது ரஜினியின் வழக்கம்தான்.

ரிஷிகேசத்தில் தங்கியிருந்த ரஜினி பாதியில் திரும்பி வந்த மர்மம் என்ன? அது தான் தமிழ்நாட்டில் சமீபத்தில் சூடான அலசல்.



இந்தியப் பிரதமராக மூப்பனார் வருவதை தி.மு.க தடுத்தது என்பதால் இரு கட்சிகளுக்கும் இடையே தேனிலவு முடியும் கட்டத்தில் இருந்தது.

இந்த இரு கட்சிகளும் உறவு கொண்டாட காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவர் ரஜினி. கலைஞர், மூப்பனார் இருவர்மீதும் ரஜினி அபிமானம் வைத்திருக்கிறார். அதனால்தான் கலைஞரின் காலத்தின் பின்னர்தான் ரஜினி அரசியலுக்கு வருவதானால் வருவார் என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும் கலைஞரைவிட மூப்பனார்மீது தான் ரஜினிக்கு பிடிப்பு அதிகமாம். மூப்பனார் பிரதமராவதை கலைஞர் தடுத்தார் என்று செய்திகள் வெளியானதும் கடுப்பாகி விட்டார் ரஜினி.

நேராக கலைஞருடனேயே தொலைபேசியில் ரஜினி பேசியிருக்கிறார். "அப்படியெல்லாம் இல்லை" என்று தனது பக்க விளக்கத்தை விபரமாக சொன்னாராம் கலைஞர். அந்த விளக்கம் ரஜினிக்கு திருப்தியாக இல்லையாம்.

தன் ஆதங்கத்தை கலைஞருக்கு எட்டக்கூடிய வட்டாரங்களிடம் சொல்லி விட்டுத்தான் ரிஷிகேசத்துக்கு பறந்தாராம்.

ரஜினி ரிஷிகேசத்தில் இருந்தபோது ரஜினி வீட்டாருக்கு மிரட்டல்கள் விடுக்கப் பட்டதாம். எல்லாம் போன் மிரட்டல்கள் தான்.

"ரஜினி தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக அரசியலில் குதித்தால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும்" என்றும் மிரட்டப்பட்டதாம்.

தகவலறிந்த ரஜினி ரிஷிகேஷத்தில் இருந்து பாதியில் திரும்பி வந்தார். 'என்னை அந்தம்மா வம்புக்கு இழுத்தாங்க. அது யாருக்கு நஷ்டம் என்று எல்லோருக்கும் தெரியும். மறுபடி என்னை சிலர் வம்புக்கு இழுக்கப் பார்க்கிறார்கள். இது நல்லதுக்கில்லை" என்று முக்கிய அரசியல் பிரமுகரும், மூத்த அரசியல் தலைவரின் நெருங்கிய உறவினருமான ஒரு பெரும் புள்ளியிடம் நேரடியாகவே கூறினாராம். ரஜினி விடுத்த எச்சரிக்கையாகவே அதனை நினைத்து ஆடிப்போயிருக்கிறதாம் தமிழக முக்கிய அரசியல் விட்டாரம்.

அது மட்டுமல்ல மறுபடி ஒரு சந்தர்ப்பம் வந்தால் மூப்பனார் பிரதமராக முயற்சி செய்வேன் என்று ரஜினிக்கு கலைஞர் வாக்குறுதி கொடுத்திருப்பதாகவும் பேசப்படுகிறது. அவர் ஆட்டுவிக்கிறார். இவர்கள் ஆடுகிறார்கள்.

## சண்டை சமாதானம்

**'பே** வாட்ச்' என்னும் ஆங்கிலத் தொலைக்காட்சித் தொடரில் தாராளமாக நடிக்கும் கவர்ச்சிக் கதாநாயகி பமீலா அண்டர் ஸென். தன் ஜில் ஜிலிப்பான அழகுகளால் பலகோடி ரசிகர்களை நம்நாட்டு ரசிகர்கள் உட்பட சுண்டியிழுக்கும் பமீலாவால் தனது கணவரை மட்டும் கவர முடியவில்லை.



பமீலாவின் கணவர் ஒரு பொப் பாடகர். பெயர் டாம் லீ.

பமீலா கர்ப்பமாக இருந்தபோது தனக்கு துணையாக ஒரு பெண் நண்பியை வீட்டுக்கு அழைத்து வந்தார் டாம்லீ. அழைத்து வந்தது எதற்காக என்று நேரிலேயே கண்டுவிட்டதால் கணவருக்கு 'குட்பை' சொன்னார் பமீலா.


இப்போது இருவரும் மீண்டும் சமாதானமாகியுள்ளனர். "இனிமேல் ஏகபத்தினி விரதனாக இருப்பேன், போதை மருந்துகளையும் தொடேன்" என்று கணவர் சத்தியம் செய்ததால் பமீலா சமாதானமாகி விட்டாராம்.



படிப்பகம்


www.padippakam.com

# நிறுத்து! நிறுத்து!! நிறுத்து!!!



← புகைப்பது உடல் நலத்தை பகைப்பது என்றுதான் அர்த்தம், அர்த்தம் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உடல் நலத்துக்கு கேடாகலாம் என்று சிகரெட் பெட்டியின் ஓரத்தில் போட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் யார் கவனிக்கிறார்கள்? சிக்குப் புக்கு என்று புகைப்பதிலேதான் ஆனந்தம் என்று தம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சொன்னால் கேளார்கள் என்பதால் கிட்டத்தட்ட மிரட்டல் பாணியில் இறங்கியுள்ளது நெதர்லாந்தில் உள்ள ஒரு புகைப்பிடித்தலுக்கு எதிரான அமைப்பு. அந்த அமைப்பு தனது பிரசாரத்திற்காக வெளியிட்ட அச்சுறுத்தல் விளம்பரப் படம்தான் இது. பார்த்தவுடன் மிரள்வதோடு வயிற்றையும் ஒரு மாதிரி பிசைகிறதல்லவா. சிகரெட் கம்பனிக்காரர்கள் விளம்பரத்துக்காக செய்யும் செலவைவிட சிகரெட் புகைப்பதை எதிர்க்கும் அமைப்புக்களின் பிரசார செலவுகள்தான் அதிகம். பயன்தான் பூச்சியம். நல்லதை நாடு கேட்கும் என்பார்கள். அது பொய்தானே? யார் கேட்கிறார்கள்!.



## பாம்போடு வாழ்ந்த பாலகன்

→ படையே நடுங்கும் பாம்பைக் கண்டும் இந்தப் பாலகன் நடுங்கவில்லை. பாலகன் பெயர் ஃபாங் இயான். பெற்றவர்களுக்கு தங்கள் சுட்டிக் குழந்தை மூலம் உலக சாதனை செய்ய ஆசையோ ஆசை. அதனால் எந்தப் பெற்றோரும் லேசில் துணியாத காரியத்தில் அவர்கள் குதித்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட நச்சுப் பிராணிகளுடன் ஒரே கண்ணாடிக் கூட்டில் 100 நாட்கள் இருந்து சாதனை படைக்க இந்த பச்சை மண்ணுக்கு பயிற்சி கொடுத்தனர். பயிற்சி முயற்சியாகி சாதனையும் படைத்தான் சிறுவன். பாலகனுடன் தாயாரும் கண்ணாடிக் கூண்டில் இருந்தார். பழக்கப்பட்டதால் பயமின்றி சீறும் பாம்பைப் பிடித்துத் தொட்டு விளையாடுகிறான்.


சீனாவில் நடத்தப்பட்ட இந்த சாதனையை மனித உரிமை அமைப்புக்கள் சீறியெழுந்து கண்டித்திருக்கின்றன. இவ்வாறான பைத்தியக்காரத்தனங்களை கின்னஸில் சேர்க்கக்கூடாது என்றும் சூடாகக் கூறியிருக்கின்றன.

## வந்தாரே இங்கே சந்திரிக்கா



↑ சூழ்நிலைதான் சிந்தனைகளை உற்பத்தி செய்கிறது. படத்திலே பாருங்கள் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஸ்டைலை உன்னிப்பாகக் கவனித்து வெளுத்து வாங்குகிறார் ஒரு மாணவி. பக்கத்தில் மறக்காமல் துப்பாக்கியுடன் பாதுகாவலர். கண்டி தெஹியங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற வினோத உடைப்போட்டியில் பார்வையாளர்களை கவர்ந்த காட்சி இது. என்ன அசத்தல்தானே.

## ஸ்டைலு ஸ்டைலுதான்!



→ பாஷன் என்ற பெயரில் காலத்துக்கு காலம் கண்ணைக் கவரும் ஸ்ரைல்களும் வருவதுண்டு. சில கண்றாவிக் காட்சிகளும் கண்ணில்படுவதுண்டு.

தலையை மொழு மொழுவென்று மழித்து மையத்தில் மட்டும் சிறுபுதராக விட்டுவைத்திருக்கிறார் பாருங்கள். தென்னாபிரிக்காவில் பழங்குடி இளைஞர்கள் மத்தியில் இதுதான் லேட்டஸ்ட் சூப்பர் ஸ்டைல். முடி உதிருகிறதே என்று கவலைப்படுகிறவர்களுக்கு இப்படியான ஸ்டைல்கள் கவலையைப் போக்க உபயோகப்படலாம். மொட்டை என்றோ சொட்டை என்றோ சொல்ல முடியாதல்லவா! ஹி.ஹி.ஹி.

**தகவல் பெட்டி**



## அச்சு ஒன்று முத்து ஐந்து

← ஒரே பிரசவத்தில் ஐந்து முத்துக்களை கொட்டிவிட்டு முத்துப்பல் காட்டி நகைக்கிறார் பாருங்கள். குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பேசுவோர் குறை நினைக்க இடமில்லை. ஏனென்றால் இது திட்டமிட்ட ஏற்பாடு அல்ல. ஒன்றுக்கான முயற்சியின்போது ஏற்பட்ட இன்ப அதிர்ச்சி இது.

சிங்கப்பூர் கே.கே.மருத்துவமனையில் இந்த சிங்காரமான தங்கப் பாப்பாக்கள் ஐந்தையும் தரணிக்குத் தந்தவர் திருமதி டோரதிடான். வயது 32. கே.கே.மருத்துவமனையின் 73 வருடகால வரலாற்றில் ஒரே பிரசவத்தில் ஐந்து அமோக வெளியீடுகள் கண்டது இதுதான் முதற்தடவையாம்.

ஐந்துபேரில் இரண்டு ஆண், மூன்று பெண். குழந்தைகளின் எடை சற்றுக் குறைவாக இருப்பதால் மருத்துவமனையில் கண்ணும் கருத்துமான கண்காணிப்பு செலுத்தப்படுகிறது. அச்சு ஒன்று முத்து ஐந்து.



படிப்பகம்

www.padippakam.com

## கொடுக்கல் -வாங்கல்

ரஜினையின் படத்தில் ஒரே ஒரு காட்சியில் நடித்தாலும், அது பாக்கியமோ பாக்கியம் என்கிறார் அம்பிகா. பெரியமனுசன் படத்தில் சத்யராஜுடன் நல்ல பாத்திரம். தொடர்ந்து வாய்ப்புக்கள் வருகின்றன என்று அம்பிகா சொல்கிறார்.

ஆனால் உண்மை வேறு விதமாக இருக்கிறது. சமீபத்தில் சில தோல்விப் படங்களைக் கொடுத்த நடிகர் ஒருவரிடம் சான்ஸ் கேட்டுப் போனாராம் அம்பிகா. அந்த நடிகரே தயக்கமே இல்லாமல் தனது ரூமுக்கு வந்து பேசுமாறு சொன்னாராம். ரூமுக்கே சென்று பேசி வாய்ப்பு வாங்கியிருக்கிறார் நடிகை. கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் நல்ல அனுபவம் உள்ளவர் நடிகை.



சத்யராஜ்-கோவை சரளா
படம் பெரியமனுஷன்

## லொள்ளு மணி

கவுண்டமணி பண்ணும் லொள்ளுத் தாங்க முடியாமல் அவருடன் இணைந்து நடிக்க முன்னணி ஹீரோக்களே பயப்படுகிறார்களாம்.

ஒரு இயக்குநரிடம் கவுண்டமணி பேசிய சொந்த வசனம் இது: "குளோசப்பா எடுக்கணும் என்னை அப்படியே காமிராவை தூக்கிட்டு வந்து எடுத்துட்டுப்போ. இப்படி என் முஞ்சியைக் காட்டி ஒவ்வொரு ஹீரோவையும் காப்பாத்துறதுக்குள்ளே நான் படற கஷ்டம் சொல்லி மாறாதடா சாமி. நேத்து பிரபு, இன்னைக்கு கார்த்திக், நாளைக்கு சத்யராஜுக்கு சித்தப்பா ரோல் பண்ணி காப்பாத்தணும்..." இப்போது சொல்லுங்கள் லொள்ளு மணியிடம் ஹீரோக்கள் பயப்படுவது நியாயம் தானே?!



பாண்டியராஜன்-ரஸிகா
படம் கபடி கபடி

## மகேஸ்வரி கொடுத்த பரிசு

'உல்லாசம்' படத்தில் அஜித்குமாரும் மகேஸ்வரியும் இணைந்து நடிப்பது தெரிந்த சமாச்சாரம். அஜித்குமார் ஒரு விளையாட்டுப் பிள்ளை என்பதும் மெத்தத் தெரிந்த சமாச்சாரம். மகேஸ்வரியும் சளைத்தவரல்ல. சக்கரவர்த்தி என்னும் நடிகரை காதலித்தவர். இப்போதும் காதலிப்பதாகவே தகவல்.

இதற்கிடையே நெருடலான செய்தி ஒன்று பேசப்படுகிறது. சமீபத்தில் அஜித்குமாருக்கு பிறந்தநாள். அதனை முன்னிட்டு தமிழகப் பத்திரிகைகளுக்கு ஒரு விளம்பரம் கொடுத்திருந்தார் அஜித்.

என்னுடைய பிறந்த நாளன்று நான் சென்னையில் இருக்கமாட்டேன். ரசிகர்கள் நேரில் வரவேண்டாம். கடிதம் மூலம் வாழ்த்தினாலே போதும்" என்றுதான் விளம்பரம் கொடுத்தார். ஆனால் பிறந்த நாளன்று அஜித் இருந்தது சென்னையில்தான்.

தனது பிறந்தநாளை அஜித் இம்முறை கொண்டாடியது மகேஸ்வரியுடன். அஜித்குமாருக்கு மறக்கமுடியாத பிறந்த நாள் பரிசு கொடுத்து திணறவைத்துவிட்டாராம் மகேஸ்வரி என்பதுதான் லேட்டஸ்ட் கிசு கிசு. அது என்ன பரிசோ? சென்ற முறை அஜித்துக்கு பிறந்தநாள் பரிசு கொடுத்தவர் ஹீரா.

## மினிசினி

- 'உதிரிப்பூக்கள்', 'முள்ளும் மலரும்' போன்ற படங்களை இயக்கிய மகேந்திரன் தற்போது இயக்கும் படம் 'சாசனம்' இப்படத்தில் அரவிந்தசாமிக்கு ஜோடியாக ரஞ்சிதாவும், 'மே மாதம்' படநாயகி சோனாலியும் நடிக்கின்றனர்.
- அமிதாப்பச்சன்-விஜயசாந்தி நடிக்கும் இந்திப்படத்திற்கு 'ஜக்கம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் பிரகாஷ்ராஜ் முக்கிய வேடமொன்றில் நடிக்க இருக்கிறார்.
- 'பிஸ்தா'வுக்குப் பின்னர் அர்ஜுன் நடிக்கும் படத்தை இயக்கவுள்ள கே.எஸ்.ரவிக்குமார், இதற்குப் பின்னர் பிரபு, சத்யராஜ் நடிக்கும் இரண்டு படங்களை அடுத்தடுத்து இயக்கவுள்ளார்.
- இந்தி நடிகர் அனுபம் கேர் தயாரிக்கும் தமிழ்ப்படம் ஒன்றில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கிறார். இதை கிருஷ்ணா என்பவர் இயக்கவிருக்கிறார். கிருஷ்ணா மணிரத்னத்திடம் இணை இயக்குநராகப் பணிபுரிந்தவர்.
- 'வி.ஐ.பி.' படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ள ரஞ்சித்திற்குத் தமிழில் பல படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன. அத்துடன் மலையாளத்தில் பிரியதர்ஷன் இயக்கும் படமொன்றுக்கும் இசையமைக்கவுள்ளார்.
- தெலுங்கில் தாசரி நாராயணராவ் இயக்கத்தில் விஜயசாந்தி நடித்த 'ஒசே ராமுலம்மா' (தமிழில் 'அடிமைப்பெண்') படம் பெருவெற்றி பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து 'ரவுடி தர்பார்' என்ற படத்தை இயக்குகிறார் தாசரி நாராயணராவ். இப்படத்திலும் விஜயசாந்திதான் நாயகி.
- 'ஜீன்ஸ்' படம் முடிந்ததும் 'காதலே நிம்மதி' என்ற படத்தில் நடிக்க இருக்கிறார் பிரசாந்த். 'சோலைக்குயில்', 'மலைச்சாரல்' போன்ற படங்களை இயக்கிய ராஜா இப்படத்தை இயக்குகிறார்.
- 'பூமணி', 'எட்டுப்பட்டி ராசா' போன்ற படங்களைத் தொடர்ந்து 'நந்தினி' படத்திலும் சொந்தக் குரலில் பாடியுள்ளார் மணிவண்ணன். 'மானூத்து ஓடையிலே மாரளவு தண்ணியிலே...' என்று தொடங்கும் இப்பாடலுக்கு சிற்பி இசையமைத்துள்ளார்.
- 'ராசி' படத்தில் ஜோடியாக நடித்த அஜித்குமார் ரம்பா மறுபடி ஜோடி சேர்ந்து நடிக்கப் போகும் படம் 'வாலி'. 'ராசி' படத்தைத் தயாரித்த நிக்ஓடியோ நிறுவனமே 'வாலி' படத்தையும் தயாரிக்கிறது.
- கஸ்தூரிராஜாவின் 'வாசுகி' படத்தில் கதாநாயகனாக நடிப்பவர் தெலுங்கு நடிகர் ராஜேந்திர பிரசாத். இவர் சென்னை திரைப்படக் கல்லூரியில் ரஜினியுடன் ஒன்றாகப் படித்தவர்.



சுஷ்மிதா சென்
படம் ரட்சகன்

## துணிந்த ரேஷ்மா

'வெண்ணிலா' படத்தில் அஜித்குமாரின் இதழோடு இதழ் பதித்து முத்தக் காட்சியில் நடித்திருக்கிறார் ரேஷ்மா.

"இது காதல் கதை. காதலை வெளிப்படுத்த முத்தத்தைவிட்டால் வேறு என்ன விஷயம் இருக்கிறது? இயக்குநர் காட்சியை விவரித்தார். முதலில் தயங்கினேன் பின்னர் துணிந்து இறங்கினேன். படத்தை பார்த்துவிட்டு சொல்லுங்கள். அது எத்தனை உணர்வு பூர்வமான காட்சி என்று" இப்படிப் பெரிய்ய்ய்ய விளக்கமே கொடுத்திருக்கிறார் ரேஷ்மா.

## காதலுக்கு விளக்கம் பிஸீ இயக்குநர்

'காதல் கோட்டை' புகழ் இயக்குநர் அகத்தியன் இப்போது இயக்கும் படம் 'விடுகதை'. பிரகாஷ் ராஜ், புதுமுகம் நீனா நடிக்கும் படம் இது. வழக்கம்போல பாடலும் அகத்தியன், இசை தேவா. இதனை அடுத்து அகத்தியன் பிரபல தயாரிப்பாளரான ஏ.எம்.ரத்தினத்தின் படம் ஒன்றை இயக்கப்போகிறார். இரண்டுக்கும் இடையே 'காதல் கோட்டை' இந்திப் படத்தின் வேலைகளிலும் பிஸியாக இருக்கிறார்.

'காதல் கோட்டை'யை விட 'கோகுலத்தில் சீதை' படத்திற்கு குடும்பப் பெண்களிடம் இருந்து நிறையப் பாராட்டுக் கிடைத்ததாம்.

விடுகதையும் காதல் படமா? என்ற கேள்விக்கு அகத்தியனின் பதில்: 'எனக்குப் பிடித்ததை எனக்காகப் பெற்றுத் தரும் ஒருவர்மீது எனக்கு ஏற்படும் நேசம் காதலாகும். எனவே காதல் இல்லாத படமே கிடையாது. விடுகதையும் அதில் சேர்த்திதான்' என்கிறார்.

காதலுக்கு அகத்தியன் சொன்ன விளக்கம் உங்களுக்கும் பிடித்திருக்கிறதா?

## பலத்த பாதுகாப்பு

மந்த்ராவுக்கு கடும்பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கிற[illegible] அவரது தாய்க்குலம். தாராளமா[illegible] குணத்துடன் முன்னேறிவரும் மந்த்ராவுக்கு சில குட்டி இயக்குநர்கள[illegible] ஏகப்பட்ட தொல்லையாம். அதா[illegible] உதவி இயக்குநர்கள்.

இயக்குநர் இல்லாத நேரமா[illegible] பார்த்து 'காட்சியை விளக்குகிறோ[illegible]' என்று கூறி தனியாக அழைத்து[illegible] செல்கிறார்களாம். காட்சி விளக்[illegible] சகிக்க முடியவில்லை என்று மந்த்[illegible] அழுது புலம்பியதால் இப்போ[illegible] தாய்க்குலமும் கூடவே செல்கிறா[illegible]



### முகப்பில்

ரஜினி
படம்:
அருணாச்சலம்

ஆம்னி
படம்: ராஜாத்தி

அஞ்சு-அரவிந்த்
படம்:
ஆசைத்தம்பி

"வான வில்லின் வண்ணங்கள் ஏழு
வஞ்சி மகளின் கன்னத்தில் பாரு
பாடச் சொல்லும் எண்ணங்கள் நூறு
பாவை யிதழோ தேன் கனிச் சாறு"

கார்த்திக்-நக்மா
படம் பிஸ்தா



படிப்பகம்

www.padippakam.com

## பந்தா அம்மா

'ரிக்ஷாக்காரன்' மூலம் எம்.ஜி.ஆர் ரசிகர் களையே மயக்கி ஜெயலலிதாவுக்கே அந்தக் காலத்தில் சவால்விட்ட நடிகை மஞ்சுளா. துணிந்து நீச்சல் உடையிலும் அப்போதே தாராளம் காட்டியவர். பிரபல ஹீரோவோடு கிசு கிசுக்கப்பட்டவர்.

இப்போது அவர் கணவர், மகள்கள், மகன் ஆகியோரும் நடிக்கின்றனர். அப்படியிருந்தும் மஞ்சுளாவும் நடிக்கிறார். நடிக்கட்டும். ஆனால் பந்தாதான் தாங்கமுடியவில்லையாம். உதாரணத்திற்கு ஒன்று இது:

"ஸாரி டைரக்டர், ஆக்சவலா நான் சீக்கிரமே கிளம்பிட்டேன். வெளியே வந்து பார்த்தா கார் ஜன்னையும் காணோம். சியல்லோவில தம்பி போயிட்டாரு. சின்னவ தௌசன்ட்ல போயிருச்சு. யாரவுல அவரு போயிட்டாரு. பெரிய வண்டியில நட்டி போயிடுச்சு. யூ நோ.. இதே மாதிரி ஒரு டவை ப்ராப்ளம் வந்தப்போ சின்னவர்தான் ஹெல்ப் பண்ணினாரு. அவர் வண்டியிலே என்னை ராப் பண்ணாரு" என்று மலரும் நினைவுகளை உதறிப்போடுவாராம்.

'சின்னவர்' என்று அந்தக் காலத்தில் திரையுலகில் அழைக்கப்பட்டவர் எம்.ஜி.ஆர்.

## கனடா ஞாபகம்

கனடாவில் 'தமிழ் மகன்' படப்பிடிப்பை நடத்திமுடித்து விட்டு கடந்த மாதம் சென்னை திரும்பினார் மன்சூரலிகான். "கனடாவில் ஏகப்பட்ட தமிழ் ரசிகைகள் இருக்கிறார்கள். தொட்டுத் தொட்டு பேசினார்கள். நடிக்க வருகிறீர்களா? என்று கேட்டால் மட்டும் மறுக்கிறார்கள்." என்று கவலைப்படுகிறார் மன்சூர். விரைவில் திரைக்கு வருகிறது தமிழ்மகன்.

## ரெடி

'பகைவன்' படத்தை ஒரே மாதத்தில் எடுத்து முடித்துவிட்டார் இயக்குநர் ரமேஷ்கிருஷ்ணன். சத்யராஜ், அஜித்குமார், அஞ்சலா நடித்திருக்கும் படம். வெளிவரத் தயார் நிலையில் இருக்கிறது.

மும்பாய் இறக்குமதியான பகைவன் நாயகி அஞ்சலா தொடர்ந்து தமிழில் நடிப்பாரா என்பது சந்தேகம்தான். 'பகைவன்' படத்தில் நடித்த அஞ்சலாவை இந்திப்பட இயக்குநரான மெஹெல் குமார் சான்ஸ் தருவதாக அன்புடன் அழைத்துப் போயிருக்கிறாராம்.

## பழிவாங்கிய ரம்பா

ரம்பாவின் ஊதியம் எக்கச்சக்கமாக உயர்ந்துவிட்டதால் தயாரிப்பாளர்கள் அலறுகிறார்கள். அப்படியிருந்தும் ரம்பா நடித்த படங்களை வீடியோவில் போட்டுப் பார்க்கும் ஹீரோக்கள் சிலர் ஒருமுறையாவது ரம்பாவுடன் ஜோடியாக நடிக்கத் துடிக்கிறார்களாம். ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் ரம்பாவை என் பின்னால் அலைய வைத்துக் காட்டுவேன் என்று ஒரு முன்னணி நடிகர் ஒருவர் சவால் விட்டிருக்கிறாராம்.

முன்னணி நடிகர் படப்பிடிப்பு ஒன்றில் சக நடிகரிடம் மேற்கண்ட சவாலை விட்டிருக்கிறார். அது மட்டுமல்லாமல் ரம்பாவைப் பற்றி மேலும் சில வெளியே சொல்ல முடியாத விபரிப்புக்களும் செய்தாராம். படப்பிடிப்பு தளத்தில் இருந்த யாரோ ஒரு துணை நடிகை மூலம் ரம்பாவுக்கு தகவல் எட்டியது.

குறிப்பிட்ட நடிகரின் சிபாரிசில் ரம்பாவை ஒப்பந்தம் செய்யச் சென்றார் ஒரு தயாரிப்பாளர். யார் ஜோடி என்று கேட்டாராம் நடிகை. குறிப்பிட்ட நடிகரின் பெயரைச் சொன்னதும் "நான் ஒன்றும் 'அதுக்காக' அலைபவள் அல்ல என்று சொல்லுங்கள். இப்போது நான் பிஸி. பின்னர் பார்த்துக் கொள்ளலாம்" என்று பழிவாங்கினாராம் ரம்பா.



ஜெகபதிபாபு-மீனா
படம் தேடி வந்த தேவதை

## பெரிய மனுசனின் சபலம்

மூத்த மனைவி சிவகாமி படித்தவர். இரண்டாவது மனைவி பார்வதி படிக்காதவர். இரண்டு மனைவிகள் இருந்தும் அந்தப் பெரிய மனுசனுக்கு சபலம் போனபாடில்லை. வயதான நிலையிலும் வாலிபன் போல கொட்டமடித்தார்.

வாரத்தில் மூன்று நாட்கள் சிவகாமி, மீதி மூன்று நாட்கள் பார்வதி என்று ஷிப்ட் முறையில் இருவரது வீட்டிலும் தங்கியிருந்து கும்மாளம். மூன்றும் மூன்றும் ஆறுநாட்கள். மீதி ஒரு நாள் இருக்கிறதே. அன்று வேட்டைக்கு என்று காட்டுக்குப் போய்விடுவார். அவர் செல்வது அழகிகள் வேட்டைக்குத்தான்.

இதனை அறிந்த இரு மனைவிகளும் பெரிய மனுசனை தம் பிடியில் வைத்திருக்க கவர்ச்சி உடையில் குளியல் நடத்தி ஓ..மாமா..வா.. மாமா.. என்று பாடுவார்கள். இந்த ஜொள்ளுக் காட்சி பெரிய மனுசன் படத்தில் இடம்பெறுகிறது. சத்யராஜ்தான் பெரியமனுசன். மனைவிகளாக அம்பிகாவும், கோவை சரளாவும் தான் கிளப்புகிறார்களாம்.

## அங்கே சுகன்யா

மலையாளப் பக்கம் போன சுகன்யாவுக்கு அடித்திருக்கிறது யோகம். மோகன்லாலுடன் 'சந்திரலேகா' என்னும் பிரமாண்டமான படத்தில் நடிக்கிறார். படத்தை இயக்குவது பிரியதர்ஷன்.

இப்படத்திற்காக ஒரு ஆஸ்பத்திரியை 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திருக்கிறார்கள் என்றால் படத்தின் பிரமாண்டம் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

சுகன்யா ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். இயக்குநர் பிரியதர்ஷனைப் போற்றுகிறார் என்பதால், இயக்குநர் விழிப்பாக இருப்பது நல்லது.

## வாராயோ தோழி

'காதல் கோட்டை' படத்தில் அஜித்குமாரின் நண்பனாக நடித்தவர் கரன். தற்போது பல படங்களில் நடித்து வருகிறார்.

படப்பிடிப்புக்கு வரும்போது கரனுடன் ஒருவர் கூடவே வருகிறாராம். அவரை தனது 'பிசினஸ் பாட்னர்' என்று அழைக்கிறாராம் கரண். அது ஒரு பெண். பிசினஸ் பாட்னர் வாழ்க்கையிலும் பாட்னர் ஆவாரோ?

## ஒதுங்குகிறார்

இப்போதெல்லாம் பத்திரிகையாளர்களைக் கண்டாலே கவுண்டமணி ஒதுங்குகிறாராம். பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தால் வம்பாகிவிடும் என்று மணி பயப்படுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

ஒரு காரணம்: சமீபத்தில் வெளியான பல படங்களில் நீங்கள் ஏன் இல்லை? என்று கேட்பார்கள். காரணம் இரண்டு: சில நடிகைகளுடன் கவுண்டமணிக்குள்ள தனியான உறவு பற்றி துருவிக் கேட்பார்கள். அதுதான் ஒதுங்குகிறார்.

சம்பளம் அதிகமாகக் கேட்பதால் தான் கவுண்டமணி பக்கம் திரும்ப தயாரிப்பாளர்கள் அஞ்சுகிறார்கள்.



சினி விசிட்

ரம்பா (படம்: வி.ஐ.பி)



நலம்
நலம்தானா முத்துச் சுடரே?
இளைய கன்னியின் இடை மெலிந்ததோ
எடுத்த எடுப்பிலே நடை தளர்ந்ததோ
வண்ணப் பூங்கொடி வடிவம் கொண்டதோ?!

## பிரபல பாடகரின் வீழ்ச்சி!

### திரையுலக மறுபக்கம் 4

கணீரென்ற குரலில் பாடி புகழ்பெற்ற பாடகர் எம்.ஜி.ஆர். போல மூன்றெழுத்து இனிஷியலில் அழைக்கப்படுபவர். அழைக்கப்படுகிறார். 'நுணலும் தன் வாயால் கெடும்' என்பார்களே... அது இவருக்கு சரியாகப் பொருந்தும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு பாடகியை திருமணம் செய்து கொண்டதில் இருந்து இவருக்கு இறங்குமுகம். தனது முதல் மனைவியையும் ஒதுக்கிவைத்தார். அப்போது பாடகருக்கு 60 வயது.

இரண்டாவது மனைவிக்காக நகைகள், மயிலாப்பூர் அருகே ஒரு பங்களா, திருவான்மியூர் ஜெயந்தி தியேட்டர் அருகே ஒரு பங்களா ஒன்று வாங்கிக் கொடுத்தார்.

பாடகரின் முதல் மனைவிக்கு பிறந்த மகன் இளம் வயதிலேயே இறந்துபோனார். அவரது பெயரில் இருந்த காப்புறுதிப் பணம் 35 ஆயிரம் ரூபாயை எடுத்த பாடகர் அதனையும் தன் இரண்டாம் மனைவிக்கு கொடுத்துவிட்டார்.

எழுபது வயது நெருங்கியபோது பாடகருக்கு தாம்பத்யத்தில் நாட்டம் இல்லாமல் போனது. அதனால் இரண்டாம் மனைவி பாடகரை விட்டுப் பிரிந்துபோனார். பல இலட்ச ரூபாய் சொத்துக்களையும் கொண்டு போனார்.

பாடகர் இப்போது ஓரளவு மனம் திருந்தி முதல் மனைவியோடு அன்பாக இருக்கிறார். வெளியூர் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் கூட்டிச் செல்கிறார். மனைவியும் "என் கணவர் மாதிரி யாருக்கு பாட வரும்?" என்று பெருமையாகப் பேசுகிறார்.

**பி.கு:** அந்தப் பாடகர் எம்.ஜி.ஆர்., சிவாஜி ஆகியோருக்கும் குரல் கொடுத்தவர். இப்போதும் அவர்பாடிய பாடல்கள் உயிர்த்துடிப்புடன் உலாவருகின்றன.

### மது – மாது – நடிகர்

தமிழ்ப் பட உலகின் முதல் ஏழு நடிகர்களில் ஒருவர் அவர். முன்பு ரசிகையின் கையைப் பிடித்து இழுத்து வாங்கிக்கட்டிக் கொண்டவர்தான். அவரும் அதே தயாரிப்பாளரும் சென்னை நுங்கம்பாக்கத்தில் இருக்கிற ஐந்து நட்சத்திர ஹோட்டலின் அறையில் மது, மாது இத்யாதிகளுடன் இருந்தார்.

நடிகரும் தயாரிப்பாளரும் அதற்காகவே அங்கு அடிக்கடி வந்து கொண்டிருப்பதை ஹோட்டல் பணியாளர் ஒருவர் தொடர்ந்து கவனித்து வந்தார். நடிகரின் சுயரூபத்தை அம்பலமாக்க விரும்பினார். அதனால் நடிகரின் மனைவிக்கு போன் செய்து சொன்னார்.

நடிகரின் மனைவி அந்த இரவிலேயே காரை எடுத்துக்கொண்டு ஹோட்டலுக்கு வந்தார்.

கணவர் இருந்த அறைக்கதவை தட்டவே அவசியமில்லாமல் அது திறந்தது. உள்ளே பார்த்தால் நடிகர்-தயாரிப்பாளரைச் சுற்றி மூன்று அழகிகள். நடிகர் மதுவை அருந்தியபடி அழகிகளோடு ஜோக் அடித்துக் கொண்டிருந்தார்.

மனைவியைக் கண்டுவிட்டார் நடிகர். தயாரிப்பாளரும், அழகிகளும் என்ன ஏது நடக்கப் போகிறதோ என்று பயந்துபோனார்கள். ஆனால் நடிகர் கவலையேபடாமல் "என்ன என்ன இங்கே வந்திருக்கே?" என்று கேட்டார். "நீங்க குடிச்சிட்டு விழுந்து கிடக்கிறதா சொன்னாங்க. அது... தான் பார்த்து அழைச்சிட்டுப் போகலாம்னு..." என்றார்.

"அதான் பார்த்திட்டியே, நான் நல்லா இருக்கேன். கவலைப்படாம வீட்டுக்குப் போ" என்று நடிகர் அதட்டலாகச் சொல்ல மனைவி பதிலேதும் சொல்லாமல் திரும்பிச் சென்றார்.

**பி.கு:** சமீபத்தில் ஒரு நடிகையை திருமணம் செய்யப்போவதாக பேசப்படும் நடிகர் அவர். தற்பாது மனைவியைப் பிரிந்து இருக்கிறார். கம்பீரமான குமாரர்போல் இருப்பார்.


படிப்பகம்

www.padippakam.com

# ஆடவர் கண்கள் பாய்வது எங்கே?

## காதலன்களிடம் ஓர் ஆராய்ச்சி!

புற அழகு என்றால் என்ன?

இவ்வினாவுக்கான விடையினை எவராலும் திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது.

பெண்களின் முகத்தில்தான் அழகு குடிகொண்டுள்ளது என்பார்கள்.

கண்கள்தான் அழகை வெளிக்காட்டுகின்றன என்பர் சிலர். வாய்- அதரங்களின் அழகை வர்ணிப்பர் சிலர். நாசியை- கன்னங்களை- நெற்றியை- கழுத்தை கூந்தலை- இவ்வாறு தனித்தனியாக முகத்திலுள்ள- முகத்துடன் இணைந்த ஒவ்வொரு அவயவத்தையும் தனித்தனியே அழகென வர்ணிப்பவரும் உள்ளனர். ஒவ்வொருவரும் தத்தமது மனப்பாங்குக்கு ஏற்ப அழகுக்கு அடையாளம் காட்டுவர்.

புற அழகு என்பது உண்மையில் ஒரு பெண்ணின் முழுத் தோற்றத்தின் ஒட்டு மொத்தமான அமைப்பைப் பொறுத்தது. அவளுடைய அங்கங்கள் அத்தனையும் அளவுடன் அமைந்திருக்குமானால் அதுவே அழகாகும்.

முற்காலத்தில் வாழ்ந்த மேலோர் 'சாமுத்திரிகா லட்சணம்' எனும் சாஸ்திரத்தை வகுத்து மாநிடப் பிறவியின் ஒவ்வோர் அங்கமும் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்று தெளிவாகக் கணக்கிட்டுக் கூறியுள்ளனர். அங்கலட்சணங்களைக் கொண்டு, அவற்றுக்குரியோரின் குண இயல்புகளையும் வகுத்துத் தந்துள்ளனர்.

ஒருவருடைய கண்களுக்கு அழகாகத் தோன்றும் ஒரு பெண், மற்றுமொருவருக்கு அழகின்றித் தோன்றுவாள். ஒவ்வொருவருடைய இரசனையும் மாறுபட்டிருப்பதனால் இந்நிலை ஏற்படுகிறது. ஆகவே அழகற்றவர் என்று ஒருவரையும் ஒதுக்கி விடலாகாது. ஒரு பெண்ணின் ஏதாவது ஒரு அவயவம், ஏனையோருடையதிலிருந்து மாறுபட்டுத் தனி அழகுடன் தோற்றமளிக்கும்.

ஓர் இளம் பெண்ணை ஓர் ஆடவன் பார்க்கும் போது, முதலில் அவன் கண்கள் மொத்தமாக அவளுடைய முகத்தில்தான் மொய்க்கிறது. பொதுவாக முகத்தை அலசும் அவன் கண்கள், அடுத்து அவளுடைய கண்களை ஊடுருவுகின்றன. இவ்வேளையில் அவள் புன்னகைக்கிறாள். அதேவேளை அவளுடைய அதரங்களையும் பல்வரிசையையும் அவன் கண்கள் தொட்டுத் துழாவுகின்றன.

அவளுடைய பல் வரிசையும் அதரங்களும் அழகாக இருக்குமானால்தான் அவளுடைய புன்னகை அவனை ஈர்க்கும். இல்லாவிட்டால் அவன் பார்வையை வேறுபுறம் திருப்பிவிடுவான்.

புன்னகையில் மயங்கும் அந்த ஆணின் பார்வை அடுத்து வட்டமிடுவது அவளுடைய கூந்தலை. அதற்கு அடுத்தபடியாக அவனைச் சுண்டியிழுப்பது அவளுடைய கவர்ச்சியான மார்பகங்கள். மார்பகங்களில் மயங்கினாலும் அவனுடைய மனம் ஒரு பெரும் சந்தேகத்தைக் கிளப்ப மறப்பதில்லை. தான் காண்பது வெறும் போலியாக இருக்குமோ என்றும் ஐயுறுவான்.



இக் கட்டத்தைத் தாண்டி அவன் கண்கள் பாய்வது அந்த மங்கையின் பின்புறம் அமைந்த அழகுகள். அதனைத் தொடர்ந்து அவளுடைய பாதங்கள் மற்றும் கால்விரல்கள். அதன் பின்னர் தான் அவளுடைய கைகள்- விரல்கள் ஆகியவற்றின் மீது அவனுடைய பார்வை படர்கின்றது.

இத்தனைக்கும் பிறகு அவனுடைய மனம் திருப்திப்பட்டால் மட்டுமே அவளை மீண்டுமொரு முறை அவன் பார்ப்பான்.

இதனால்தான் ஒரு பெண் தனது ஒவ்வொரு அங்கத்தையும்- அவை அழகற்றவை என்று கருதப்பட்டாலும், அவற்றை செயற்கை முறையிலாவது அழகூட்ட முயலுகிறாள்.

என்ன முறைக்கிறீர்கள்? இவை நம்ம கண்டுபிடிப்பல்ல. அமெரிக்க உளவியல் பேராசிரியர் றோய் மக்மிலன் கண்டுபிடித்திருக்கும் சமாச்சாரங்கள். காதல் வசப்பட்ட நூறு ஆண்களின் மனதைத் துருவி ஆராய்ந்து இந்த உண்மைகளைப் புட்டுவைத்திருக்கிறார் மனிதர்.

# கோடையோ கோடை

## இல்லத்தரசிகள் கவனிக்க!

நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்தாலும் பொதுவாக இது கோடைக்காலம் தான். இக்கோடை காலத்தில் நமது இல்லத்தரசிகளுக்குச் சில உபயோகமான ஆலோசனைகள்:

* கோடையில் வெப்பம் அதிகமாகவே இருக்கும். உடல் தகிக்கும்; வியர்வை உடலையும் உடைகளையும் நனைக்கும். ஆகவே, செயற்கைத் துணிகளான ரேயான், நைலோன், பொலியெஸ்டர் போன்றவற்றை நிறுத்தி பருத்தித் துணிகளையே அணியுங்கள்.
* பகல் வேளைகளில் வீட்டின் கதவுகள், யன்னல்கள் ஆகியவற்றை முழுமையாகத் திறந்து வைத்து- வெப்பமானதாக இருந்தாலும்- காற்று நன்றாக எங்கும் உலவி வர அனுமதியுங்கள்.
* உணவில் காரத்தை வெகுவாகக் குறைத்துக் கொள்ளுங்கள். காய்கறி, கீரை வகைகளை அதிகமாகச் சேர்த்து, அசைவ உணவுகளை முற்றாக நீக்கினாலும் நல்லது. வெள்ளரிக்காய், தக்காளி, ஈர வெங்காயம், வாழைத்தண்டு ஆகியவை இக்காலத்துக்கு ஏற்றவை. தயிர், மோர் தாராளமாகப் பாவிக்கலாம். இளநீர், தோடம்பழம், திராட்சைப் பழங்கள் ஆகியவை பகலில் தாகத்தைத் தணிக்க உதவுவதுடன் உடலுக்கு



வேண்டிய தாது உப்புக்களையும் இயற்கையாகத் தந்துதவுகின்றன

* எல்லா வீடுகளிலும் குளிர்சாதனப் பெட்டிகள் கிடையாது. காய், கறிகள் வாடி வதங்கி விடாமலிருக்க வினாகிரியை சிறிதளவாக நீரில் கலந்து, காய்கறிகளை ஊறவைத்து பிறகு எடுத்துப் பயன்படுத்துங்கள்.

வாய் சிறுத்து உடல் பருமனான மண்குடத்துள்- கொதித்து ஆறிய நீரை வடிகட்டி- ஊற்றி வையுங்கள். வீட்டின் ஒரு மூலையில் 10 செங்கற்களை அணை போல் அடுக்கி, அதனுள் மணலைக் கொட்டிப் பரப்பி, அதன்மேல் நீர்க்குடத்தை வைத்துக் கொள்ளலாம். குடத்தின் மூடியும், களிமண்ணால் ஆனதாக இருந்தால், அக்குடத்திலிருந்து எடுத்துப் பருகும் தண்ணீர் 'ஜில்' லென்றிருக்கும்.

* வெயில் காலத்தில் முகத்துக்கு அளவோடு ஒப்பனை செய்வது அவசியம்.
* காலையில் வேளைக்கு எழுந்து, வீட்டு வேலைகளை முடித்து விடுவது நல்லது. வீடு கழுவுதல், துணி துவைத்தல் போன்றவற்றை வெயில் ஏற முன் செய்து கொண்டால் விரைவில் காய்ந்து விடும். உங்களுக்கு வியர்வைத் தொல்லையும் இருக்காது; களைப்பும் இருக்காது.

# பதமான பாதங்கள் இதமான யோசனை

பெண்களுடைய பாதங்களும் கைகளும் அழகாக அமைந்திருப்பது அவசியம். எமது உடம்பிலுள்ள முகம், சிகை போன்றவற்றை அழகாக வைத்திருப்பதிலேயே அதிக கவனம் செலுத்துகிறோம். கைகளையோ, கால்களையோ-குறிப்பாகப் பாதங்களையோ நாம் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை.

ஏனைய உறுப்புகளைப்போன்று எமது கைகளும் கால்களும் கூட எமக்கு அழகு தருபவை-பிறரைக் கவர்ந்திழுப்பவை என்பதை மறந்துவிடலாகாது.

ஒவ்வொரு பாதமும் 26 எலும்புகளையும் 19 தசைகளையும் 100 தசை நார்களையும் கொண்டது. இவை தவிர ஏராளமான நரம்புகளும் இரத்த நாளங்களும் பின்னிப் படர்ந்துள்ளன. இத்தகைய மிக நுணுக்கமான சாதனங்களை ஒருங்கிணைத்துப் பின்னப்பட்ட பாதம், எப்போதும் மிகக் கவனமாகப் பேணப்படவேண்டியது அவசியமாகும். அத்தோடு- அதிக பழுவைத் தாங்கி பல மணி நேரம் பணிபுரியும் பாதங்களுக்குப் போதிய ஓய்வும் அவசியம் தேவை.

நீங்கள் பெரும்பாலும் பாதணிகளுடன் நடமாடுவது வழக்கமானால் சில சந்தர்ப்பங்களில் சில பிரச்சனைகள் தோன்றக் கூடும். அச்சந்தர்ப்பங்களில் பாதணிகளை அணியாமல், பாதங்களை நிலத்தில் பதியும்படி நன்றாக அழுத்தி நடந்து பாருங்கள். அத்துடன் பாதங்களுக்கு ஏதாவது களிம்பு அல்லது எண்ணை பூசி அழுத்துவது (மஸாஜ் செய்வது) பலன் தரும். படுக்கைக்குச் செல்வதற்கு முன் அளவான சூடான நீரில் பாதங்களை 10 நிமிடங்கள் வரை வைத்திருக்கலாம்.

பாதத்தின் சில பகுதிகளில் கட்டி போன்ற வளர்ச்சி இருக்குமானால், மாக்கல்லால் அவ்விடத்தை மெதுவாக அழுத்திவிடலாம்.

பாதத்தில்-குறிப்பாக விரல் இடைவெளிகளுக்குள் நீர்த்தன்மை இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பாதங்களை சவர்க்காரம் போட்டுத் தேய்த்து நன்றாகக் கழுவியபின் ஈரமில்லாமல் துடைத்து விட வேண்டும். பின்னர் ஏதாவது முகப்பவுடர் பூசிவிடுவதும் நல்லது.

## கைவீசம்மா கைவீசு

கால்களைப் போன்று கைகள் பெரும் பிரச்சனை தருவதில்லை. நகங்கள் தொல்லை தரலாம். அவற்றை உரிய முறையில் பேணிப்பாதுகாத்தால் எத் தொல்லையும் தலைகாட்டாது.

பெண்கள் அதிகமாகப் பார்த்திரங்கள் தேய்த்துக் கழுவுதல், அழுக்குகளை அகற்றுதல் போன்ற வேலைகளைச் செய்வதால் நகங்களில் அழுக்குகள் சேர்ந்துவிடும். அழகுக்காக நகங்களை வளர்ப்பவர்கள் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும், நகங்களில் அசுத்தம் சேரவிடாமல் சவர்க்காரம் போட்டு நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். காலத்துக்குக் காலம் நகங்களை வெட்டுதல் வேண்டும்.



நகங்களைப் பற்களால் கடிப்பது மிகவும் மோசமான பழக்கம். நகங்களின் அழகு கெடுவதுடன் வாயிலும் அரிப்பு மற்றும் புண் ஏற்படவும் வாய்ப்புண்டு. அத்துடன் பலர் ஒன்றுகூடும் இடங்களிலும் நகங்களைக் கடிக்கும் கெட்ட பழக்கம் ஏற்பட்டுவிடும்.

எல்லோருடைய கைகளும் விரல்களும் இயல்பாக அழகாக இல்லாதிருக்கலாம். ஆனால் அவற்றையும் கவர்ச்சியுள்ளவையாக மாற்றமுடியும். தூய்மையாக வைத்திருப்பதும் ஓர் அழகுதான். பெண்களின் காலழகையும், கை அழகையும் ஆராய்ந்து அவற்றுக்குப் புள்ளியிடும் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் இருக்கிறார்கள்.

கால்களைப் போலவே கைகளில் ஒவ்வொன்றிலும் 27 எலும்புகளும் தசைகளும் தசைநார்களும் பின்னிப் பிணைந்துள்ளன. எனினும் கால்களைப் போன்று பெரும் பிரச்சனைகள் கைகளில் தோன்றுவதில்லை. ஆனால் கைகளின் தன்மையைக் கெடுக்கும் 'வில்லன்' தோல்தான்.

வாரம் ஒரு தடவையாவது முழங்கைக்கு மேலிருந்து விரல்களின் நுனிவரை அளவான வெந்நீரில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணையும் சில துளி எலுமிச்சம் பழச்சாறும் கலந்து- 5 நிமிடங்கள்வரை வைத்திருக்க வேண்டும், பொருத்தமான களிம்பினைத் தேர்ந்தெடுத்து கைகளில் பூசுவதையும் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

கதிரவனின் ஊதாக்கதிர்கள் எமது சருமத்தின் பொது எதிரியாகும். இக்கதிரினால் எமது உடலுக்குத் தேவையான அம்சங்களும் கிடைக்கின்றன என்ற போதிலும் சருமத்தை விரைவில் பாதிப்புக்குள்ளாக்குகின்றன இக் கதிர்கள். ஆகவே கூடுமானவரை கதிரவனின் நேரடியான தாக்கத்துக்கு இடமளிப்பதைத் தவிர்ப்பது நல்லது. கதிரவன் உடனடியாக தனது 'கொடுமை'யை ஏற்படுத்துவதில்லை, சிறிது சிறிதாக சருமத்தில் நுழைந்து, தன்னுடைய வேலையை மெதுவாகவே ஆரம்பித்து விடுவான்.

எம்முடலில் கதிரவன் ஏற்படுத்தும் மாற்றத்தை நன்றாக அவதானிக்கலாம். ஆடைகளால் மூடி மறைக்கப்பட்ட எம் உடலின் பாகங்களையும்-மறைக்கப் படாமலிருக்கும் முகம், பிடரி, கால்-கைகள் போன்றவற்றையும் பார்த்து கதிரவனின் கொடுமையை அவதானித்துக் கொள்ளுங்கள்!.

# நிறம் மாறும் கூந்தல்

## மாறும் எண்ணங்கள்- மாறும் வர்ணங்கள்

கூந்தல் கரு கரு என்றிருக்க வேண்டும் என்றுதான் நம் பெண்கள் விரும்புவார்கள். மேல் நாட்டுப் பெண்கள் கறுப்புக் கூந்தலை விரும்புவதில்லை. அவர்களுடைய கூந்தல் கறுப்பாக வளர்வதுமில்லை.



அமெரிக்கப் பெண்கள் தங்கள் கேசங்களின் வர்ணத்தை அடிக்கடி மாற்றுவதில் நாட்டம் கொண்டுள்ளனர். தங்கள் முடியை பல வர்ணங்களில் தோய்த்து, காலத்துக்கு ஒரு வர்ணத்தில் காட்சி தருகின்றனர்.

இக் காலங்களில் செயற்கை முடிகளை ('விக்'- டோப்பா) தொப்பிமாதிரி அணிந்து கொள்கின்றார்கள். 'நைலோன்' போன்ற செயற்கை நாரிழைகளிலும் 'விக்கு'கள் செய்து மாட்டுகிறார்கள். ஆனால் மனிதர்களுடைய முடிகளுக்குத்தான் மேலை நாடுகளில் கிராக்கி அதிகம். இயற்கையான முடியின் இறக்குமதி அமெரிக்காவில் அதிகம். அமெரிக்காவுக்கு முடி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா பிரதான இடத்தைப் பெறுகிறது.

இந்தியாவில் இத்தனை தொகையான முடி எங்கு கிடைக்கிறது தெரியுமா?

ஆந்திரா மாநிலத்திலுள்ள திருப்பதியிலிருந்தும் தமிழ்நாட்டிலுள்ள பழநியிலிருந்தும் தான் ஏராளமான முடி அயல் நாடு செல்கிறது.

திருப்பதி வெங்கடாஜலபதி தேவஸ்தானத்திலும் பழநி தண்டாயுதபாணி தேவஸ்தானத்திலும் தினசரி முடி காணிக்கை செலுத்துவோர் தொகை ஆயிரத்துக்கும் மேல். கெண்டைக்கால் வரை முடி வளர்த்த சில இளம் பெண்கள் தங்கள் அடர்த்தியான முடியை ஆண்டவனுக்குக் காணிக்கையாக அர்ப்பணித்து விட்டு, மொட்டையில் சந்தனத்தை அள்ளிப் பூசிக்கொண்டு போகும் காட்சியை அன்றாடம் காணலாம்.

பாரிஸ் நாட்டு அழகிகளுக்கு இப்போதெல்லாம் பல வர்ணச் சிகையில் நம்பிக்கை போய்விட்டது. அவை அடிக்கடி சாயம் கழன்று போய் மானத்தை வாங்கிவிடுகின்றனவாம். அந்த நகரத்து நவீன நாகரிகப் பெண்கள் கறுப்பு நிற (இயற்கை) முடி 'விக்' தேடி அலைகிறார்களாம்.

# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

## தக்காளி ஊறுகாய்

தேவையானவை:

தக்காளிப்பழம்- 1/2 கிலோ
வெங்காயம் – 2
மிளகாய் – 8
இஞ்சி – 1 சிறிய துண்டு
பூண்டு – 3 பல்லு
வினாகிரி – 2 தேக்கரண்டி
சீனி – 2 தேக்கரண்டி
எண்ணெய் – தேவையான அளவு
உப்பு – தேவையான அளவு

செய்முறை:

தக்காளியைக் கொதிக்கும் நீரில் போட்டு 2 நிமிடம் மூடி வைத்து பிறகு எடுத்து உலர்த்தவும். இஞ்சி, பூண்டு, வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை தண்ணீர் விடாமல், வினாகிரி ஊற்றி அரைக்கவும். அடுப்பில் வாணலியை வைத்து, அரைத்த மசாலாவைப் போட்டு எண்ணெய் சேர்த்து வதக்கவும். தக்காளியைத் தோலுரித்து கையால் கரைத்து ஊற்றவும். தண்ணீர் நன்றாக வற்றி வரும் போது இறக்கி ஆறவிடவும். பின்னர் ஜாம் போத்தல்களில் ஊற்றி, இறுக மூடி வைக்கவும். தேவையானபோது எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**க. கற்பகமலர்,**
38, சென்பெனடிக் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BR

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 31-05-1997

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப்போட்டி

தினமுரசு— அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 12

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## பருவகால கார் மேகம்

அதோ...
சந்தைக்கு வந்திருக்கிறது...
பருவ கால பச்சைக்கிளி!
பழகிய முகம்,
பார்த்த சிவப்பு,
என்னை சறுக்கடித்த சிரிப்பில்தான்
சின்னதாய் ஒரு சிதறல்...!
மற்றதெல்லாம்...!
0–0
என்னவளே...!
எனைக் கொன்றவளே!
நலமாய் இருக்கிறாயா?
என் இதயம் நலமாய் இருக்கிறதா...?
இல்லை...
நீ மூலையில் எறிந்துவிட்ட
வேதனையில்
இன்னும் முனகிக்கொண்டிருக்கிறதா...?
என் தவறுதான்...
எல்லாக் காதலர்களையும் போல்
இதயத்தை மட்டும் கொடுக்காமல்
என்னையே கொடுத்தது...!
போகட்டும்...!
0–0

## கல்வி விளம்பரம்

கல்விவிற்பனை!
கவலையின்றி வாருங்கள்!
காலை முதல்
மாலை வரை..!
கணிதம் ஒரு கிலோ 200/=
விஞ்ஞானம் ஒரு கிலோ 175/=
வர்த்தகம் ஒரு கிலோ 150/=
தமிழ் ஒரு கிலோ 100/=
•
பரீட்சைக்கேற்ப....
நிறுவைகள் உள்ளன!
பாரமில்லாமல்
'கல்வி'
சிறு சிறு...
பொதி செய்யப்பட்டுள்ளது!
•
பாடசாலையில்
மொத்தமாகப் பெறுவதை விட...
எங்களிடம்
சில்லறையாகப்
பெற்றுக்கொள்ளலாம்!
மேலதிக
விபரங்களுக்கு...
'கல்வியியல் முதலாளி'
கல்லூரி குறுக்குத்தெரு,
இலங்கை.
•

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவை.

## தேன் கிண்ணம்

பக்கத்தில் யார்???
கணவனா...?
தோளில் தூங்கும் குழந்தை–
கவனமாகப் பார்த்துக் கொள்!
உன்னைப் போல் மௌனமாய் இருந்து
அவளும்...
என்னைப்போல் இன்னொருவனைக்
கொன்றுவிடக்கூடாது..!
முதலில் காதலிக்கக் கற்றுக்கொடு...!
0–0
எவளைப் பார்த்தால் ஏவுகணைபோல்
இதயத்தில் இரத்தம் பீச்சும்
இரசாயன மாற்றம் ஏற்படுமோ....
எவளின் வாழ்வு–என்
வசந்தமென்றெண்ணினேனோ...
எவளின் மூச்சில்
என் சுவாசமுள்ளதோ...
எவளை மறந்தாலும்,
எவள் மறுத்தாலும்
இயற்கையழிந்து–நான்
இறந்துபோவேனென எண்ணினேனோ..
அந்த உனக்கு
இந்த வரிகளைப் போல்...
என்னையும் புரிந்திருக்கவில்லை...;
பரவாயில்லை....!
0–0
போனதுகள் போகட்டுமடி...
என்னை ஏமாற்றாமல்
சகத்தை நீ எடுத்துக்கொண்டு
சோகத்தையாவது கொடுத்தாயே..
போதும்... போதும்...
வேதனைகள் கொடுத்தாலும்
எழுதுவதென்னவோ உன்னை மட்டுமே!
சிரிக்காதே...!
இன்னொருமுறை என்னால்
இறக்க முடியாது...!
0–0
போகப் போகிறாயா?
போவதற்கு முன்
விதியை மறந்துவிட்டு–என்
கேள்விக்கு பதிலைச் சொல்...!
எப்பொழுதேனும்...
"நீயும் என்னைக் காதலித்திருக்கிறாயா?"
இப்பொழுது பிரிவோம்....;
காலம் சுழன்று,
நானும் இருந்தால்...,
என் மனைவியிடம் சொல்லிவைக்கிறேன்...
மீண்டும் சந்திப்போம்...!
போய் வா...!
போய் வருகிறேன்...!
0–0

அகன் கபிலன், வவுனியா.

## சோடிக் குருவிகள்!

என்விழிக் கூட்டுக்குள்
நீ–
வசித்திருக்கும்
காலமெலாம்..
வசந்த காலம் தான்!
•••
எனக்காக–நீ
இரை தேடி வருவதுவும்,
அலங்கரித்து மகிழ..
பூப்–பொறுக்கித் தருவதுவும்...
எத்தனை இன்பம்?
•••
பிரிவுப் பயமும்
கார்காலக் குளிரும் சேர்ந்து
என்– மேனி
நடுங்கும் போதெல்லாம்..
தோள்களுக்குள்
சேர்த்தணைத்து
சுகம் தருவாயே...
அந்த மெல்லிய
கத கதப்பில்தான்.
எத்தனை நிம்மதி?
•••
உன்– சோடிக்கு
நீ–தரும் சொர்க்கம்
ஏழுலக சிருங்காரத்
தித்திப்புக்களையெல்லாம்
மிஞ்சியது தான்!
•••
என் சந்தோசத்துக்காக..
நீ சந்திக்கும்
சமர்களும்...
சங்கடங்களும்...
உன்னை
பாதிப்பதில்லையா?
•••
இவ்வளவு குதூகலங்களை
குறையாமல் சொரிய
உன்னால்
எப்படி முடிகிறது?
•••
அன்பே...!
உன் காதலின்
நேசத்தில்
கரைந்து கரைந்து..
புளகித்திருக்கும்
என்–ஜீவனை...!
இன்னும் தாங்காமல்
சற்றே தவிக்க விடு!
•••
அன்பைத் தந்து தந்தே
ஆயுட் கால
கடனாளியாக்கி விட்டாய்...!
"போ"– என்று
புறக்கணித்தாவது
என்னைக்
கண்ணீர் சிந்த விடு!!
•••
மனிதர்களைப் போல்,
பொய்க் குற்றமாவது
சுமத்தி
என் மீது
வழக்குப் போடு!
ஒரு தரமேனும்–
ஊடல் கொண்டு
தண்டனை தா!
முடியா விட்டால்,
கூட்டிலிருந்து
தள்ளி விட்டாவது
என்னைக் காயப்படுத்து!
•••
காதலனே!
ஆர்த்து வரும்
உன் அன்பலைகளைத்
தாளாமல்
மூச்சுத் திணறுகிறேன்;
ஏய்...!
இன்றே
சந்தோசமாய்
சாக வேண்டும்....
சின்னச் சாபமிடு.
•••

மருதூர், அனார்க்கலி.

## காதல்

யுத்த மழை
இரத்தங்கள் சிந்தும்:
சத்தமிட்டு போர்விமானம்
கிட்டவந்து,
நம் பொனைநாட்டை
முத்தமிட்டு விரைந்தோடும்...!

வெட்ட வெளியில் தனிமரமாய்
கால் நீட்டிக் கிடக்கும்,
பொட்டல் காடு
வட்டுக் கருகி வண்ணமிழந்து
சுற்றிச் சுழன்றடிக்கும்
போர்ப்புயலில் பரிதவிக்கும்...!

உயிர் இருந்தும் உணர்வு
பட்டுப் போன வாழ்வில்
புழுதி படிந்து பசுமை மறையும்
சோகப் பயணத்தில்
பட்ட மரக் காட்டுக்குள்ளே
ஒரு மொட்டுச் சிரித்தது போல்
என்னவளின் நினைவு முகிழ்ந்தது:

ப.ராதா, வவுனியா.

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர்விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 20 பேரின் பெயர், விபரங்கள் கடந்த வாரம் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ.

21. செல்வி. அஷ்ரபியா அஷ்ரப்
26/6, பள்ளி வீதி,
எலந்தகொட, பேருவளை.
22. சஞ்ஜித் வேலாயுதம்
குசலை,
பங்கதெனியா.
23. செல்வி.சி. அருளானந்தம்
634/1, ஸ்டேசன் வீதி,
ஹுனுப்பிட்டிய, வத்தளை.
24. எஸ். சுதன்
95/22, மோதர வீதி,
கொழும்பு-15.
25. பாத்திமா ஆதிலா ஹம்தூன்
72, வான் வீதி,
புத்தளம்.
26. செல்வி.எம். ஜெயந்தி,
143/27, பண்டாரநாயக்கா மாவத்தை,
கொழும்பு-12.
27. சி. அருணாசலம்
79/26, தெய்யனவலை,
கண்டி.
28. என். முகமட் பாரீஸ்
றிஸ்வி நகர்,
புதிய காத்தான்குடி-1.
29. சஞ்யுக்தா யோசப்
17/21, பாரதி வீதி,
திருகோணமலை.
30. எம். முத்துசாமி
4 ஏ,தொலஸ்பாகே வீதி,
நாவலப்பிட்டி.
31. எம். திருநிறைச் செல்வி
64, கொலனி வீதி,
மன்னம்பிட்டி,
பொலன்னறுவ.
32. நடராசா சாந்தினி,
29, சித்தி விநாயகர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.
33. ஏ. நஜீமா
155/2, பேராறு,
கந்தளாய்.
34. பேரோசா யாசின்
56, சியம்பலாபிட்டிய,
கேகாலை.
35.. சி. கந்தகுமார்,
ஆலையடி வேம்பு வீதி,
அக்கரைப்பற்று-7.
36. செல்வி. நிர்மலா சாரங்கபாணி
30 ஏ, டன்பார் வீதி,
ஹட்டன்.
37. கே. பங்கையற் செல்வி
152, ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா.
38. வைரமுத்து சிறீமணி வதனி
பாலையடி ஆலய வீதி,
காரைதீவு-9
39. என். இராமச்சந்திரன்
P.O.BOX-177,
SAFAT-13002,
KUWAIT.
40. ஆர். ஹெலன்ராஜ்
GREFRATHER ST-20,
41564 BUTTGAN,
GERMANY.

(ஏனைய விபரங்கள் அடுத்தவாரம்)

## யார் இவர் யார்?



குழந்தையாகவும், சுட்டிப்பையனாகவும் போஸ் கொடுக்கும் இவர் இன்று பிரபல இளம் நடிகர். நடிப்புலக இமயத்துடன் நடிக்கும் வாய்ப்பும் பெற்றவர். கலைக்குடும்பத்தில் இருந்து வந்தவர். என்ன, யார் என்று தெரிகிறதா? கண்டுபிடியுங்கள். விடையை சரிபார்க்க பக்கம் 18.

## மீண்டும்...

என்னுள்ளும் சில
இரகசியங்கள்!
கட்டிக் காப்பது
எப்படி?

பத்திரமாக
மிகவும் பத்திரமாக
காக்கத்தான் நினைக்கிறேன்
முடியவில்லை.
***
சிறுவனுக்குக் கிடைத்த
நாணயத்தைப் போல
சிறுவனின் சந்தோசத்தோடு
பாதுகாக்க முடியவில்லை!
***
செலவு வருகிறது.

வாலிபனுக்குக் கிடைத்த
முதல் முத்தம்போல,
வாலிபக் கிளர்ச்சியுடன்
பாதுகாக்க முடியவில்லை!
***
கனவு வருகிறது

போராளிக்குக் கிடைத்த
முதல் காயம் போல,
போராளியின் கவனத்துடன்
பாதுகாக்க முடியவில்லை
யுத்தம் வருகிறது
மண்ணுக்குக் கிடைத்த
மழைத்துளி போல
மண்ணின் பெருமையுடன்
பாதுகாக்க முடியவில்லை.
மழை மீண்டும்
எனக்குக் கிடைத்த
உன்னைப் போல
எப்போதும் இரசித்தபடி
பாதுகாக்க முடியவில்லை.
இன்னொருத்தி அனுமதி
கேட்கிறாள்.

சுபா வரன், கண்டி

## இந்த வாரம் உங்கள் பலன்

(25.05.1997 தொடக்கம் 31.05.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், வெள்ளி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மேடம் | - புதன். |

★ சந்திரன்- தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கடன் படல். | மு.ப. | 10 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், காரியத் தடை. | பி.ப. | 3 மணி |
| சனி- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | பகல் | 12 மண |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | காலை | 7 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பலவித பேறு. | பகல் | 11 மணி |
| சனி- உயர்ந்த நிலை, ஆடம்பரச் செலவு. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | மு.ப. | 9 மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கடன் தொல்லை நீங்கும் | பி.ப | 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியசித்தி. | பி.ப. | 1 மணி |
| சனி- புதிய முயற்சி, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, காரியத்தடை. | பி.ப. | 3 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- இனசனப் பகை, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| சனி- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பி.ப. | 3 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியக் கேடு. | பி.ப. | 1 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, பணவரவு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. | 9 மணி |
| சனி- பெரியோர் உதவி, காரிய சித்தி. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் | 12 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, காரியத்தடை. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 1 மணி |
| புதன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வியாழன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, கௌரவம். | மு.ப. | 10 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- குடும்ப நன்மை, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| புதன் - தொழில் சிறப்பு, உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, மனக் கலக்கம் | பகல் | 12 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தொழிலில் பிரச்சனை. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- காரியத்தடை, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. | 3 மணி |
| புதன்- பெரியோர் நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- இனசன நம்மை, பணச் செலவு | பகல் | 11 மணி |
| சனி- கடன் சுமை, மனக் கவலை. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, ஆடம்பரவாழ்வு. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பலவித பேறு. | பகல் | 12 மணி |
| வியாழன்- மனக் கலக்கம், தொழில் மந்தம். | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 மணி |
| சனி- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பணவரவு. | பகல் | 12 மணி |
| புதன்- தூர இடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம் | பகல் | 12 மணி |
| சனி- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 மணி |
| புதன்- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. | 3 மணி |
| வியாழன்- தொழிலில் பிரச்சனை, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com



திலக வாணுத லார் நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.

-சுப்பிரமணிய பாரதியார்.



## சோலைக்குள் ஓர் அரங்கேற்றம்

வண்ணமலரும் ஆடுது
வண்டு தாளம் போடுது
சின்னக் குயிலும் பாடுது
சிரித்து அணிலும் மகிழுது!

பச்சைக் கிளியும் வருகுது
பறந்து பறந்து களிக்குது
இச்சைப் போல மயிலதும்
இங்கும் அங்கும் உலவுது!

நாகம் அண்ணா வருகிறார்
நன்றாய்ப் படத்தை விரிக்கிறார்
ஆகா என்றே நினைக்கிறார்
அங்கே படுத்து இரசிக்கிறார்!

சோலைக்குள்ளே கும்மாளம்
தொடருது புது சந்தோஷம்
காலை முதல் எல்லோர்க்கும்
காட்சி ஒன்று அரங்கேற்றம்!

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்-

## பாப்பா முரசு சிறுகதை

# பேராசை

நெல்லூர் என்ற கிராமத்தில் இரத்தினம் என்ற முட்டை வியாபாரி வாழ்ந்து வந்தான். அவன் தான் ஒரு பெரிய பணக்காரனாகி விட வேண்டும் என்று ஆசைப்படுவான். எப்போதும் தானும் ஒரு பணக்காரனாகக் கற்பனை செய்து கொண்டிருப்பான். அதே சமயம், பெரிய செல்வந்தர்களைக் கண்டால் பொறாமைப்படுவான்.

வழக்கம் போல ஒரு நாள் முட்டை வியாபாரம் செய்து விட்டு, வியாபாரம் செய்த மரத்தடியில் அமர்ந்தான். சிறிது நேரத்தில் தூக்கம் அவனை அணைத்துக் கொண்டது.

சற்று நேரத்தில் ஒரு தேவதை வந்து அவனிடம், "உனக்கு என்ன வேண்டும் கேள், நான் தருகிறேன்," என்றது.

உடனே இரத்தினம், "நான் பெரிய செல்வந்தனாக வேண்டும்," என்றான்.

தேவதை அவனிடம் ஒரு கழுதைப் பொம்மையைக் கொடுத்து, "இதை நீ உன் காலால் உதைத்து என்ன கேட்டாலும் கொடுக்கும். நீ பெரிய செல்வந்தனாக வாழலாம்," என்று சொல்லி விட்டுச் சென்றது.


உடனே இரத்தினம் அந்தக் கழுதை பொம்மையை உதைத்து தனக்கு ஒரு பெரிய பங்களா வேண்டும் என்றான். ஒரு பெரிய மாளிகை வந்தது.

மறுபடி ஒரு உதை உதைத்து காசுகள், நகைகள் வேண்டும் என்றான். அவன் விருப்பப்படி எல்லாம் கிடைத்தது. மறுபடி உதைத்து தனக்கு விலையுயர்ந்த கார் ஒன்றைப் பெற்றுக்கொண்டான்.

சிறிது நேரத்தில் அவனது காலில் ஈரம் பட்டதை உணர்ந்த இரத்தினம் திடுக்கிட்டு விழித்தான். அப்போதுதான், இவ்வளவு நேரமும் தான் கண்டது அனைத்தும் கனவு என்பதை உணர்ந்தான். அதிர்ச்சி அடைந்தான்.

முட்டைக்கூடைகள் எல்லாம் கீழே விழுந்து, முட்டைகள் எல்லாம் உடைந்து மண்ணோடு மண்ணாகி இருந்தன.

தான் கனவு கண்டபோது கழுதை பொம்மையை உதைப்பதாக நினைத்து, முட்டைக் கூடையை உதைத்த விவரம் அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. தனது பேராசையால் பெருநஷ்டத்துடன் வீட்டிற்குப் புறப்பட்டான் இரத்தினம்.



## வாரம் ஒரு நாடு



தலைநகர் - வத்திக்கான் சிட்டி
பரப்பு - 0.4 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை - 1000 பேர்
மொழி - இலத்தீன், இத்தாலியன்
சமயம் - கத்தோலிக்கம்
நாணயம் - லிரா

**வத்திக்கான் நகரம்**

அமைவிடம்: இத்தாலியின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது.

வரலாறு: வத்திக்கான் நகரம் கத்தோலிக்க மதத் தலைவர் பாப்பரசரின் நகரம். இது தனி ஆட்சி உரிமையுள்ள சுதந்திர நாடு. இங்கு புனித பீட்டர் தேவாலயம், வத்திக்கான் அரண்மனை, பொருட்காட்சியகம், வத்திக்கான் தோட்டங்கள் ஆகியவை அமைந்துள்ளன.

வத்திக்கான் நகருக்குச் சொந்தமாகப் புகையிரத நிலையம், அஞ்சல் துறை, காவல் துறை ஆகியவை உள்ளன.

## விடுகதைகளும் விடைகளும்

1. மரமுண்டு இலையில்லை, தண்ணீர் ஊற்றுதல் தேவையில்லை. அது என்ன?
2. ஏற முடியாத மரத்தில் எண்ணிலடங்காக் காய்கள். அது என்ன?
3. சுத்தமாக வந்தவன் அழுக்காகிப் போனாலும் யாருக்கும் கவலையில்லை. அது என்ன?
4. எரியும்போது வருவான், எரிச்சல் மிகவும் தருவான். அவன் யார்?
5. நூல் நூற்கும், ராட்டையும் அல்ல, ஆடை நெய்யும், தறியும் அல்ல. அது என்ன?
6. சிவப்புப் பை நிறைய சில்லறைக் காசுகள். அது என்ன?
7. உப்பைத் தின்றவன் உறங்காமல் அலைவான். அது என்ன?
8. இருட்டுக் காட்டிலே குருட்டுப் பன்றி மேயுது. அது என்ன?
9. ஓட்டை வாயனுக்கு விழுந்த பல் முளைக்கவில்லை. அது என்ன?
10. பஞ்சைத் தின்றவன் படுத்தே கிடக்கிறான். அவன் யார்?

**விடைகள்:**

1. மான்கொம்பு 2. நெற்கதிர்
3. துடைப்பம் 4. புகை
5. சிலந்தி 6. செத்தல் மிளகாய்
7. கடல் 8. பேன்
9. சீப்பு 10. தலையணை

தொகுப்பு: செல்வி. எம். சைரா பானு, புத்தளம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.05.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 194
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 192

பரிசுக்குரியவர்:
கே. நிரோஷ்,
புனித செபஸ்தியார் கல்லூரி, வத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சி. நவராஜ், புனித யோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | ஏ.எம். ஸாமிலா, ஸியான்ஸா, பு/எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. |
| செல்வி மதுமதி பிரான்சிஸ், களுப்பானை டிவிஷன், போர்த்தோட்டம், ஹொரனை. | சூ.செந்தூரன், வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| எம். ஜசிகா யாசினி, குடியிருப்பு, வவுனியா. | செல்வி. ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. |
| எம்.கே.எம். நோநா பாயிஸா, பேஸ்லைன் வீதி, தெமட்டகொட. | எச். இமாமுல் ஹசன், சஹிரா தேசிய பாடசாலை, கம்பளை. |
| செல்வி. நிவேதிகா மனோகர், சைவ மங்கையர் கழகம், கொழும்பு-6. | பி. தவராஜா ராஜாஜி, ஸ்ரீ முத்துமாரி அம்மன் தமிழ் ம.வி. கம்பளை. |

## அபூர்வ உலோகங்கள்

* உலோகங்களிலேயே மிகவும் கனமானது ஆஸ்மியம் என்னும் உலோகம்.
* மிகவும் இலேசான உலோகம் லித்தியம்.
* தங்கத்தை 0.00001 மில்லி மீட்டர் கனமுள்ள மெல்லிய ஏடுகளாக அடிக்க முடியும்.
* இரும்பு போன்ற உலோகங்கள் 1000 பாகை வெப்பநிலையில் தான் உருகும்.
* காலியம் என்ற உலோகத்தை எமது உள்ளங்கையில் வைத்தாலே உருகி விடும்.
* பொட்டாசியம் என்ற உலோகத்தைத் தண்ணீரில் போட்டால், அது மிதந்து அங்கும், இங்கும் அலைந்து கொண்டே தீப்பற்றி எரியும்.
* சோடியம் என்ற உலோகம் காற்றினால் பாதிப்படைவதால்தான் அதை மண்ணெண்ணெயில் போட்டு வைக்கிறார்கள்.



* தங்கம், பிளாட்டினம் போன்ற உலோகங்கள்- அமிலங்கள், காரங்கள், காற்று போன்றவற்றால் எவ்வித பாதிப்பும் அடையாது.

## மாநிலங்களும் தலைநகரங்களும்

எமது அண்டை நாடான இந்தியாவின் தலை நகரம் புதுடில்லி என்பது பலருக்குத் தெரியும். இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களின் தலைநகரங்களைத் தெரியுமா? இதோ அவை:

| மாநிலம் | தலைநகரம் |
|---|---|
| 1. தமிழ் நாடு | சென்னை |
| 2. மகாராஷ்டிரம் | மும்பாய் |
| 3. கேரளம் | திருவனந்தபுரம் |
| 4. ஆந்திரம் | ஹைதராபாத் |
| 5. கர்நாடகம் | பெங்களூர் |
| 6. மேற்கு வங்காளம் | கல்கத்தா |
| 7. ராஜஸ்தான் | ஜெய்ப்பூர் |
| 8. அருணாசல பிரதேசம் | இடா நகர் |
| 9. அஸ்ஸாம் | திஸ்பூர் |
| 10. உத்தரப்பிரதேசம் | லக்னோ |
| 11. ஒரிசா | புவனேஸ்வர் |
| 12. குஜராத் | காந்தி நகர் |
| 13. கோவா | பனாஜி |
| 14. திரிபுரா | அகர்த்தலா |
| 15. நாகாலாந்து | கோஹிமா |
| 16. பஞ்சாப் | சண்டிகர் |
| 17. பீகார் | பாட்னா |
| 18. மத்தியப் பிரதேசம் | போபால் |
| 19. மணிப்பூர் | இம்பால் |
| 20. மிசோரம் | அய்ஸ்வால் |
| 21. மேகாலயா | ஷில்லாங் |
| 22. ஹரியானா | சண்டிகர் |
| 23. இமாச்சலபிரதேசம் | சிம்லா |
| 24. சிக்கிம் | காண்டாக் |
| 25. ஜம்மு, காஷ்மீர் | ஸ்ரீநகர் (கோடைகாலம்) ஜம்மு (குளிர்காலம்) |

தொகுப்பு: எஸ். கலைவாணி, வெள்ளவத்தை.

## தூங்கும் நேரம்



* டொல்ஃபினும், சுறாமீனும் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே, ஒரு மணி நேரம் வரை தூங்குகின்றன.
* குதிரைகள் மூன்று மணிநேரம் தூங்குகின்றன. பெரும்பாலும் இவற்றின் தூக்கம் இரவில்தான்.
* பெண் மான்கள் 2 1/2 மணிநேரம் வரை தூங்குகின்றன.
* சிலவகைக் கடல் சிங்கங்களின் குட்டிகள் சிறு மூச்சு சத்தம் கூட இல்லாமல் 8 மணி நேரம் தூங்குகின்றன.
* பறவைகள் 11 முதல் 12 மணித்தியாலங்கள் வரை தூங்கும். வௌவால்கள் 20 மணிநேரம் வரை தூங்குகின்றன.
* சிம்பான்சி குரங்குகள் மனிதனைப் போலவே 8 மணி நேரம் வரை தூங்குகின்றன. தூக்க நேரத்தில் இவை கனவு காண்பதும் உண்டு.

## குட்டிச் செய்திகள்

* நமது மூளை 10 ஆயிரம் வகையான நறுமணங்களை நினைவுபடுத்திக் கொள்ளக் கூடியதாகும்.
* உலகிலேயே அதிக அளவில் காணப்படும் பறவை எது தெரியுமா? ஆபிரிக்கக் காடுகளில் வாழும் ரெட்பில்ட் கியூலியா என்னும் பறவைதான். இவை ஆயிரம் கோடிக்கும் அதிகமாக உள்ளன.
* பிலிப்பைன்ஸ் நாடு 7 ஆயிரம் தீவுகளைக் கொண்டது. அவற்றில் லூகான், மினிடோனா ஆகிய இருதீவுகள்தான் முக்கியமானவைகளாகும்.
* மெக்சிக்கோ நாட்டில் உள்ள ஜெய்ண்ட் புயா என்னும் தாவரம் 150 வருடங்களுக்கு ஒரு முறைதான் பூக்கின்றது.

## எண் விளையாட்டு

14622047999 இந்த இலக்கத்தை 10ஆல் வகுத்தால் மீதி 9 வரும். 9 ஆல் வகுத்தால் மீதி 8 வரும். 8 ஆல் வகுத்தால் மீதி 7 வரும். அதே போல்6.5.4.3.2 ஆகிய எண்களால் வகுக்கும்போது முறையே 5.4.3.2.1 என மீதிகள் கிடைக்கும்.

* *

37ஐ 1 ஆலும், 37ஆலும் மட்டும்தான்வகுக்க முடியுமே தவிர, வேறு எந்த எண்களாலும் வகுக்க முடியாது. 111.222.333.444.555.666. 777.888.999 ஆகிய இலக்கங்களை 37 ஆல் மீதி இல்லாமல் வகுக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

பழைய புத்தகக்கடையில் அந்த நோட்டுப் புத்தகம் கிடைக்கிறது. கையெழுத்தில் தனது கதையை எழுதியிருக்கிறாள் காயத்ரி. கதையைப் படித்துவிட்டு வந்து தன்னைக் காப்பாற்றும்படி எழுதியிருக்கிறாள். கதை விரிகிறது.

காயத்ரி–ரத்னா என்பவனை மணக்கிறாள். அவன் வீட்டுக்கு செல்கிறாள். ரத்னாவின் நடவடிக்கைகள் புதிராய் உள்ளன. ரத்னாவின் சகோதரி சரசு விதவை. அவளது செயல்கள் சந்தேகம் தருகின்றன. வீட்டு சமையற்காரன் மகள் இந்திராவை உடலில் நகைகளை மட்டும் அணிவித்து நிறுத்தியிருக்கிறாள் சரசு. சிகரெட்டால் இந்திராவின் உடலை சுடுகிறான் அவள் தந்தையான சமையற்காரன்.

கதவு இடுக்கு வழியாக அக்காட்சியைக் காண்கிறாள் காயத்ரி. ரத்னாவிடம் தான் கண்டதை காயத்ரி சொல்கிறாள். சரசை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான் ரத்னா. பின்னர் ரத்னாவும், சரசுவும் இரகசியமாகப் பேசுவதைக் கேட்கிறாள் காயத்ரி. எல்லாம் அவர்களின் நாடகம் என்று தெரிகிறது. தன்னை என்னவோ செய்யப்போகிறார்கள் என்று பயப்படுகிறாள் காயத்ரி. வீட்டுக்குப் பின்புறம் அவுட் ஹவுசில் ஒரு பெண்ணை அடைத்துவைத்திருப்பதையும் காண்கிறாள் காயத்ரி. அதிர்கிறாள். அடைக்கப்பட்டிருப்பவள் நிர்மலா என்று அறிய முடிகிறது.

காயத்ரியின் கதையைப் படித்தறிந்த எழுத்தாளர் உடனடியாக கணேஷ்–வசந்த் ஆகியோரின் உதவியை நாடுகிறார். காயத்ரியைக் காப்பாற்றப் புறப்படுகிறார்கள்.

## அங்கம் 10



# காயத்ரீ



**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

எனக்கு திடீரென்று வயிற்றில் சங்கடம் செய்தது. "கணேஷ்!" என்று அவன் கையைப் பிடித்தேன்.

"என்ன ஸார்?"

"அந்த நிர்மலா! ராஜரத்தினத்தின் முதல் மனைவி!"

"ஆம் நிர்மலா!"

"அவள் கதி காயத்ரிக்கு நேர்ந்து விட்டால்? மனைவி நிர்மலாவையும் இந்த மாதிரிப் படம் பிடிக்கக் கொடுமைப் படுத்தியிருக்க வேண்டும். அதனால் தான் அவள் சித்தம் கலங்கியிருக்கிறாள்! அவளை அவுட் ஹவுஸில் அடைத்து விட்டு மற்றொரு கல்யாணம் பண்ணிக் கொண்டு அவளை வைத்து என்ன மோசமான படங்கள்! கணேஷ். நாம் போய் விமோசனமில்லாமல் போய் விட்டது பார்த்தாயா?"

"என்ன ஸார் சொல்கிறீர்கள்? தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று உயிரோடு வந்திருக்கிறோம்...."

"காயத்ரியை எப்படியாவது காப்பாற்றியிருக்க வேண்டும். சே! நான்தான் முட்டாள்தனமாக, கவனக்குறைவாக காரியத்தையே கெடுத்துவிட்டேன்..." என்றேன்.

"இப்போது மறுபடியும் போய் அவளை விடுவிக்க வேண்டும் என்கிறீர்களா?" என்றான் கணேஷ்.

"எப்படியாவது, எப்படியாவது!" என்றேன்.

"எப்படி? சொல்லுங்கள்!"

"பாவம் அந்தப் பெண்."

"வசந்த், நான் சொன்னபடி செய்தாயா?" என்றான் கணேஷ்.

"ஒன்றுவிடாமல்."

"அப்படி என்றால் பொருள் இருக்கிறதா?"

"ஆமாம் டிக்கியில்."

"நிறுத்தலாம் என்று நினைக்கிறேன்."

கார் நின்றது.

கணேஷ் இறங்கி, "சார் நீங்களும் இறங்குங்கள்," என்றான்.

"ரைட்டர் சார்! காயத்ரியைக் காப்பாற்ற வேண்டும் என்கிறீர்கள் அல்லவா? காப்பாற்றலாம். என்னுடன் வாருங்கள்," என்றான்.

கணேஷ் பின்புறம் சென்று டிக்கியைத் திறந்து, "மெல்ல, மெல்ல" என்றான்.

டிக்கியின் உள்ளே சுருட்டிக் கொண்டிருந்த ஜீவன் சுதாரித்துக் கொண்டு எழுந்து வெளிப்பட... தெருவிளக்கின் வெளிச்சம் பட....

"காயத்ரி!" என்றேன்.

"தாங்க்ஸ் சார், தாங்க்ஸ் சார்!" அழுக்காக வெளிப்பட்டாள்.

"காயத்ரி நீ எப்படி? எப்படி? கணேஷ்! என்ன இது ஜீனி வேலை!"

"எல்லாம் வசந்த் வேலை! நீங்கள் முன்னால் சென்றுவிட நாங்கள் பிக்சர் முடிந்து திரும்பிக் கொண்டிருக்க, மாடியில் துப்பாக்கிச் சப்தம் கேட்டது. தப்பாக ஏதோ நிகழ்ந்துவிட்டது என்று தெரிந்துவிட்டது. ரத்னா முதலில் ஓட, நான் வசந்திடம் பின்பக்கம் இருக்கும் படிவழியாக ஏறிச் செல்லச் சொன்னேன். காயத்ரி தனியாக அகப்பட்டால்..."

வசந்த், "அங்கே மாடியில் நடந்தது அத்தனையும் நான் பார்த்தேன்... சார் மார்பிற்கு நேரே துப்பாக்கியைப் பிடிக்கிறாள் அந்த அம்மாள். அந்த அய்யர் காயத்ரியைப் பலாத்காரமாக ரூமிற்குள் அடைக்கின்றார். எல்லாவற்றையும் பார்த்தேன்," என்றான்.

"நீ பார்த்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும்," என்றான் கணேஷ்.

"அவளைத் தப்பவைக்க உனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுப்பதற்குத் தான் கீழே கொஞ்சம் பாயலாக் காட்டி ஓடிப்பிடித்து விளையாடினேன். அதற்குள்...."

"அதற்குள் நான் மாடி வழியாக வந்து அந்த அறைக்கதவைத் திறந்து காயத்ரியைப் பின்பக்கத்துப் படிகள் வழியாக அழைத்துச் சென்று டிக்கியில் பார்சல் பண்ணிவிட்டேன். ஸாரி காயத்ரி! மூஞ்சியெல்லாம் க்ரீஸ் ஒட்டிக்கொண்டுவிட்டது."

"உங்கள் மூன்று அண்ணன்மார்களுக்கும் என்ன கைமாறு செய்யப் போகிறேன்!"

"ஒரே ஒரு கைமாறு. இந்த 'அண்ணன்' பிஸினஸ் வேண்டாம் கால் மி வசந்த்."

கார் மறுபடி புறப்பட, காயத்ரி எனக்கருகில் உட்கார்ந்திருக்க... மிகவும் படபடப்புடன், "மிஸ்டர் வசந்த்! வசந்த்!" என்று உணர்ச்சிவசப்பட்டாள்.

"எல்லாம் என் எஜமானரும், மதிப்பிற்குரியவருமான கணேஷின் மூளை! அவர் தான் எல்லாம் நடத்தி வைப்பவர்! பிக் பிரதர்!"

கணேஷ், "ஷட் அப் வசந்த்....காயத்ரி! உன்னை அவர்கள் எப்படி உபயோகப் படுத்திக் கொண்டிருந்தார்கள் தெரியுமா?" என்று கேட்டான்.

"எப்படி?"

"சொன்னால் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்வாயா?"

"என் கணவர் என்னை ஏமாற்றிய அதிர்ச்சியையே சமாளித்து விட்டேன்!"

"திரைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்! உன் சந்தேகங்கள் எல்லாம் சரியே! நீயும் ரத்னாவும் தனியாகப் படுக்கையில் இருந்தபோது ரத்னா விளக்கை அணைக்க மறுத்ததை ஒரு தடவை குறிப்பிட்டிருக்கிறாய். என்ன நடந்தது தெரியுமா? திரைக்குப் பின்னாலிருந்து ஒரு சினி காமிரா சுழன்றிருக்கிறது. பாத்ரூமிலும் அதே கதை... அப்புறம் அந்தப் பெண்ணுடன்... அப்புறம்...."

"மை காட்!" அவள் மௌனம், மனத்தில் அந்தக் காட்சிகளை நினைத்து எவ்வளவு கூச்சப்படுகிறாள் என்பதைக் காட்டியது.... விசித்து விசித்து அழுதாள்.

"காயத்ரி! நான் ஒரு லாயர்.....உன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாதே. அவர்கள் மேல் எந்த விதத்தில் கேஸ் போடுவது என்பதைப் பற்றி எல்லாம் நாளைக்குப்பேசிக் கொள்ளலாம். நான் சொல்லும் இடத்தில் கையெழுத்துப் போட்டால் போதும். உன் கடந்த காலம் புகைபோல் மாயமாய் மறைந்துவிடும். அழாதே. வசந்த்! காயத்ரி தங்குவதற்கு ஏதாவது ஒரு நல்ல ஹோட்டலாக முதலில் பார்...."

"இல்லை, நான் உங்களில் யாராவது ஒருத்தருடன் தங்குகிறேன். உங்கள்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது." என்றாள்.

"உனக்கு எங்கள்மேல் நம்பிக்கை இருக்கலாம். எங்களுக்கு எங்கள்மேல் நம்பிக்கை இல்லை."

"ஏன்?"

"காயத்ரி! நாங்கள் அந்தப் படங்களைப் பார்த்துவிட்டோம். அதனால்!" என்றான் கணேஷ்.

"அவைகளில் நீ அழகாக இருக்கிறாய்" என்றான் வசந்த்.

கார் ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலை நெருங்கியது.

**முற்றும்**




வரும் வாரம் முதல் வாசிக்கத் தயாராகுங்கள்!


கிரைம் சக்கரவர்த்தி

ராஜேஸ்குமார் வழங்கும்


திக் திக் தொடர்-

முரசின் மற்றொரு முத்தான தெரிவு



## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே. காண்டீபன்,
வயது: 27
முகவரி: 35, கட்டுவப்பிட்டிய தெற்கு, நீர்கொழும்பு.
பொழுது போக்கு: கிரிக்கெட், வானொலி.



பெயர்: எம். சேந்திரலீலா,
வயது: 21
முகவரி: ஸ்பிரிங்வூட், இறக்குவானை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.சதீஸ்குமார்,
வயது: 27
முகவரி: HAUPT STR-42, ALLMEN ROAD, 36341 LAVTER BACH, GERMANY.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.



பெயர்: எம்.அன்சார்,
வயது: 27
முகவரி: 86, உலுகரத்தை, கெக்கிறாவை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம்.நசீர்,
வயது: 26
முகவரி: கெக்கிராவ வீதி, கலன்பிந்துனுவெவ.
பொழுது போக்கு: புத்திரிகை.



பெயர்: எம்.நசார்,
வயது: 26
முகவரி: ROOM NO.306, P.O.BOX-177, SAFAT-13002, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: எம்.ஜிப்ரி
வயது: 23
முகவரி: 237 ஏ. இலங்கம் வத்தை, கம்பளை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: சி.தஸ்ரிக்,
வயது: 17
முகவரி: 65பி, வி.சி.லேன், குறிஞ்சாக்கேணி-2, கிண்ணியா.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: இலங்கேஸ்வரன்,
வயது: 26
முகவரி: 19, ப்பார் வீதி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: ஆர்.ரவிச்சந்திரன்,
வயது: 17
முகவரி: 274, வெலியமுனை வீதி, ஏகித்த, வத்தளை.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: எம்.மணிவண்ணன்,
வயது: 30
முகவரி: SULGENRAIN-22/L2, 3007 BERN, SWITZERLAND.
பொழுது போக்கு: ரீ.வி., பேனா நட்பு.

பெயர்: எம்.முகமட் ராபி,
வயது: 22
முகவரி: கடற்கரைவீதி, சிரமதான ஒழுங்கை, புதிய காத்தான்குடி-3.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

புதுமைத் தொடர்

அத்தியாயம் 12



**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான்.

பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான்.

கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள். உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா.

கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள்.

**இனி....**

"சார்....நான் ஆராய்ந்த வரை, அந்தக் குடிசை வாசிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியவர்கள் அல்லர். அப்புறப்படுத்தப்பட்டால், அவர்கள் எங்கு போய்த் தங்குவார்கள்? அவர்களுக்கு மாற்றிடம் கொடுக்க வேண்டாமா, நாம்?"

"அதான் கொடுத்திருக்கிறோமே..."

"எங்கு? நகரத்துக்குப் பதினைந்து மைல்கள் தள்ளி, சார், அது நியாயம் தானா? குடிசைவாசிகளில் ஆண்கள் பெரும்பாலும் ரிக்ஷாக்காரர்கள், கொளுத்து வேலை செய்பவர்கள், கடைகண்ணிகளில் சிறு வேலை செய்பவர்கள், மூட்டை தூக்குபவர்கள். அவர்களின் வீட்டுப் பெண்கள், பக்கத்தில் இருக்கிற வீடுகளில் சமையல் உதவி பண்ணி, தண்ணீர் பிடித்துக் கொடுத்து, துணி துவைத்து ஜீவனம் செய்பவர்கள், இவர்களைப் பதினைந்து மைல்கள் தள்ளிப் போகச் சொன்னால், அவர்கள் பஸ்ஸில் பயணம் செய்து அங்கிருந்து வரவேண்டும். நாளொன்றுக்கு ஆண்கள் ஆறு ரூபாய் முதல் பத்து ரூபாயும், பெண்கள் இரண்டு மூன்று ரூபாய் சம்பாதிப்பவர்கள். அவர்கள் பஸ்ஸுக்கு மூன்று ரூபாய் செலவு செய்ய முடியுமா? நேரம் தான் கிடைக்குமா?"

"அரசின் இடத்தை அவர்கள் சட்டத்தை மீறிக் கைப்பற்றியிருக்கிறார்கள்."

"அரசு என்பது என்ன? மக்கள் இல்லாமல், மக்களுக்கு இல்லாமல், அரசு எதற்கு? ஏன்? அவர்கள் குடிசையைப் போடும் போதே அரசு ஆட்சேபித்திருக்க வேண்டாமா? அவர்களின் உழைப்பைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு நியாயமான கூலிக்கு உத்தரவாதம் ஏற்படுத்த முடியாத அரசு, அவர்களாகவே, வேலையையும் இருப்பிடத்தையும் ஏற்படுத்திக் கொண்ட பிறகு அதில் தலையிட என்ன உரிமை அரசுக்கு இருக்கிறது?"

அதிகாரியின் நெற்றி சுருங்கியது.

"நீங்கள் அவர்களை அப்புறப்படுத்துவது நியாயமில்லை என்று குறிப்பு எழுதியிருக்கிறீர்கள். அமைச்சர், அவர்களை அப்புறப்படுத்தி, அங்கு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தி ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு தரவேண்டும் என்கிறார். நான் என்ன செய்யட்டும்?"

"மந்திரி ஆயிரம் சொல்வார். தலையாட்டவா நாம் இருக்கிறோம்? மந்திரிக்கு அந்த மக்களின் மேல் வெறுப்பு. சென்ற தேர்தலில் மந்திரி சார்ந்த கட்சிக்கு விரோதமாக அந்தக் குடிசைவாசிகள் வாக்களித்திருப்பதாக அவர் நினைக்கிறார். தவிரவும், மந்திரிக்கு ஒரு வகையில் மைத்துனர் முறை ஆக வேண்டியவர் தானே அந்த உத்தேசிக்கிற தொழிற்சாலையின் முதலாளி என்று ஒரு பத்திரிகை வெளியிட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்களே..."

"அப்படி நாம் குறிப்பு எழுத முடியுமா?"

"முடியாதுதான், ஆகவே வெளிப்படையாகத் தெரிகிற உண்மையைப் பற்றிக் குறிப்பு எழுதுங்களேன்...."

அதிகாரி ஒரு பென்சிலை உருட்டியபடி யோசிக்கத் தொடங்கினார்.

**வீ**டு திரும்ப சுமதிக்கு ஆறு மணியாகி விட்டிருந்தது. "ரயில் எட்டரை மணிக்கு... சீக்கிரம் குளித்து, சாப்பிட்டுக் கிளம்பு. நானும் ரயில் நிலையம் வரை வந்து உன்னை வழி அனுப்பி வைக்கிறேன்."

"நான் என்ன வாழப் போகிறவளா, நீ வந்து வழி அனுப்ப? வாழாவெட்டியாக பிறந்த வீட்டுக்குப் போகிறவள்தானே நான்?"

கல்பனாவின் முகம் சிவந்துவிட்டது. கண்கள் கரை ஓரம் நீர் கூடத் தேங்கிற்று.

"முட்டாள்தனமாக இனி என் முன் இப்படியெல்லாம் பேசாதே! வாழ்க்கை என்பதே புருஷன்கூட வாழ்வது மட்டும் தானா? அவன் உன்னைப் பன்றியாக நடத்தினாலும், அதற்குக் கட்டுப்பட்டு வாழ்வதுதானா? இனி உன்னை வாழா வெட்டி என்று நினைத்துக்கொள்ளாதே. தற்கொலை சுயமாகச் செத்துப் போதல் அல்லவே. தன்னை வெறுத்துத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதல். அதுதான் தற்கொலை. இனி நீ வாழப்போவதுதான் வாழ்க்கை. உன் சொந்தப் படிப்பை, அறிவைக் கொண்டு நீ பிரகாசிக்கப் போவதுதான் வாழ்க்கை! மனித தர்மத்துக்குக் கட்டுப்பட்டு, உனக்குப் பிடித்த மாதிரி உன் சந்தோஷத்துக்கு வாழ்வதுதான் வாழ்க்கை. வாழா வெட்டியா? இந்த மாதிரி நூறு வார்த்தைகளை நம்ப பாஷையிலிருந்தே தூக்கி எறிஞ்சாத் தாண்டி இந்த நாடு உருப்படும்!"

சுமதி, கல்பனாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"சாரி" என்றாள்.

"சுமதி. ஷீலா இன்று ஒரு ஹோட்டல் உரிமையாளரானது உன்னால். வேறு எவன் உன் நாற்காலியில் இருந்தாலும் அதைச் சாதித்திருக்கமாட்டான். இன்னும் ஆயிரம் ஷீலாக்களுக்கு நீ உதவக் கரம் நீட்ட வேண்டாமா? அது அல்லவோ பயன்படும்படியான வாழ்க்கை. ஏதோ ஒரு மிருகம் கூப்பிடும்போதெல்லாம் போய்ப் படுத்துக் கொண்டு, அதுக்குப் பொங்கிப் போட்டுக் கொண்டிருப்பதா?"

சுமதி மன நிறைவோடு குளிக்கச் சென்றாள். தோழமை என்பது இதுவன்றோ? என அவளுக்குத் தோன்றியது. அது வழுக்கும் நிலத்தில் வழுக்காது ஊன்றும் கோல். சுமையை வாங்கிக் கொள்ளும், சுமை தாங்கி. மேல் ஏற்றி விடும் ஏணிப்படி. வெற்றிகளைக் கண்டு பூரிக்கும் அகண்ட காவேரி மனம். காதல் என்பது அது தான்.

களைப்பு தீரக்குளித்துத் திரும்பியவளுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. அவளுக்கென்று ஒரு புத்தம் புது சூட்கேஸ் வைத்திருந்தது. அதைத் திறந்து பார்த்தாள். அவளுடைய துணிகள், நீங்கலாக, குழந்தை வித்யாவுக்கு ஒரு சட்டை, ரகுவுக்கு உடைகள்; அதில்லாமல், நன்கு மூடப்பெற்ற பால் இனிப்புக்கள்.

"குழந்தைகள் இருக்கிற இடம். சும்மா போனால் எப்படி? நீ விடியற்காலையில் போய் இறங்குவாய். கடைகள் எதுவும் திறந்திருக்காது அதுதான்." என்றாள் கல்பனா சிரித்தபடி. டிக்கட்டும் பணமும் கொண்ட சின்ன பர்ஸ் ஒன்றையும் அவளிடம் நீட்டினாள் அவள். பர்ஸை, ஜாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டாள் சுமதி. சூட்கேஸை எடுத்துக்கொண்டு வாயிலுக்கு வந்தாள். கல்பனாவிடம் விடைபெற்றுக் கொண்டாள்.

வாசலில் கால் வைக்கும்போது, ஒரு அம்பாசிடர் கார் அவளை ஒட்டி வந்து நின்றது. உள்ளிருந்து போலிஸ் உடையில் ஒருவன் இறங்கினான். சுமதிக்கு வணக்கம் செய்துவிட்டுச் சொன்னான்.

"மேடம்.....எங்கேயோ பயணப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். தொந்தரவுக்கு வருந்துகிறேன். நான் உங்களுடன் பேச வேண்டியிருக்கிறது." என்றவன், தன் பெயரையும், தான் இன்ஸ்பெக்டர் என்றும், தான் பணி புரியும் இடத்தையும் சொன்னான்.

"உள்ளே வாருங்கள்...தயவுசெய்து" என்று சுமதி வீட்டுக்குள் திரும்பினாள்.

கூடத்தில் இருந்த நாற்காலியில் இருவரும் அமர்ந்தார்கள். சுமதி, கல்பனாவை வந்தவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். அவன் சொன்னான்:

"மேடம். தங்கள் கணவர் தங்கள்மீது ஒரு புகார் கொடுத்திருக்கிறார். தாங்கள் அவர் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், வரும்போது அவர் தங்கைக்காக அவர் சம்பாத்தியத்தில் செய்து வைத்திருந்த சுமார் இருபது பவுன் நகைகளை, ம்...மன்னியுங்கள். நீங்கள் இரவோடிரவாகத் திருடிக்கொண்டு போய் விட்டதாகவும் புகாரில் சொல்லியிருக்கிறார்...."

சுமதி, கல்பனாவின் முகத்தைப் பார்த்தாள். அவள் உறைந்து போய் விட்டது மாதிரி இருந்தாள். ஆனாலும் சுமதிக்குச் சிரிக்கத் தோன்றியது.

★ ★ ★

**ம**னித மனத்தைக் 'காடு' என்று யாரோ சொன்னது அந்தச் சந்தர்ப்பத்தில் சுமதிக்கு நினைவில் வந்தது. காடு! இருள் அடர்ந்த காடு. சூரிய ரேகைகள் என்றும் வெளிச்சம் உட்புக முடியாத, முடிந்தாலும் மிகக் கொஞ்சமாகவே புகுகிற காடு. புதிர்களும், ரகசியங்களும் அவிழ்க்க முடியாத இருட்டுகளும் உள்ள காடு. அதனால்தான் எந்த நேரத்தில் மனிதன் எப்படிச் செயல்படுவான் என்று யாராலும் அனுமானிக்க முடிவதில்லை. எந்த நேரத்தில் அவன் புன்னகைப்பான், எப்போது சீறுவான், எப்போது தாக்குவான், எப்போது தாங்குவான், யாருக்கும் தெரிவதில்லை. தன் மனைவி மீதே எப்போது திருட்டுக் குற்றம் சுமத்துவான் என்பதையும் அறியத் தான் முடிவதில்லை. ஆனாலும் அது நிகழத்தான் செய்கிறது.

ரயிலடியில் கல்பனா சொன்னாள். "இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா? அவனுடன் இத்தனை ஆண்டுகள் குடித்தனம் நடத்தி, உயிரோடு மீண்டிருக்கியே, அதுவே பெரிசுடி, சுமதி" என்றபடி கண் கலங்கி நின்றாள் கல்பனா. சுமதி கல்பனாவைத் தேற்றும்படியாகிவிட்டது. வண்டியில் ஏறும்போது சுமதி அவளிடம் சொன்னாள்: "என்ன செய்யறது கல்பு. சிலரைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் புரிந்து கொள்ள முடிகிறது. முட்டை உடைந்து குஞ்சு கூவுகிற வரை, குயிலா காக்கையா என்று எப்படிக் கண்டு கொள்வது? அது மாதிரித்தான் இந்தக் கணேசனும். இதோடு மீண்டனே, அந்தச் சொல்."

கல்பனா மிகுந்த கவலையோடு சொன்னாள்:

"விஷ் யூ ஆல் தி பெஸ்ட்"

"ஆமாம். அப்படித்தான் இனி நான் நினைக்க வேண்டும். நடப்பதெல்லாம் நன்மைக்கே. நடப்பது நன்மையில் முடியும். இனி நான் நலம் பெறுவேன்!" சுமதிக்குத் தோன்றியது. காலில் உள்ள செருப்பைக் கழற்றி விட்டு, காலில் உள்ள மணல் துளிகளைத் துடைத்துவிட்டுக் கொண்டாள். அவனைப் பற்றிய மீதி இருந்த நல்லெண்ணங்கள் ஒன்றிரண்டையும் துடைத்துவிட்டது போன்ற நிம்மதி அவளை வந்து கவர்ந்தது.

என்ன சொன்னேன். மனிதனைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் புரிந்து கொள்ள முடியும் என்றா? எவ்வளவு உண்மை? மருத்துவமனையை விட்டு சுகமாகித் திரும்பிய அந்த வார இறுதியில் கணேசன் அவளிடம் சொன்னான்:

"சுமதி. மருத்துவமனையில் பத்து நாள் நான் இருந்தது, ஏதோ ஒரு சிறையில் பத்து நாள் இருந்தது மாதிரி இருக்கிறது. எங்கேயாவது தூரமாக, முகத்தில் பச்சைச் காற்று உறைப்பாக அடிப்பது மாதிரி, பஸ்ஸில் பயணம் செய்ய வேண்டும் போல் இருக்கிறது. எங்கு போகலாம்?" என்று கேட்டான் கணேசன்.

கடைசியில் அழகர்மலைக்குப் போகலாம் என்று முடிவெடுத்தார்கள். வசந்தியை அழைக்கலாம் என்றாள் சுமதி.

"எந்த வசந்தியை?" என்றான் கணேசன்.

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? கணேஷ்! நர்ஸ் வசந்திதான். பத்து நாட்கள் உங்களுக்கு இரவு டூட்டியில், அன்பும் கருணையும் பொலிய சேவகம் செய்தாளே, அந்த நர்ஸ்தான். ஒரு நாள் பரிச்சயத்திலேயே என்னுடன் சினேகம் கொண்டு, எனக்கு உணவு கொடுத்து, என்னை வீட்டுக்கும் அழைத்தாளே, அந்த வசந்திதான்."

"அவளையெல்லாம் அழைக்கத்தான் வேண்டுமா?"

"ஏன் அழைத்தால் என்ன?"

"ஆஸ்பத்திரிப் பழக்கம் ஆஸ்பத்திரியோடு போகட்டுமே. அதிலும் ஒரு நர்ஸை...."

கணேசனின் உருவம் கொஞ்சம் போலத் தெரிந்தது.

(தொடர்ந்து வரும்)

---

# "கனவு தூரத்தில்"

**"இனிமேல் நான் ஸ்கூலுக்கு வரமாட்டேன் நிம்மி!" சொல்லியபடியே விம்மினாள் ராதிகா.**

**ஜெயந்தி ஜெயசங்கர்**

**ரெ**ஜிஸ்ரர் 'புக்' வைக்க வந்த நிர்மலா பிறின்ஸிப்பலின் ஒஃப்பீஸ் முன்னால் முழங்காலில் உட்கார்ந்திருந்த ராதிகாவைக் கண்டதும், "என்ன ராதி! ஏன் லேட்டாய் வந்தனீர்? பஸ்ஸை விட்டிட்டியா.....?" பதட்டப்பட்டபடியே கேட்கின்றாள். தலையாட்டிக்கொண்டே குனிந்த ராதிகாவின் விழிகளில் இருந்து இரண்டு நீர்த்திவலைகள் அவள் கைகளில் இருந்த புத்தகத்தின் மேல் பட்டு சிந்தியபோது மனம் பதைபதைக்க அவள் அருகில் சென்று தலையை நிமிர்த்தி 'ஏன் ராதி அழுகின்றாய்?' என்று கேட்க வேண்டும் போல் இருந்தது.

"நிர்மலா!" என அதட்டலாய் ஒலித்த பிறின்ஸிப்பலின் குரல் கேட்டு நிமிர்ந்தவள் கிளாஸ்றூமை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இரண்டு பாடங்கள் முடிந்தபின் வகுப்புக்குள் நுழைந்த ராதிகா, புத்தகங்களை மேசையின் மேல் வைத்துவிட்டு புத்தகத்தின் மேல் முகத்தை வைத்து விம்மினாள். அருகில் வந்த நிர்மலா அவளை ஆதரவாய் அணைத்தபடியே "ராதி ஏன் அழுகின்றாய்? உனக்கென்னவோ நடந்திட்டுது. என்ன நடந்தது? ஏன் லேட்டாய் வந்தனி சொல்லு ராதி?" அவள் முகத்தை நிமிர்த்திக் கேட்டபோது, காட்டுக்கத்தல் கத்திய மாணவிகள் அனைவரும் சத்த மடங்கி ஒருமித்து ராதிகாவைப் பார்த்தனர்.

மேசைமேல் விழுந்து சிந்திய கண்ணீரைப் பார்த்தபடியே குனிந்திருக்க, "இங்கை பார் ராதி! சிரிச்சு சிரிச்சு அழகாய் இருக்கிற இந்த முகம் அழுகிறதைப் பார்க்க முடியேலையடி.. ப்ளீஸ் அழாதை, எழும்பு முகத்தைத் துடைச்சிட்டு சிரி பார்க்கலாம்!"

கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்தவள் இமைகளில் நீர்த் துளிகள் பளபளக்க: "இப்ப தமிழ் பீரியட் தானே? இண்டைக்கு சிலப்பதிகாரத்திலை கானல்வரி." ராதிகா சொல்ல,

"உன்ரை கண்ணீருக்கு முன்னால் கானல்வரி ஒன்றும் பெரிசில்லை! இண்டைக்கு பாடம் கட். நீ என்ன நடந்தது என்று இப்பவே எனக்குச் சொல்லுறாய்!" என்றவள் "இப்ப வேண்டாம்" என மறுத்த ராதிகாவை கூட்டிக்கொண்டு ஹோம்சயன்ஸ் றூமுக்குள் நுழைந்தாள்.

"இண்டைக்கு ஹோம்சயன்ஸ் மிஸ் வரயில்லை. இப்ப சொல்லு உனக்கு என்ன நடந்தது?" ராதிகாவுக்கு முன்னால் கதிரையை இழுத்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்தபடியே நிர்மலா கேட்கின்றாள்.

"இனிமேல் நான் ஸ்கூலுக்கு வரமாட்டேனடி நிம்மி." சொன்னபடியே விம்முகிறாள்.

"என்னடி சொல்கிறாய்? ஸ்கூலில் நீதான் நல்ல றிசல்ட்ஸ் எடுப்பாய் என்று எல்லோரும் எதிர்பார்க்கினம். நீ என்னடா என்றால், இடையிலை இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறாய். உண்மையைத்தான் சொல்கிறாயோ, இல்லை ஜோக்கடிக்கிறியோ?"



"உண்மைதான் நிம்மி! நான் ஸ்கூலுக்கு வெளிக்கிட்டுக் கொண்டு நிக்கேக்கைதான் 'ரவீன்' வந்து அப்பாவோடை கதைத்தான். என்னைக் கல்யாணம் பண்ணப் போறானாம். அம்மா, அப்பா 'ஓம்' என்று போட்டினம். அதாலை பிரச்சனைப் பட்டுக்கொண்டு நிக்க, பஸ்ஸையும் விட்டிட்டன். லேட்டாய் வந்து பணிஷ்மன்ற் 'வேறை. இனிமேல் ஸ்கூல் வரமாட்டன் என்று நினைக்க என்னாலை அழாமல் இருக்க முடியேல்லை நிம்மி!"

"ரவீனைக் கல்யாணம் பண்ண உனக்கு விருப்பமா?"

"அவன் அழகுதான். ஆனால் பச்சைக் குடிகாரன் ஆச்சே!"

"நீ ஓம் என்டிட்டியே?"

"எனக்கு கொஞ்சம்கூட விருப்பம் இல்லை நிம்மி. பணத்துக்கு முன்னாலை அம்மா, அப்பாவுக்கு குடி எல்லாம் பெரிசாய்த் தெரியலை. உடனேயே 'ஓம்' என்டிட்டினம். நான் 'மாட்டன்' என்று அடம் பிடிச்சு அழுதன். "என்னைப் படிக்க விடுங்கோ" என்று கெஞ்சினன். தொடர்ந்து படிப்பிப்பிக்கிறதுக்கு தங்கட்டை வசதியில்லையாம், உனக்குப் பிறகு இருக்கிற மூன்று பெட்டையளையும் எப்பிடிக் கரை சேர்க்கிறது? என்று கவலைப் பட்டுக் கொண்டு இருக்க, கடவுளே என்று அந்தத் தம்பி ஒவ்வொருவருக்கும் ஒருலட்சம் பாங்கில் போடுது. எந்தச் சீதனமும் இல்லாமல் உன்னைக் கல்யாணம் செய்யச் சம்மதிச்சிருக்கு. ராசாத்தியாய்- ராணியாய் வாழுறதை விட்டுப்போட்டு படிப்பு, கிடிப்பு என்று பிதற்றுகிறாய்." என்று எனக்கு அப்பா பேசுறார். நான் என்ன சொன்னாலும் அவை ஏத்துக்கப் போறதில்லை. அழுது அடம்பிடிச்சாலும் ஆகப்போறது ஒன்றுமில்லை. என் கனவு அவையளுக்குத் தெரியாது. என் ஆர்வம் அவையளுக்குப் புரியாது. என் இலட்சியம் சொன்னால் விளங்காது. அவையளுக்கு தங்கடை சுமை சுகமாக- செலவில்லாமல் இறங்கினால் போதும். நான் யாருக்காவது வாழ்க்கைப் பட்டால் மட்டும் போதும்!"

சொல்லிவிட்டு அழும் ராதிகாவை ஆற்ற முடியாதவளாக விறைத்துப்போய் நின்றாள் நிர்மலா.

வெளிநாட்டில் இருந்து கை நிறையப் பணத்துடன் வந்தவன் ரவீன். வீடு- கார் என சகல வசதிகளுடன் வெளிநாட்டில் வாழ்பவன். மனசை, குணத்தை, நடத்தையைப் பார்க்காமல் வெளிப்பகட்டில் மயங்கி தாரை வார்க்கும் ஏழைத் தாய் தகப்பனுக்கு பிறந்தது குற்றமா? இல்லை ஏழையானாலும் அழகாய் பிறந்து விரும்பாமலே வாழ்க்கைப்பட்டு போகிறோமே! இது யார் செய்த குற்றம்? எதிர்காலக் கனவுகள், கற்பனைகள், இலட்சியங்கள் அத்தனையையும் தாய் சகோதரங்களோடு இங்கு விட்டு விட்டு மனதுக்குப் பிடிக்காத மணவாளனுடன் பிளேனில் பறந்து கொண்டிருக்கிறாள் ராதிகா.



படிப்பகம்

www.padippakam.com

# இன்னும் காத்திருக்கப் போகிறாள்

"டொக்...டொக்....டொக்..." வீட்டுக் கேற் தட்டப்படுஞ் சத்தங் கேட்டு வெளியே வந்தாள் சங்கவி. "யாரது?" என்றாள் மெதுவான குரலில்.

"நொத்தாரிஸ் திருமாவளவன் வீடு இதுதானா?" கேற் வாசலில் நின்றபடி அவளைப் பார்த்துக் கேட்டாள் சாருலதா.

சங்கவி கேற்றைத் திறந்தபடி "ஓமோம் அவர் எங்கடை அப்பாதான். அவர் இறந்து பத்து வருடங்கள் சென்றாலும் அவற்றை பேர் சொன்னால்தான் இங்குள்ளவர்களுக்குத் தெரியும்." சிறு புன்னகையோடு சொன்னாள்.

"உங்கடை வீட்டிலை ஒரு பகுதி வாடகைக்குக் குடுக்கிறதாப் பேப்பரிலை வந்திருக்கு. என்ரை மகனுக்கு எஞ்சினியரிங் கிடைச்சிருக்கு. அதுதான் கம்பசுக்குக் கிட்டிய இடத்திலை வீடெடுத்தால் படிக்கிறதுக்கு வசதி எண்டு பார்க்கிறன்." தெளிவான குரலில் கூறினாள் சாருலதா.

சங்கவிக்கு அவளை முன்பு எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. 'யாராயிருக்கும்?' தனக்குள் சிந்தித்தாள்.

"நான் தனி ஆள்தான். இந்தப் பெரிய வீட்டிலை தனிய இருக்கிறதெண்டால் சிரமந்தான். அதுதான் வீட்டிலை ஒரு பகுதியை வாடகைக்குக் கொடுக்கிறனான். இப்ப வாடகைக்கு இருக்கிற ஆட்கள் வேறு வீட்டுக்குப் போறபடியால் அதை வேறு ஆட்களுக்குக் குடுக்கிறதுக்கு யோசிக்கிறன்." அமைதியாகச் சொன்னவள், "என் பெயர் சங்கவி. நான் ஒரு சயன்ஸ் பட்டதாரி ஆசிரியை," என்று தன்னையும் அறிமுகஞ் செய்துகொண்டாள்.

"சங்கவி திருமாவளவனா நீ? என்னோடு பாடசாலையிலே ஒன்றாகப் படிச்சது ஞாபகம் இருக்கா?" புரியும் விதமாய்க் கேட்டாள். "நான்தான் சங்கவி திருமாவளவன். உன்னையும் எனக்கிப்ப ஞாபகம் வருது. நீதானே சாருலதா?" அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"நான் சாருலதாதான். இவன் என்ரை மகன்- ஒரே மகன்." என்று புன்னகை செய்தாள்.

"உன்ரை மகனா? வளர்ந்திட்டான். என்ரை வீட்டுக்குக் குடியிருப்பதற்கு நீங்கள் வருவதையிட்டு எனக்குப் பெரிய ஆறுதல்."

"சங்கவி! உன்ரை கணவன் வெளிநாட்டிலா? உன்ரை பிள்ளையள் எங்கே?" ஆவலுடன் கேட்டாள் சாருலதா.

"நான் தனி ஆள் எண்டு முதலிலேயே சொன்னனான். நான் திருமணஞ் செய்யயேல்லை. எனக்குக் கணவனோ, குழந்தைகளோ இல்லை." துயரந்தோய்ந்த குரலில் சொன்னாள் அவள்.

சாருலதா அதிர்ச்சியடைந்தவளாக, "சங்கவி நீ படிக்கிறபோதே உன் பெற்றோர் உனக்குத் திருமணஞ் செய்து தருவதற்கு முயற்சி செய்ததாக எங்கள் பாடசாலையில் எல்லோரும் கதைத்தார்களே! உன்ரை படிப்புக்கும், வடிவுக்கும் சீதனத்துக்கும் எஞ்சினியர், டொக்ரர் எண்டு தேடி வந்து காலடியில் நின்றிருப்பார்களே! இப்பிடி உன்ரை வாழ்க்கை அமைந்துவிடும் எண்டு நான் கனவில் கூட நினைக்கவில்லை." மனம் நிலை தடுமாற மலைத்து நின்றாள்.

"எல்லாம் என்ரை விதி சாருலதா. அம்மா, அப்பா எனக்குத் திருமணஞ் செய்துதர நினைத்துக் கஷ்டப்பட்டது உண்மைதான். அவர்கள் என்ரை தகுதிக்கேற்றபடி எஞ்சினியர், டொக்ரர் எண்டு பேசாவிட்டாலும் ஒரு பட்டதாரியை எண்டாலும் கட்டித்தர நினைக்கவில்லை. அப்பாவின்ரை தங்கையின்ரை ஒரே மகன், ஒரு போஸ்ட் மாஸ்ரர். அவரைத்தான் எனக்குத் தகுதி எண்டுவிடாப் பிடியா நிண்டினம். நானும் வெறும் ஓ.எல்., ஏ.எல். படிச்சிருந்தால் அவரைக் கட்டச் சம்மதிச்சிருப்பன். கம்பஸிலை படிச்சுப் போட்டு ஏ.எல்.படிச்ச போஸ்ற் மாஸ்ரரோ





திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்

எனக்கு மாப்பிள்ளை? எனக்கென்ன தலைவிதியே அவரைக் கட்டிக்கொண்டு திண்டாட?"

மிடுக்குடன் சங்கவி பேசியது சாருலதாவுக்கு எரிச்சலை உண்டாக்கியது. ஆனாலும் பொறுமையுடன், "சங்கவி நீ சொல்லுறதைப் பார்த்தால் எனக்கே கவலை வருது. தேடி வந்த செல்வத்தைக் காலால் உதைத்துத் தள்ளிப்போட்டு விதியைக் குற்றஞ் சொல்லுறாய்.

என்ரை வாழ்க்கையைப் பார். நான் உன்னைப் போல ஒரு சயன்ஸ் பட்டதாரி இல்லாவிட்டாலும் உன்னோடை சயன்ஸ் ஏ.எல். படிச்சனான்தானே? என்ரை மனிசன் ஐஞ்சாம் வகுப்பு மட்டுந்தானே படிச்சிருக்கு?

கொழுத்த சீதனங் குடுத்து என்ரை தகுதிக்கேற்ற மாப்பிள்ளை எடுக்க என்ரை அப்பாவாலை இயலாது. விரலுக்குத் தக்கது தானே வீக்கம் எண்டு நினைச்சு அவரைத் துன்பப்படுத்தாமல் அவர் பேசின மாப்பிள்ளையையே கட்டியிட்டன். இப்ப நான் நிறைவாத்தானே இருக்கிறன். அவர் லண்டனிலை வேலை செய்து கை நிறையக் காசு சம்பாதிக்கிறார். என்ரை மகன் மூண்டு வருஷம் போக ஒரு எஞ்சினியர். என்ரை தகுதியை விட்டுக் குடுக்காமல் இருந்தால் இவ்வளவும் எனக்கில்லைத்தானே? நம்முன்னோர் அறியாமலா சொன்னார்கள் 'தனக்கெளியது தாரம் எண்டு' மூன்று கால் முயலையே பிடிக்கிற புத்தி கூடாது சங்கவி." பொதுப்படையாக அவளைக் குற்றஞ் சாட்டுவதாகச் சாருலதாவின் பேச்சு அமைந்தது.

"உண்மைதான், அந்தப் போஸ்ற் மாஸ்டர் என்னை விட்டுட்டு வேறிடத்தில் செய்யக்கூடாது எண்டு கொஞ்சக் காலம் இருந்துதான் பார்த்தவர். பிறகு திருமணஞ் செய்திட்டார். இப்ப அவருக்கு ஒரு மகனும், மகளும் இருக்கினம். அவரும் நல்லாத்தான் இருக்கிறார்." என்றவள் சிறிது யோசித்துவிட்டு "எனக்கினி என்ன கலியாணம்? வயது நாற்பதைத் தாண்டியிட்டுது, ஏதோ இருந்திட்டன், இப்பியடியே இருந்திட்டுப் போவம்." வேதனைப் பெருமூச்சுடன் கூறினாள்.

"என்னெண்டாலும் பெண்கள் தனிமையாக இருப்பது புத்தியில்லை. நோய்நொடி என்று படுக்கிற நேரமாவது உன்ரை தனிமை துயரம் நிறைந்தது என்பதை உணர்த்தான் போகிறாய்!" சுருக்கமாகப் புரியும் விதத்தில் கூறினாள்.

"அதுக்கு இனி என்ன செய்யிறது? காலமும், நேரமும் போட்டுது." சலித்துக் கொண்டாள். சங்கவி.

"இப்ப உனக்கென்ன குறை? உன்ரை அழகுகுறையேல்லை. காலமும்போகேல்லை. காலம் மீண்டும் வராது. ஆனபடியால் விரைவாகச் சொல்லு. உடனடியாக உனக்கொரு மாப்பிள்ளை பேசிக் கட்டித் தர என்னாலை முடியும்!" என்று உறுதி கூறியவள் சங்கவியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

"எனக்கொரு மச்சான் இருக்கிறார். மிதிச்ச இடத்துப் புல்லுச்சாகாது. அவ்வளவு நல்லவர். தன்ரை நாலு சகோதரிகளையுங் கரை சேர்த்துப்போட்டு இருக்கிறார். அவருக்கு எங்கேயெண்டாலும் நல்ல பெண்ணாகப் பார்த்துக் கட்டிக் குடுக்கவெண்டு வீட்டுக்காரர் நினைக்கினம். நான் கேட்டால் மறுக்கமாட்டினம். நீ ஓமெண்டால் அடுத்த நிமிஷம் ஜாம் ஜாம் எண்டு கலியாணம் நடக்கும்." அக்கறையுடனும், உறுதியுடனும் கூறினாள்.

"அவர் என்ன வேலை சாருலதா?"

"மறந்திட்டன். அவர் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரீ.ஏ. ஆக இருக்கிறார். வருட இறுதியிலை எஞ்சினியராகப் புறமோசன் கிடைக்க இருக்குது. கிடைச்ச வாய்ப்பை நழுவவிடாமல் பயன் படுத்திப்போடு சங்கவி."

"கம்பஸிலை படிச்சவரோ?"

"இல்லை. காலம் போன பிறகு அது இது எண்டு வாழ்க்கையை வீணடிக்கிறது முட்டாள்த்தனம். இந்தக் கலியாணத்துக்கு மறுக்காமல் ஓமெண்டு சொல்லிவிடு." கரிசனை யோடும், அன்போடும் சாருலதா கெஞ்சினாள்.

"சாருலதா! நீ சொல்லுறதைப் பார்த்தால் அடுப்புக்குள்ளை விழாமல் தப்பி வந்தவளை நெருப்புக்குள்ளை விழு என்று சொல்லுற மாதிரி இருக்கு. இந்தப் பறவைக்கு வலை போட்டவை எத்தனை பேர்? இது வலையிலை அகப்படாத புத்திசாலிப் பறவை. நான் என்ரை, தகுதியைவிட்டு எப்பவும் இறங்கிவர மாட்டேன்.கம்பஸிலை படிக்காதவரைக் கட்டுற தெண்டால் எப்பவோ கட்டியிருப்பேன்"

மூஞ்சியில் அடிச்சமாதிரியான சங்கவியின் உறுதியான பேச்சில் தடுமாறிப் போனாள் சாருலதா. அவளது முகத்தில் பூத்திருந்த நம்பிக்கை மெல்ல வாடியது.

"சங்கவி! ஆண்களின் சீதனக் கொடுமையில் சிக்கித்தான் அதிகமான பெண்களின் வாழ்க்கை கன்னிமை கழியாமல் அழிஞ்சு போகுதெண்டு குறை சொல்லுகினம். தங்கடை தகுதிக்கேற்ற ஆண்கள் கிடைக்கவில்லையே என்று கன்னிப் பெண்களாகக் காலத்தைக் கடத்தும் பெண்களும் அரைக் கரைவாசிப்பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்."

வெறுப்போடு கூறியவள் தெருவில் இறங்கி நடப்பதற்காகத் திரும்பினாள், கேற் வாசலில் உள்ள மல்லிகைப்பந்தலில் தெரிந்த வாடிய மலரொன்று அவளுக்குச் சங்கவியை நினைவூட்டியது. ■

# மலையில் ஒரு தாமரை

சூரியன் உச்சி சரிந்துவிட்ட நேரம். பொன்னாக மாறிக் கொண்டிருந்த கதிர் பட்டு இலைகள் பளிரிட்டன. வண்ணம் மாறி மடிப்பு, மடிப்பா பச்சை, கரும்பச்சை கலந்து காற்றில் விரிந்து மடியும் புத்தகமாக படபடத்து அசைந்து குலுங்கிய தேயிலைத் தளிர்களை மருவி வந்து வருடிய தென்றலை நின்று, இரசித்து, சுவைக்க முடியாதவளாக மெல்ல நடந்து கொண்டிருந்தாள் தாமரை.

தோளில் கனமான புத்தகப்பை, முகத்தில் களைப்பு. ஸ்கூல் விட்டு வரும் அசதியை விடவும், வீட்டை நினைத்தால் ஏற்படும் அயர்ச்சி அதிகமாக இருந்தது.

காத்திருக்கும் வேலைச்சுமைகள் அப்பப்பா. இந்தமாதிரி நடந்தால் நாளை ஸ்கூலுக்குப் போகவருமோ? அண்ணி என்ன சொல்லி குறுக்குப் பண்ணுவாளோ?"

நினைவே கசந்தது. எட்டி நடக்க முற்பட்டாள். மலைச் சரிவோடு நெளிந்து கொண்டிருந்த ஓடையில் தண்ணீரை ஏந்திக் குடித்தவள், அள்ளி முகத்தில் அடித்து களைப்பைக் குறைத்துக் கொண்டு மறுபடி நடந்தாள். பசிக்களை பின்ன மூச்சு வாங்கியது. ஒரு தூரத்துக்குரல் எதிரொலியாக...

"தா..ம..ரை.."

திரும்பியவள் முகம் இருண்டது. 'சே... இவன் கதிர். எப்ப பார் ஒரே கரைச்சல்.'

வேகமாக நடந்தாள், நடையில் பயம் தெரிந்தது. எத்தனை தடவை பிடிகொடாமல் விலகியாயிற்று. புரிந்து கொள்வதாகக் காணோம்.



ஜெயமணி

எப்பேர்ப்பட்ட கசப்பான அநுபவங்களை ஜீரணித்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

தொடர்கதையாகிப்போன மலையக மக்களது வாழ்க்கை முறை பரிதாபமாயிருந்தது. பணக்கார வர்க்கத்தினரின் பச்சைத்தனமான எண்ணங்கள். சுகம் காணுவதற்கு பாமரத்தனமான மக்களைப் பாமரர்களாகவே இருக்கவிட்டு, மேலும், மேலும் இரத்தத்தை உறுஞ்சி, சக்கையாக்கி போதையில் வலியை மறக்கும் உத்தியைக் கற்பித்து, அதற்கு அடிமையாக்கி என்றும் உலகைப் புரிந்து கொள்ளாத வகையில் உருவாக்கி... ஓ..! இது பணக்கார முதலாளிகளின் மானுட தத்துவம்.

அவள், அம்மாவின் பேக்குத்தனமான போக்கு எதனால், சரியாகச் சொல்லத் தெரியவில்லை. அப்பா எவளுடனோ போய் விட்டதிலிருந்தா..? அவருடன் வாழ்ந்த காலத்தின் சுமைகளுக்கும் வெறித்தனங்களுக்கும் ஈடுகொடுத்து தன்னை இழந்தாளா...? இல்லை அண்ணன் தனக்கொரு துணையைக் கொண்டு வந்து ஆசி கேட்டபோதா...? அக்கா அப்பாவைப் போன்றதொரு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுந்து, அவனோடு ஓடி அரைவயிறும், கால்வயிறுமாக அல்லாடுவதை அறிந்தபிறகா...? அவளுக்குப்பின்னால் வயசுக்கு வரத்துடிக்கும் தங்கையின் வளர்ச்சி கண்டா...? ஊகும் புரியவில்லை.

நித்தம் புதிதாக காண்கின்ற ஒவ்வொரு நிகழ்வுகளும் அவளைச் செம்மைப்படுத்தின. குண்டும், குழியுமாக கடந்துவந்த பாதையில் தொடர்ந்து விழுந்து போகாமல் நிதானமாகப் பார்த்து நடந்தாள்.

முதலில் எது எப்படியானாலும் O.L வரையென்றாலும் முடித்துவிட வேண்டும். அப்புறம் மலையகத்துக்குரிய சலுகையுடன் பள்ளியாசிரியையாக முடியும். முடிந்தவரை மக்களை, சமூகத்தை முன்னேற்ற வேண்டும். அதுக்கு அவள் பாடசாலைக்குப் போக வேண்டும். எத்தனை குறுக்கீடுவந்தாலும் உடைத்தெறிய வேண்டும்.

பஸ்ஸில் போவதானால் கிட்டத்தட்ட நான்கு கி.மீ. மலைப்பாதைவழியாக நடந்தால் இரண்டு கி.மீற்றர். பஸ்ஸிற்குப் பணம் கேட்டால் "நிறுத்து படிப்பை!" என்பார்கள். நடப்பதே நன்று. நடந்தாள் சளைக்காமல்.

பல்லைக் கொடுக வைக்கும் குளிரில் எல்லோருக்கும் முன்னர் எழுந்து காலைச் சாப்பாட்டுக்குப் பலகாரம் பண்ணி, குழாயில் குடி தண்ணீர் பிடிச்சு வைச்சு, பாத்திரம் தேய்ச்சு, கூட்டிப் பெருக்கி, சுடுதண்ணி விளாவி, அண்ணியை எழுப்பி மேல் கழுவவைச்சு, வேண்டிய பணிவிடைகளைச் செய்து, "போய்வரட்டுமா? அண்ணி"யென விடை கேட்கும்வரை பரீட்சை எழுதுவது போலத்தான்.

அண்ணியை குளிர வைச்சால்தான் காரியமாகும் என்பதை எடைபோட்ட தாமரை, அவளைச் சகல மரியாதைகளுடனும் கவனித்துக் கொண்டாள்.



தவறினால் "நிறுத்து!" என அபாயக் கொடி தூக்கப்பட்டுவிடும். வீட்டு வேலைகள்ளைச் செய்ய, குழந்தையைப் பார்க்க ஆள் தேவை என அண்ணனை ஏவி விடுவாள். ஒரு சில தடவை அப்படி நடந்ததுமுண்டு.

எப்படியோ தாஜா பண்ணி சமாளித்துக் கொண்டாள். அதன் பிறகு நிறையக் கவனம். இந்தத்தடவை பரீட்சை எழுதும் வரையாவது...

'காலையில் எடுத்துப் போகும் உணவோடு, கால் கடுக்க நடந்து, மாலை வரை காஞ்சு கருகி வீடு வந்து காலோய்ந்து இருக்கவும் பொழுதின்றி அன்றாடம் இத்தனையையும் மூச், முணுக்கென்றில்லாமல் தாங்குவது எதுக்கு? இந்தக் கதிருக்காகவா?'

"ஆமாம் தாமரை நான் கேட்டதுக்குப் பதிலென்ன?" மூச்சுவாங்க வந்து மறித்தவனைப் பார்க்க கோபம் எழுந்தது அவளுள்.

"எதுக்குப் பதில் தரணும்?" காட்டமாக கேட்டாள்.

"என் கேள்விக்கு!"

"கேட்கச் சொன்னேனா.? கேட்கலைன்னு எங்கினேனா?"

"அடிமைத் தளையிலிருந்து விடுதலை கிடைக்கிறதுக்கு வழியில்லையா இது?"

"ஓ இதுவா பிறந்த வீட்டுச்சிறையிலிருந்து புகுந்த வீட்டு ஜெயிலுக்கு மாறுவதா, காதல், கல்யாணம், குழந்தை, குட்டி, இது ஒன்றுதானா மாறுதலைத் தருவது? வேறெதுவும் உயர்வானதாகத் தெரிவதில்லையா?"

"என்ன தாமரை! பெண்ணுக்கு சுதந்திரம் அவள் இன்னொரு வீட்டை நிர்வகிக்கும் போதுதானே?"

"எப்பிடி வேணுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அதது அமையுறதைப் பொறுத்து, அதிலெல்லாம் எனக்கு இஷ்டமில்லை. என் இலட்சியம் ஈடேறணும். நான் வெளியுலகைப் பார்க்கிற சொற்ப வேளை இதுதான். இப்பிடியொரு சம்பாஷனை நடந்ததுன்னு தெரிஞ்சாலே அதுக்கு முற்று வைக்கப்பட்டுவிடும்."

"உன் எதிர்கால இலட்சியத்துக்கு ஒரு போதும் நான் தடையாக மாட்டேன். உன் சம்மதம் மட்டும் போதும் சொல்லிவிடு காத்திருக்கிறேன்." நிறைய எதிர்பார்ப்புடன் நிறுத்தினான் கதிர். "இதோ பார் கதிர் சிறு வயதிலிருந்தே பட்ட அடிகளின் வடுக்கள் ஆழப்பதிந்துவிட்டன. மறக்கமுடியலை. மாற்றிவைக்கணும். என் கண்களாலேயே இந்த உலகை நான் பார்க்கணும். என் மக்களும் பார்க்கச் செய்யணும்கிற கடமை என்னுள் வெறியாக வளர்ந்துவிட்டுது. அதுக்கு முதலில் நான், நானாக வாழணும். எனக்குள்ளேயொரு வேள்வியை வளர்த்துண்டு தினமும் நெருப்புத்துண்டங்களை விழுங்கிண்டிருக்கேன், அதுவே என்னை எரிச்சு சாம்பராக்கும் நிலைமைக்குள் தள்ளிவிடாதே."

நிதானமாகக் கூறிவிட்டு செல்லும் தாமரையைப் பார்த்துக்கொண்டு நின்றான் கதிர். தாமரை அவன் மனத்திரையில் இன்னும், இன்னும் ஆழமாகப் பதிந்து கொண்டிருப்பது புரிந்தது. 'உன் வேள்வி வெற்றிபெறும் வரை என்னன்பையே நெய்யாக ஊற்றி காத்திருப்பேன், காலம் கனியும் வரை.' அந்த உருவத்தின் கீழே பொறித்துக் கொண்டிருந்தான் இந்த வார்த்தைகளையும் சேர்த்து. ●

# அவசரம்



ரி.வி. ராஜேந்திரா

அன்று கமலத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. தன்னுடைய பாட்டில் வாய் புறுபுறுத்தது.

"இஞ்சை ஒருத்தி மலை மாதிரி மனிசி எண்டிருக்கிறன்; இவருக்கொரு காயிதம் வேற! சாந்தியாம். சாந்தி ஆர் அவள்? இண்டைக்கு வரட்டும்; அவர் நானோ அவளோ எண்டு முடிவெடுக்கிறன்! அவள் தான் இவரை விட்டிட்டு வேறையாரையோ கலியாணம் செய்திட்டாளாம். அதுக்குப் பிறகும் இந்த மனிசன் விடுகுதில்லை. கண்டறியாத காயிதம் ஒண்டு; அதிலும் ஒரு துண்டுதான் என்ரை கையிலை அம்பிட்டுது. இண்டைக்கு வரட்டும் இவர்!"

தன்னுடைய ஆத்திரம் முழுவதையும் கொட்டித் தீர்த்தாள் கமலம். கமலத்தின் கணவன் மணியன் இன்று காலை புறப்பட்டுச் செல்லும்போது ஃபைலிலிருந்து (File) விழுந்த அந்த பேப்பர் துண்டுதான் கமலத்தின் ஆத்திரத்தைக் கிளறியது. அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை எடுத்து வாசித்தாள் கமலம்.

"என்னை நீ ஏமாற்றி விட்டாயே?

என் நெஞ்சத்திலே வேதனைத் தீயை அள்ளிக் கொட்டிவிட்டாயே!

வாழ்ந்தால் என்னோடுதான் வாழ்வேன். மணந்தால் என்னைத்தான் மணப்பேன், என்று வாய்விட்டுச் சொன்னாயே? இன்று என்னை மறந்து விட்டாயே சாந்தி. என்னை மறந்து இன்னொருவனை மணந்து என்னிடமிருந்து உன் அன்பைப் பிரித்து இன்னொருவனோடு இணைந்து வாழ உனக்கு எப்படி மனம் வந்தது?

மல்லிகை மலர் வாடிவிடும். வானில் மதி தேய்ந்துவிடும். ஏரியில் நீர் வற்றிவிடும். என் அன்பு வாடாது, தேயாது, வற்றாது என்று வாய்விட்டுச் சொன்னாயே. இன்று என்னை மறந்து விட்டாயே சாந்தி. நீ இல்லாத வாழ்வு ஒரு வாழ்வா?" என்று எழுதப்பட்டிருந்தது! வரிகளா அவை? கமலத்தின் நெஞ்சில் விழுந்த நெருப்புத் துண்டங்கள்.

'இந்த மனிசன் இத்தனை நாளாய் எனக்கு மறைச்சுப்போட்டுது' என்று மனம் பொங்கிற்று. தொலைபேசி மணி கமலத்தின் சிந்தனையைத் திருப்பியது. ரிசீவரைக் காதோடு சேர்த்தாள் கமலம்.

மறுமுனையில் "ஹலோ... கமலம்! நான் மணியன் வானொலி நிலையத்திலிருந்து கதைக்கிறன். நான் எழுதின நாடகமொன்று இன்று ரிகேஸல் நடக்குது. ஆனா அதிலை ஒரு பேப்பரைக் காணேல்லை. எங்கையெண்டாலும் இருக்குதோண்டு பார்!" என்றான்.

அப்போதுதான் கமலத்திற்கு தன் கணவன் மணியன் ஓர் நாடக எழுத்தாளன் என்ற ஞாபகம் வந்தது. கோபத்தில் சிவந்து கிடந்த கமலத்தின் முகத்தில் புன்னகை மெதுவாகப் படர ஆரம்பித்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

# கண் மொழி

தருவது ரசிகன்



பிரிவு என்பது
பெண்களுக்கு மட்டுமா?
பிரிவின் பெருவலி
பெண்களுக்குள் மட்டுமா?

நினைவு எரிய எரிய
உயிர் உருகுவதும்,
உள்ளம் தீப்பிடிக்க
உடல் வாடுவதும்,
உண்ண உணவிருக்க
எண்ணம் மறுப்பதுவும்,
சுற்றிப் பலர் இருக்க
தனித்து மனம் தவிப்பதுவும்,
பெண்களுக்குள் மட்டும்தானா?

ஆணுக்கும் சோகம் வரும்.
வானுக்கும் அப்பாலும்
விரிகின்ற பெரும் சோகம்
பிரிவென்னும் தீயால் வரும்!

வரும் என்ன வரும்;
வந்துவிட்டது மாறனுக்கு!

கண்ணிரெண்டால் அவளைக்கண்டு
எண்ணிரண்டு நாளாச்சு!
கையிரண்டால் அவளையள்ளி
எண்ணிரண்டு நாளாச்சு!
காலிரண்டால் அவளைக் கட்டி
எண்ணிரண்டு நாளாச்சு!
இதழிரண்டால் தேனருந்தி
எண்ணிரண்டு நாளாச்சு!
எழிலிரண்டால் இதமுணர்ந்து
எண்ணிரண்டு நாளாச்சு!

காணவில்லை என்று
முரசறைந்தா முழங்க முடியும்?!
காதல் கிளியே வாடி என்று
குரல் கொடுத்து கூவவோ முடியும்?!

"அவளை மட்டுமா காணவில்லை,
என்னையே காணவில்லை-என்
இதயத்தை காணவில்லை.
பெண்ணையே பூவாய் எண்ணி
தேனியாய் பறந்து போன
என் உள்ளத்தை காணவில்லை!
தேனைவும் உண்ணவில்லை
தேவியைக் காணவில்லை-என்
கோவிலில் குடியிருந்த
தேவியைக் காணவில்லை!"

"சொல் என்றேன்-காதலோ
சொல் என்றேன்!- அல்லது
கொல் என்று சொன்னேன்.
வில் என்னும் விழியால் அவளோ
கல் வீச்சாய் பார்வை வீசி
கொல் என்ற என் மனதை-நல்ல
சில் என்று குளிர்வித்தாளே!"

கடைக்கண் பார்வையும்
கனியிதழ் மொழியால் சம்மதமும்
கிடைக்கப் பெற்ற நாளில்
படைக்கப்பட்ட கவிதை!

இன்று படித்ததும்
நினைவுகளில் தீப்பிடித்தது.

என்று படித்தாலும்
நினைவுகளில் தீப்பிடிக்கும்!

"வானத்தில் வெள்ளி எரியும்-என்
மாடத்தில் விளக்கெரியும்!
உள்ளத்தில் உன் நினைப்பிருக்கும்
கள்ளத்தில் நீ செய்த குறும்பெல்லாம்
உறக்கத்தில் உழலாமல் தடுத்திருக்கும்!"

பதிலுக்கு பதிலாக பாவை அவள்
தொடுத்துவிட்ட கவிதை!

கவிதை மடல் கற்கண்டாய் இனிக்கும்
கவிதையிலும் கள்ளி வாசனை அடிக்கும்
கள்ளியென நினைத்து அந்த
கவிதை மடல் மீது இதழ் ஊரும்!

அவளும் ஒரு கவிதைதான்
ஒருமுறை படித்தால் ஒரு அர்த்தம்.
மறுமுறை படித்தால் புது அர்த்தம்
படிக்கப் படிக்க பல அர்த்தம்
வண்ணக்கவிதை; எழுதாத கவிதை
எண்ணமெல்லாம் நிறைந்த வாலிபக் கவிதை!

"மடலைப் பார்த்தது போதும்
மடையா உலகுக்கு வாரும்!"
நண்பன் வந்தான் கேலியுடன்.

ஆணுக்கும் வெட்கம் வரும்
அவனுக்கும் வந்தது!
மடல் மறைத்தான்
அசட்டுச் சிரிப்புதிர்த்தான்!

"வந்த காரியம்?"

"சொந்தக் காரியமல்ல
தேசக் காரியம்!
மன்னர் அழைக்கிறார்
தளபதியைக் காணவேண்டுமாம்!"

"நலமில்லை என்று சொல்!
உடல் நலமில்லை என்று சொல்!"

"ஓராயிரம் பேரையும்
உருட்டித் தள்ளும் உடல் நலமுண்டு!
ஓரவிழிப் பார்வை மட்டும் பட்டுவிட்டால்
உடலும் ஆடும், உள்ளமும் பாடும்!"

நண்பனின் கேலி நகைப்பு-பொல்லாத
வம்பனவன் என்று தெரியாதா?

"என்ன செய்யச் சொல்கிறாய்?"

"மன்னரைக் காண வா
மண்ணிலவும் அங்குண்டு!"

"என்ன?
திரும்பி வந்துவிட்டாளா?"

"இன்று காலையில்தான்
பயணம் முடிந்து
திரும்பியது பட்டு நிலா!
தொட்டு விளையாட
துள்ளிவரும் கலங்காதே!"

மாறன் மனம்
கள்ளில் விழுந்த வண்டானது.

மன்னன் சபையில்
புதுக் கதை நடந்தது.

மன்னனுக்கும் தெரியாமல்
கூட இருந்த நண்பனுக்குப் புரியாமல்
நான்கு விழிகள் தழுவிப் பிரிந்தன
நாலாயிரம் வார்த்தைகள் பேசித்
தீர்த்தன!

திரும்பியபோது வழியில்
மாறன் சொன்னான்;
"வரத்தான் நினைத்தாளாம்
முடியவில்லை



தரத்தான் நினைத்தாள் தந்துவிட்டாள்
உயிர்த்தேன் என அன்பை தந்துவிட்டாள்
உயிர்த்தேன் நான் உயிர்த்தேனே
உள்ளத்தால் ஆடிக் களித்தேனே!"

நண்பனுக்கு புரியவில்லை.
"என்னடா மாறா உளறல் இது?
எங்கடா தந்தாள் எது தந்தாள்
என்னுடன் தானே நீயிருந்தாய்?"

"கண்களால் தந்தாள் குறிப்பொன்று
காயம் தீர்க்கும் மருந்தொன்று!
துயரம் தீர்ந்து பொய்யாச்சு
உயரம் தாவி மனம் பூவாச்சு!"

கண்களால் காதலன் துயர்நீக்கும்
காதல் பெண் கண் குறிப்பை
திருவள்ளுவரும் காட்டுகிறார் பாருங்கள்;

"செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன்று உடைத்து"

குறள்:-1275 அதிகாரம்:-128

---

## ஸ்போர்ட்ஸ்

# இரட்டைச் சத விளாசல்கள்

## பிராட்மன் போட்ட போடு!

கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை 178 பேர் இரட்டைச் சதங்களை அடித்துள்ளனர். இந்த வருடம் இரட்டைச்சதம் அடித்தவர்களில் நவ்ஜோத் சிங் சித்துவும் ஒருவர். இரட்டைச் சதம் அடித்தவர்கள் பற்றிய சுவையான தகவல்கள் இதோ:



பிராட்மன்

* தங்களது முதல் போட்டியிலேயே இரட்டைச்சதம் அடித்தவர்கள் மூவர் மட்டுமே. அவர்கள், இ.போஸ்டர் (இங்கிலாந்து), ஜி.ரோவ் (மே.இ.தீவு), பிரெண்டன் குறுப்பு (இலங்கை).
* பாகிஸ்தானின் ஸாஹிர் அப்பாஸ், இங்கிலாந்தின் டேவிட் லொய்ட் இருவரும் தமது இரண்டாவது டெஸ்டிலும், இந்தியாவின் வினோத் காம்ளி, மே.இ.தீ.வின் ஹோனார்ட் ஹாண்டே இருவரும் தமது 3வது டெஸ்டிலும் இரட்டைச் சதம் அடித்தனர்.
* மிக இளம் வயதில், இரட்டைச் சதம் அடித்தவர் என்ற பெருமை பாகிஸ்தானின் ஜாவெட் மியாண்டாட்டைச் சேரும்.
* கப்டனாக இருந்து கொண்டே இளம் வயதில் இரட்டைச் சதம் அடித்த சாதனைக்குரியவர் இந்தியாவின் மன்சூர் அலிகான் பட்டோடி.
* மிக முதியவயதில் இரட்டைச்சதம் அடித்த சாதனையாளர் தென் ஆபிரிக்காவின் ஏ.பி.ரோவன். இவர் தனது 42வது வயதில் இச்சாதனையை நிகழ்த்தினார்.
* அவுஸ்திரேலியாவின் டொன் பிராட்மன் தான் அதிக இரட்டைச் சதங்களை அடித்தவர். இவர் மொத்தம் 12 இரட்டைச் சதங்களை அடித்திருக்கிறார். இதற்கடுத்து வொலி ஹமண்ட் (இங்கிலாந்து) 7 இரட்டைச் சதங்களையும், ஜாவெட் மியாண்டாட் (பாகிஸ்தான்) 6 இரட்டைச் சதங்களையும் அடித்துள்ளனர். லென் ஹட்டன் (இங்கிலாந்து), சுனில் கவாஸ்கர் (இந்தியா), ஸாஹிர் அப்பாஸ் (பாகிஸ்தான்), கோடன் கிறீனிட்ஜ் (மே.இ.தீவு) ஆகியோர் 4 இரட்டைச் சதங்களையும் அடித்துள்ளனர்.
* டொன் பிராட்மன் ஒரு டெஸ்ட் தொடரில் 3 இரட்டைச் சதங்களை 1930ம் ஆண்டு இங்கிலாந்திற்கு எதிரான தொடரில் அடித்திருக்கிறார்.
* மிகக் குறைவான நேரத்தில் (224 நிமிடம்) இரட்டைச் சதம் அடித்த பெருமை டொன் பிராட்மனுக்கு உண்டு. மிகக்குறைந்த பந்துகளில் (220) இரட்டைச்சதம் பெற்றவர் இங்கிலாந்தின் இயன் பொத்தம்.
* மிக மெதுவாக இரட்டைச் சதம் அடித்தவர் இலங்கையின் பிரெண்டன் குறுப்பு. இவர் 777 நிமிடங்களில் 548 பந்துகளை எதிர்கொண்டு 201 ஓட்டங்களை எடுத்தார்.
* விக்கெட் கீப்பர்களில் இரட்டைச் சதத்துடன் அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்ற பெருமைக்குரியவர் பாகிஸ்தானின் தஸ்லிம் ஆரிப். இவர் 1977ல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 210 ஓட்டங்கள் எடுத்தார்.
* பாகிஸ்தானின் முஸ்டாக் அகமதுவும், நியூஸிலாந்தின் அட்கின்சனும் ஒரு டெஸ்டில் இரட்டைச்சதம் அடித்ததுடன் ஒரு இன்னிங்ஸ்சில் 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.
* இரட்டைச் சதம் அடிக்க முடியாமல் போன பிரபல ஆட்டக்காரர்கள்:

மே.இ.தீ.வின் முன்னாள் வீரர் டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் 116 டெஸ்ட் போட்டிகளில் 7487 ஓட்டங்களைக் குவித்தவர். 18 சதமும் அடித்திருக்கிறார். ஆனால் இவர் ஒரு இரட்டைச் சதத்தைக் கூட அடிக்கவில்லை. இவரது அதிக பட்ச ஓட்டங்கள் 184.

ஹெய்ன் தவிர கொலின் கவுட்ரி, ஜி.கிரேஸ், இயன் சப்பல், விஜய் மேர்ச்சன்ட், றிச்சி றிச்சட்சன் ஆகிய பிரபல வீரர்களும் இரட்டைச் சதம் அடிக்கவில்லை.

தற்போது விளையாடி வரும் அஸாருதீன் (இலங்கைக்கு எதிராக 199 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார்) டெண்டுல்கர், மார்க் வோவ் போன்றோரும் இன்னும் இரட்டைச் சத இலக்கை எட்டிப்பிடிக்காதவர்கள்.

### இவர்தான் அவர்



விஜய்

---

* சிந்தியா! தமிழ்க் கட்சிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? ரெலோ இயக்க ஆலோசகர் ஸ்ரீகாந்தா கூறியிருப்பதைப் படித்தீரா? பாராளுமன்ற தமிழ்க்கட்சிகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம்தானே?

வி. பரமநாதன், கொழும்பு-13.

கொடுக்கலாம்! கொடுக்கவேண்டும்! ஸ்ரீகாந்தாவின் கருத்து நன்று. ஆயினும் புலிகளை வேட்டையாட அவரது உறுப்பினர்கள் படையினருடன் கிழக்கிலும், வன்னியிலும் நிற்பதுதான் உதைக்கிறது.

●❑●

* ஜெயசூரியாவின் விளாசல் எப்படி சிந்தியா?

கே. ரகுராம், கொழும்பு-05.

ஒரே சொல்; தூள்!

●❑●



* தொழில் பக்தி என்றால் என்ன சிந்தியா?

பி. சிவராமன், வத்தளை.

செய்யும் தொழிலில் ஈடுபாடு! சலிப்பில்லாத சுறுசுறுப்பு! சமீபத்தில் பார்த்த புகைப்படம் ஒன்றை செருக சந்தர்ப்பம் தந்துவிட்டீர்கள். 'பெரிய மனுசன்' பட இயக்குநர் குருதனபாலின் தொழில் பக்தியைப் பாருங்கள்! ச்சா என்ன ஒரு ஈடுபாடாக நடிப்புத் தொழில் கற்றுக் கொடுக்கிறார் பாருங்கள்!

●❑●

* சந்தர்ப்பவாத சுயநல நண்பர்களை என்ன செய்யலாம்?

இ. அமீர், இரத்தினபுரி.

மறுபேச்சே இல்லாமல் 'கட்'!

●❑●

* அன்பின் சிந்தியா! சமீபத்தில் படித்து வியந்த செய்தி ஏதாவது உண்டா? இருந்தால் பரிமாறுங்கள்?

எஸ். தர்ஷினி, ஆரையம்பதி.

உண்டு!

எகிப்தில் ஒரு வித்தியாசமான வரி விலக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இடையை ஒடித்து, சுழித்து ஆடும் நடனத்திற்கு அங்கே 'பெலி' நடனம் என்று பெயர். பெலி டான்ஸில் பிஃப்பு என்ற அழகி பிரபலமாம்.

அந்த அழகிக்கு வரிவிலக்கு கிடைத்திருக்கிறது. என்ன கொடுமை என்கிறீர்களா? ஒவ்வொரு தடவையும் இடுப்பை அசைத்து ஆடும்போது, இடுப்பின் சக்தி குறைகிறதாம். அதனால், "ஆடிப்பிழைப்பதையெல்லாம் வரியாகக் கட்டினால் ஆடிக் களைத்த பின் என்ன செய்வதாம்?" என்று அழகி கேட்க, அது நியாயம் என்று இடுப்புக்கு நியாயம் செய்திருக்கிறார்கள். செய்தி எப்படி?!

●❑●

* பாகிஸ்தான் அணியில் மறுபடி அமீர் சொகைல் ஆடுவாரா?

ஏ. ஜெமீனா, கண்டி.

பின்னே? அவருக்காக தலையிட்டிருப்பவர் பாகிஸ்தான் பிரதமர் அல்லவா. பாகிஸ்தான் வீரர்கள் அணி தோற்பதற்காக இலஞ்சம் வாங்கியதாக புகார் சொன்னவர் சொகைல். அவர் மன்னிப்புக் கேட்பதால் மட்டும் புகார் சொல்லப்பட்டவர்களின் மனம் ஆறுமா தெரியவில்லை.

●❑●

* தமிழக அரசுடன் ரஜினி காயா? பழமா?

எஸ். பீற்றசன், கற்பிட்டி.

காயாக மாற இருந்தபோது கலைஞர் அடி மேல் அடி அடித்து கனியவைத்துவிட்டார். தமிழக அரசு சிறந்த நடிகர் விருதும், அந்தவிருதை வாங்க வராமல் இருக்க நினைத்த ரஜினியை மனம்மாறி வரவைத்தது....தற்போதைக்கு பழம்தான்!

●❑●

* செய்வதையும் செய்துவிட்டு ஒன்றும் தெரியாததுபோல நாடகமாடுபவர்களை என்ன செய்யலாம்?

சி. பரமேஸ்வரி, மாத்தளை.

முடிந்தால் ஒரு அறை கொடுக்கலாம். நிற்க; ஒரு குட்டிக்கதை:

யாரும் இல்லை என்ற தைரியத்தில் பாத்ரூமில் பிறந்தநாள் உடையுடன் குளித்து முடித்துவிட்டு துவாயை எடுப்பதற்காக கையை நீட்டினாள் ஓர் இளம் பெண். நீட்டியவள் அப்படியே சிலையாக நின்றாள்.

காரணம்: அவளது பாத்ரூம் ஜன்னலை சுத்தம் செய்பவன் ஜன்னல் வழியாக கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தப் பெண் சுதாகரித்துக்கொண்டு அவனை திட்டுவதற்கிடையில் அவன் கேட்டான்:

"என்ன ஆச்சு மேடம்? இதற்கு முன் நீங்கள் ஜன்னல் சுத்தம் செய்பவனையே பார்த்ததில்லையா?"

●❑●

* மனதிலுள்ள டென்ஷனைக் குறைக்க நல்ல மாத்திரை சொல்லுங்கள்?

ஆர். ஜவ்பர், புத்தளம்.

மாத்திரைகள் தேவையில்லை, மனதை அமைதிப்படுத்துங்கள். டென்ஷன் பறந்து போம்!

●❑●

* டியர் சிந்தியா! யோகாசனப் பயிற்சி, மூச்சுப் பயிற்சிகள், மூலம் ஆஸ்துமா நோய் குணமாகுமா?

கே. விஜயலெட்சுமி, நுவரெலியா.

பூரணகுணமாகுமா? என்பது தெரியவில்லை, ஆனால் குறையும்.

●❑●

* புதுமுக நடிகைகள் பலர் நிலைக்க முடியாமல் போவது! ஏன்?

எஸ். மணி, தெகிவளை.

கலக்க முடியாமல் போவதால்!

●❑●

* தற்போது பெண்வேடமிட்டு நடிக்கும் நடிகர் யார் சிந்தியா? மற்றொரு துணைக் கேள்வி- கடந்த வாரம் கமல் படம் போட்டிருந்தீர்கள். அது எந்தப்படக் காட்சி?

செல்வி எம். ஹனீசா, கம்பளை.

'ஆசை தம்பி' படத்தில் பெண்வேஷம் போடுகிறார் அப்பாஸ் தம்பி. (நீங்கள் ஆணாகவே இருங்கள் என்று பெண் இரசிகைகள் நேரில் கண்டு புலம்பித்தீர்த்தார்களாம்) கமலை பெண்கள் தூக்கிச் செல்லும் அந்தக் காட்சி 'மகளிர் மட்டும்' இந்திப்படக் காட்சி. தமிழில் நாகேஷ் நடித்ததுபோல உயிரற்ற உடலாக நடிக்கிறார் கமல். தமிழில் கமல் செய்த பாத்திரத்தை இந்தியில் சரிகா கமல் செய்கிறார்.

●❑●

* திருமணம் செய்து கொள்ள பயப்படுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சி. யோகநாதன், நீர்கொழும்பு.

கிரேக்கப் பேரறிஞர் சாக்ரடிஸ் சொன்ன கருத்தை நினைவூட்ட விரும்புகிறேன்:

"திருமணத்தை வெறுக்காதீர்கள். செய்து கொள்ளுங்கள்! நல்ல மனைவி அமைந்தால், உங்கள் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். ஒருவேளை கெட்ட மனைவி அமைந்தால், நீங்கள் தத்துவ ஞானியாகி விடுவீர்கள்?"



●❑●

* அடங்கிப் போவதால் நன்மை உண்டா?

என். ஹென்றி, மன்னார்.

அது யாரிடம் அடங்கிப்போகிறோம் என்பதைப் பொறுத்தது. மரியாதைக்குரியவர்கள் முன்னால் அடக்கம் காட்டுவது தவறல்ல. மாவீரன் அலெக்ஸாண்டர் பிறந்தவுடன் அவர் தந்தையான பிலிப், அறிஞர் அரிஸ்டாடிலுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்:

"எனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் அவன் தங்களைப் போன்ற அறிஞர்கள் வாழும் காலத்தில் பிறந்திருப்பதுதான் எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகிறது."

●❑●




* சனத்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதா?

ஆர். கணேசமூர்த்தி, மட்டக்களப்பு.

முடிகிறது. அதுதான் நடக்கிறதே யுத்தம்!

ஒரு குட்டிக்கதை:

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி கேட்டார்: "மேடம், உங்கள் கணவர் நான்கு வருடங்களுக்கு முன் இறந்துவிட்டதாகச் சொன்னீர்கள். ஆனால் உங்கள் இரண்டு பிள்ளைகளுக்கும் வயது 4,2 என்கிறீர்களே?"

அப் பெண் பதில் சொன்னார்:

"ஆமாம், என் கணவர் நான்கு வருடங்களுக்கு முன்னர் இறந்துபோனது உண்மைதான். ஆனால், நானும் அதே சமயத்தில் இறந்துவிட்டதாகச் சொல்லவில்லையே!"



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 84

## இலங்கைக் கரையில் இராமபிரான்

இராமபிரானின் உள்ளத்தில் பல தரப்பட்ட உணர்வுகள் மாறி மாறி எழுந்தன. சீதாப்பிராட்டியாரை விரைந்தோடிச் சென்று காணும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதனால் மகிழ்ச்சி வெள்ளம் அவர் உள்ளத்தில் பெருக்கெடுத்தது. இத்தனை காலம் பிரிந்திருந்தமையினால் பிரிவுத்துயர் தாங்காமல் ஜானகி எத்தகைய மாற்றமடைந்திருப்பாளோ, என்று எண்ணிப் பார்க்கும்போது துயரக்கடல் பெருகியது.

இத்தகைய- ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலையில் அவர் படும் பாட்டை அப்போது அவருடனிருந்த இருவரே நன்குணர்ந்திருந்தனர். ஒன்று சின்னஞ் சிறுவர்களாக இருந்த காலத்திலிருந்து இன்றுவரை எக்காலத்திலும் பிரியாது- 'ஈருடல் ஓருயிர்' என்று கூறக்கூடிய நிலையில்- நிழல்போல் தொடரும் இளைய பெருமாள் இலக்குவன்.

மற்றுமொருவர்- மிகக் குறுகிய காலத்திலேயே இராமபிரானுடன் பழக நேர்ந்தாலும், தன் 'உடல் பொருள், ஆவி அத்தனையும் இராமபிரானே' என்று தன்னையே ஒப்படைத்த இராமதாசனான மாருதி என்ற ஆஞ்சநேயர். இலக்குவன் இராமபிரானின் இடது புறம் வந்து நின்றார். ஆஞ்சநேயர் வலது புறம் வந்து நின்றார். இருவரையும் தன் இரு கைகளாலும் அணைத்தபடி தன்னுடைய உள்ளுணர்வுகளை அவ்விருவருடனும் பகிர்ந்து கொண்டதில் ஓரளவு சமநிலை எய்தியவராக இராமபிரான் காணப்பட்டார்.

### படைகள் புறப்பட்டன

விபீடணர், இராமபிரானின் முன்வந்து வணங்கிவிட்டு, "அணை தயாராகி விட்டது; கால தாமதமின்றிப் புறப்படலாம்," என்றார். வலது புறம் திரும்பி மாருதியின் முகத்தைப் பார்த்தார். சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவரான ஆஞ்சநேயர், அப்போது, உசிதமான சுபசகுனம் என்பதனால், படை நடத்தலாம் என்று சைகையாலேயே தெரிவித்தார். இடது புறம் நின்ற இலக்குவனும் தன்னுடைய ஒப்புதலை அளித்தார்.

சுக்கிரீவன் படைகளை ஒழுங்காக அணிவகுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வேகமாக அங்கு வந்து சேர்ந்தார். புன்னகை பூத்த முகத்துடன் இராமபிரான் தனது வலது கையை மேலுயர்த்தி, புறப்படுவதற்கான சமிக்ஞையைக் கொடுத்தார். அனுமன் அப்போது தன் வைரம் பாய்ந்த குரலை ஓங்கியெழுப்பியவராக "ஓம் ஸ்ரீ இராமஜெயம்" என்றார். சமுத்திரத்தின் ஓசையை விடப் பன்மடங்கு பெரிதாக ஒலித்த அந்த ஜெயகோஷத்துக்கு வானரப் படைகள் அத்தனையும் "இராமஜெயம்....இராம ஜெயம்.....இராம ஜெயம்" என்று ஒலியெழுப்பினர்.

நெற்றியின் அரக்கர் பதி
செல்ல, நிறை நன்நூல்
கற்றுணரும் மாருதி
கடைக்குழை வர, தன்
வெற்றி புனை தம்பி
ஒரு பின்பு செல, வீரப்
பொன் திரள் புயக் கரு
நிறக் களிறு போனான்.

(யுத்த காண்டம்-691)

**பொருள்:**


படை அணிகளின் முன்னே அரக்கர் குலத் தோன்றலான விபீடணன் செல்ல, நிறைவான பொருள் பொதிந்த நல்ல நூல்களைக் கற்றுணர்ந்தவரான ஆஞ்சநேயர் படைகளின் பின்னே வர, வெற்றிக்குரியவரான தம்பி இலக்குவன் தன் பின்புறமாக வர, வீரம் பொருந்திய பொன் போன்ற புயங்களை உடைய கரிய நிறத்து யானையைப் போன்றவனான இராமபிரான் சென்றார்.

* * *

### இராமர் அணை

இலங்கையை இந்தியாவுடன் இணைத்து- வானர வீரர்கள் கட்டிய அணை "இராமரணை" என்ற பெயரினைப் பெற்றது. 'சேது பந்தனம்' என்றும் மற்றுமொரு பெயருண்டு. பாக்கு நீரிணைக்கு மேலாக- தலைமன்னாரிலிருந்து இந்தியக் கரையிலுள்ள தனுஷ்கோடி வரை உள்ள கடலை- விமானத்தில் அல்லது ஹெலியில் பறக்கும்போது- கடலில் ஒரே வரிசையாகத் திட்டுத் திட்டாக பாறைகள் இருப்பதைக் காணலாம். இப்பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களும் இக்காட்சியைக் காணலாம்.

இந்தியக்கரையில் இராமநாதபுரம் நகரிலிருந்து தென் கடலை நோக்கிச் செல்லும் பாதையில், பரமக்குடி நகரைத் தாண்டி சில கிலோமீட்டர் தொலைவில் திருப்புள்ளாணி என்றொரு சிறு கிராமம் இருக்கிறது. இங்கு திருமாலின் கோவில் ஒன்றுள்ளது. இக்கோவிலின் கர்ப்பக்கிரகத்தின் பின்புறம் தருப்பைப் புல் காடுபோல் அடர்ந்து வளர்ந்துள்ளது. தசரதச் சக்கரவர்த்தி புத்திர பாக்கியம் வேண்டி தவமிருந்து மேற்



கொண்டு தென்னாட்டுக்கும் வந்தாராம். அப்போது இத்திருத்தலத்தில் தருப்பைப் புல்லால் தொட்டில் ஒன்று செய்து ஆலயத்தில் கட்டி பூசை செய்ததாக இவ்வாலயப் பூசகர் கூறுகிறார். அதுமட்டுமல்லாமல், இராமபிரானும் இலங்கை செல்லும் வழியில் இவ்விடம் வந்து தங்கியதாகவும், தருப்பைப் புல்லைப் பரப்பி அதன் மீதே படுத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. 'திருப்புல்லணை' என்ற பெயர் மருவி இப்பொழுது 'திருப்புள்ளாணி' என்று கூறப்படுவதாகவும் தெரிகிறது.

குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் இவ்வாலயத்தில் வந்து பிள்ளைச் செல்வம் வேண்டி தருப்பைப்புல்லால் தொட்டில் செய்து, கட்டி வைக்கின்றனர். இவ்வாறு பல்லாயிரக் கணக்கில் தொட்டில்கள் இங்கு இன்றும் தொங்குவதைக் காணலாம்.

திருப்புள்ளாணியிலிருந்து சற்றுத் தூரத்தில்தான் 'சேதுக்கரை' என்ற கிராமம் இருக்கிறது. இவ்வூருக்கு அருகேதான் வைகை நதி கடலில் கலக்கிறது.

இன்றுள்ள நிலையில் வைகை நதி பெயருக்கு மட்டுமே நதி என்றழைக்கப்படுகிறது. மதுரை நகரை ஒட்டி இந் நதி செல்லும் தடம் தான் இருக்கிறது. ஆனால் வருடத்தில் பெரும்பாலான காலங்களில் இந்நதியில் நீரே கிடையாது. எப்போதாவது தண்ணீர் வரும். அவ்வாறு வரும் நீரும் இராமநாதபுர நகரத்தை அடுத்த ஓர் ஏரியில் கலந்து அங்கேயே தரித்து விடும். பல வருடங்களுக்கு ஒரு தடவை மட்டும் வைகை பெருகி சேதுக்கரையில் கடலுடன் சங்கமிக்கும். அன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கெல்லாம் பெரும் கொண்டாட்டம் தான்.

இவ்வாறு வைகை, சேது சமுத்திரத்தில் சங்கமமாகிய ஒரு சந்தர்ப்பத்தில், அதே சங்கமத்தில் நீராடிய பாக்கியம் எமக்கும் கிட்டியது. 1984 மார்கழி அமாவாசை தினத்தன்றுதான் இச்சம்பவம் நடைபெற்றது.

சேதுக்கரையில் ஆஞ்சநேயருக்கான ஒரு சிறு ஆலயமும் இருக்கிறது. இக் கடற்கரையில் நின்று தெற்கே கடலில் பார்த்தால், இராமரணையின் சில பகுதிகள்-கடல் மட்டம் குறைகின்ற காலத்தில் மிக நேர்த்தியாகத் தெரியுமாம். ஆனால் அதனைப் பார்க்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், இராமரணையின் மேலாக ஹெலிக்கொப்டரில் தாழப்பறந்து அதனைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியதுண்டு.

* * *

இராமபிரான் அணையைக் கடந்து செல்லும்போது அவர்மீது கதிரவனின் தாக்குதல் ஏற்படாதிருப்பதற்காக வானர வீரர்கள் ஏற்கனவே பல மரக்கிளைகளைப் பெயர்த்தெடுத்துத் தம்முடன் கொண்டு வந்து, நிழல் தந்தனர். சில சந்தர்ப்பங்களில்

**இராஜகுமாரன்**

இராமபிரானையும் இலக்குமணனையும் வானர வீரர்கள் தங்கள் தோள்களின்மீது தூக்கிச் சுமந்த வண்ணம் சென்றனர்.

### பாடிவீடுகள்

வேகமாகச் சென்ற படை அணிகள் இலங்கைக் கரையை அடைந்தன. ஒரு குன்றின்மீது இராமபிரான், இலக்குவன் போன்றோர் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இராமபிரான், நீலனை அழைத்தார். படைகள் தங்குவதற்கு ஏற்ற பாடிவீடுகளை அமைக்க உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு பணித்தார். சேது பந்தனத்தை அமைத்த- விஸ்வகர்மாவின் மகனான- நளனிடம் பணி ஒப்படைக்கப்பட்டது.

வானரப் படைகள் நாலா திக்குகளுக்கும் பாய்ந்தோடிச் சென்றனர். மலைகளில் இருந்து வேண்டிய கற்களையும்- காடுகளிலுள்ள தோதான மரங்களையும் திரட்டிக் கொண்டு வந்து சேர்த்தனர். கனவேகத்தில் பாடிவீடுகள் நிர்மாணிக்கப்பட்டுவிட்டன. மரங்களாலும் மூங்கிலாலும் அமைக்கப்பட்ட அழகான பர்ணசாலை ஒன்றினை நளன் அமைத்தான். தரையில் நன்கு சமன் செய்யப்பட்ட கற்களைப் பதித்தான். தருப்பைப்புல்லால் தரை விரிப்புக்களையும் தயாரித்து வைத்தான். தன் தந்தை விஸ்வகர்மாவே பார்த்து வியக்கும் வகையில் அமைக்கப்பட்ட அந்தப் பர்ணசாலையில் இராமபிரானும் இலக்குவனும் தங்கினர். அப்பர்ணசாலையின் முன்புறத்தில் ஆஞ்சநேயர் தனது ஒதுங்கிடத்தை அமைத்துக் கொண்டார்.

பாடிவீடுகளில் படையினர்- தங்களுக்குரிய இடங்களில் குடிபுகுந்தனர். அனைவருக்கும் வேண்டிய காய், கனி, கிழங்கு மற்றும் தானிய வகைகளை வானர வீரர்கள் அயலிலுள்ள காடுகளில் புகுந்து எடுத்துக் கொண்டு வந்து சேர்த்தனர்.

விபீடணர் பாடிவீடுகளைச் சுற்றி வலம் வந்தார். ஏற்கனவே இலங்கையின் வேந்தன் என்று அவரை இராமபிரான் பிரகடனப் படுத்திவிட்டமையினால், தன்னுடன் வந்த 'விருந்தாளிகளை' எக்குறையுமில்லாமல் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அவரையே சார்ந்திருந்தது. ஆகவே அந்நோக்குடன் சுற்றிவந்த விபீடணர் சில வானரவீரர்களைக் கண்டதும் துணுக்குற்றார்.

(தொடர்ந்து வரும்)

இராமபிரானின் சகோதரர்கள் ஏழுபேர் என்று வினாவில் தவறுதலாகக் அச்சிடப் பட்டுவிட்டது. இராமரையும் சேர்த்துத்தான் சகோதரர்கள் ஏழுபேராகும். தவறைச் சுட்டிக் காட்டிய வாசகர்களுக்கு நன்றி.

### இராமாயணப் போட்டி: 82

**சரியானவிடை:**—பரதன், இலக்குமணன், சத்துருக்கன், குகன், சுக்கிரீவன் மற்றும் விபீடணன்.

1. செல்வன் லோ. நதீசன்.
   சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு.
2. ஜெ. சஷிகண்ணா.
   'முல்லை', குடா ஓயா, ஹட்டன்.
3. சி. அனிருதன்.
   37, விஷ்ணு கோவில் வீதி, தெஹிவல.
4. ம. சைலஜா.
   இல.51, குடியிருப்பு, வவுனியா.
5. எஸ். வயலட்மேரி., அனிப்பா டிவிஷன், பசறை குரூப், பசறை.

**போட்டி இல. 84** கேள்வி:- படையினர் தங்குமிடத்துக்கான பெயர் என்ன?

மே. 31 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி—இல.84, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# காலம் மாறினால் காட்சிகள் மாறுமா?

காதிலை பூ கந்தசாமி

அரசியல் அரங்கில் தமிழ்க் கட்சிகளின் கரணங்கள் பலவிதம். புலிகள் பலமாக இருப்பதால் பயபக்தியோடு வெளியே நாடகமாடியபடி, திரைமறைவில் புலிகளை கழுத்தறுக்க கத்தி தீட்டிக் கொடுப்போரும் உளர்.

பிரபாகரன் பின்வருமாறு ஒரு அறிக்கை விட்டால் தமிழ்க் கட்சிகளின் கரணங்கள் எப்படியிருக்கும் என்று ஒரு கற்பனை.

### ஆயுதங்களை புதைக்க முடிவு புலிகளின் தலைவர் திடீர் அறிவிப்பு.

தமிழர்கள் தன்னாட்சி அதிகாரம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள். தமிழ் தேசம் தன்னாட்சி பெறாமல் தமிழர்கள் கௌரவத்துடனும் தன்மானத்துடனும் வாழ முடியாது. அதற்காகவே விடுதலை வேள்விக்கு ஆயிரமாயிரம் இன்னுயிர்களை அர்ப்பணித்து தமிழர் விடுதலைப் போர் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

நாம் என்றுமே சமாதானத்தின் கதவை இறுகச் சாத்தியதில்லை. நாம் சமாதானத்துக்கு எதிரானவர்களும் அல்ல. ஆனால் தமிழ் தேசத்தின் ஆத்மாவை கொன்றொழிக்க ஆட்சியாளர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளபோது நாம் அவர்களிடம் சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது.

அதனால்தான் தேச விடுதலைப் போரை தொடர்ந்து நடத்தினோம். ஆனால் ஏனைய தமிழ்க் கட்சிகளும், குழுக்களும் அரசாங்கத்திடம் இரகசியமாகப் பேசி நல்லதொரு விலைக்கு எமது உரிமைகளை பொட்டலம் கட்டி கொடுத்து விட்டனர்.

புலிகள்தான் முரண்டுபிடிக்கிறார்கள். சமருக்கு நிற்கிறார்கள்., புலிகள்தான் பிடிவாதக்காரர்கள் என்று அரசு எம்மை நோக்கிச், சுட்டிக்காட்ட தம் ஆட்காட்டி விரலை கொடுத்து தமிழ்க் கட்சிகள் உதவி செய்தன.

ஏகலைவன் துரோணருக்கு கட்டை விரலைக் கொடுத்தான். அது குரு தட்சணை.

தமிழ்க் கட்சிகள் தங்கள் ஆட்காட்டிவிரலை அரசுக்கு கொடுத்தன- இது துரோக சிந்தனை.

இந்த வரலாற்றுத் துரோகத்தால் உலகம் புலிகளை ஒதுங்கி இருக்கச் சொல்கிறது. ஆள்வோர் நியாயமானவர்கள் என்று தமிழ்க் கட்சிகளே சான்றிதழ் அடித்து கண்ணைப் பறிக்கும் வர்ணக்கலரில் விநியோகம் செய்துள்ளன.

உட்கார்ந்து ஆற அமரப் பேசி தீர்வுகாண தயார் என்று இமயமலையைவிட உயரமான நம்பிக்கையோடு தமிழ்க் கட்சிகள் பேச்சு நடத்துவதால், தயவு செய்து பேச்சைக் குழப்பாதீர் என்று உலகம் சொல்கிறது.

எனவே நாம் கொஞ்சக் காலம் ஒதுங்கி இருக்கத் தீர்மானித்துள்ளோம். துப்பாக்கிகளை கிறீஸ்பூசி பொலித்தீன் பையில் போட்டு பத்திரமாக புதைத்துவைத்துவிட்டு ஒரு மாற்றத்துக்காக ஜனநாயக வழியில் நடந்து பார்க்க முடிவு செய்திருக்கிறோம்.

அன்புடன்
வே.பிரபாகரன்.

### அங்குமிங்கும் ஓடியோடி ஒரே கும்மாளம்

இது இலண்டன் வி.வி.சி. திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று முன்தினம் விடுத்த அறிவித்தல் கேட்ட தமிழ்க் கட்சிகள் ஆட்டிலெறி ஷெல் விழுந்த வீடுபோல முதலில் அதிர்ச்சியுற்றன. பின்னர் அதிர்ச்சியில் இருந்து மீண்டு துள்ளிக்குதித்தன என்று எமது செய்தி முகவர் தெரிவிக்கிறார்.

எமது இலங்கை செய்தி முகவர் வாணி அனுப்பிய செய்தியை வேணி வாசிக்கக் கேட்கலாம்.

பத்திரிகைகளில் பிரபாகரனின் அறிவித்தலைப் படித்ததும் தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒரே கொண்டாட்டம்.

முன்னாள் போராளி இயக்கங்களான தமிழ்க் கட்சிகள் வெடி கொளுத்தி கொண்டாட நினைத்தபோதும், ஜனநாயக உணர்வு நிரம்பி வழிவதால் அந்த எண்ணத்தை கைவிட்டு இனிப்புக் கடித்துக் கொண்டாடின.

மற்றொரு தகவலின்படி, அறிவித்தலைப் படித்துத் துள்ளிக் குதித்த மூத்த தலைவர் ஒருவரின் கால் மூட்டெலும்பு முறிந்துவிட்டது.

நீரழிவு நோய் உள்ள சில மூத்த தலைவர்கள் எதைக் கடிப்பது என்று தெரியாமல் பத்திரிகை விளம்பரங்களில் காணப்பட்ட புலிப்படத்தை கடித்துத் தின்று தங்கள் மகிழ்ச்சியைத் துணிந்து கொண்டாடினார்கள்.

இது சற்று முன் கிடைத்த சுவையான செய்தி.

ஒரு பழம்பெரும் தலைவர் தூக்கத்தில் "மைக் எங்கே? மைதானம் எங்கே? வரச்சொல் மக்களை! கேட்கச் சொல் முழக்கத்தை!" என்று வாய் புலம்பியுள்ளார்.

முன்னாள் போராளி இயக்க முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் பேசும் பயிற்சியில் இறங்கியுள்ளனர்.

விமானக் குண்டுவீச்சுக்குப் பயந்து வெளிநாடுகள் சென்று கொழுத்த சம்பளத்தில் சீவித்த புத்திசீவிகள் தங்களுக்கும் ஒரு வாய்ப்புக்கிடைக்கலாம் என்று விமானங்களில் நாடு திரும்புகின்றனர்.



இரண்டு புத்திசீவிகள் சேர்ந்து ஒன்றாய் இருக்க மாட்டார்கள். ஒத்துப்போகாது. நானா? நீயா? போட்டியில் அடிபட்டு சட்டையைக் கிழித்துக் கொள்வார்களாம். ஆகவே ஒரு புத்திசீவிக்கு ஒருகட்சி என்ற ரீதியில் புதிய தமிழ்க்கட்சிகள் பத்துக்கு மேற்பட்டவை முளைக்கத் தொடங்கியுள்ளன.

இயக்கங்களில் இணைந்து போராடிய இளைஞர்களில் பலர் நடுத்தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்க, மூத்த தலைவர்கள், இறக்குமதி புத்திசீவிகள் ஆகியோர் தமிழர்களின் பிரதிநிதிகளாக மேடைகளில் முழங்குகிறார்கள். அரசுடன் பேசுகிறார்கள்.

போராளிகள் எடுபிடிகளாக மாற, புத்திசீவிகள் தலைவர்களாகி ஆங்கிலத்தில் ஒன்றும், தமிழில் ஒன்றுமாக அரசியல் வியாபாரத்தில் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

புலிகளால் ஆபத்து இல்லையென்பதால், தங்கள் பாதுகாப்புக்கு ஆட்கள் தேவையில்லை என்று சில தமிழ்க் கட்சிகள் தங்கள் தொண்டர்களை வீட்டுக்குத் துரத்தியுள்ளன.

தங்களை நடுத்தெருவில் நிறுத்தியதற்கு நியாயம் கேட்டு சில கட்சிகளின் தொண்டர்கள் ஒன்றுபட்டு சாலை மறியல் செய்தனர்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த புத்திசீவி ஒருவர்; "படிக்காத நாகரிகமில்லாத பையன்கள் சமூக ஒழுக்கத்தை மீறுகிறார்கள். டேஞ்சரஸ் ஃபெலோஸ்" என்று கண்டித்தார். இவர் இன்று காலையில்தான் அமெரிக்காவில் இருந்து திரும்பியிருந்தார். இனி இங்கு புலிப்பையன்களால் சட்டம் ஒழுங்குக்கு ஆபத்து இல்லை என்பதால் அரசியலில் தொப்பென்று குதித்துவிட்டதாகத் தெரிவித்தார். அரச உயர் தலைவர் ஒருவர் இந்தப் புத்திசீவியின் 'கிளாஸ்மேட்' என்பதால் தமிழ்க் கட்சிகள் பல இவரைத் தமது கட்சியில் இணைத்துக் கொள்ளப் போட்டி போடுகின்றன.

### மூத்த தலைவருடன் பேட்டி

மூத்த தலைவர் சபாசிதம்பரம் அவர்களை இன்று மாலை பேட்டி கண்டபோது அவர் தெரிவித்ததாவது:

**செய்தியாளர்:** வணக்கம். மூத்த தலைவர் என்ற ரீதியில் பிரபாகரனின் அறிவித்தல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**சபாசிதம்பரம்:-** எப்போதோ நாம் இதனைத்தான் சொன்னோம். இப்போதுதான் தம்பிமாருக்கு உண்மை புரிந்திருக்கிறது.

**செய்தியாளர்:-** பிரபாகரனுடன் பேசுவீர்களா?

**சபாசி:-** நாங்கள் அகிம்சைவாதிகள். முன்னர் ஆயுதம் ஏந்தியவர்களுடன் எமக்கென்ன பேச்சு? என்றாலும் இது பற்றி எமது செயற்குழுதான் முடிவு செய்யவேண்டும்.

**செ:-** பேச்சுக்களில் அவர்களுக்கு முக்கிய பங்கு அளிக்க சம்மதிப்பீர்களா?

**சபாசி:-** அதுதான் நாமெல்லாம் பேசி முடித்துவிட்டோமே. கொடுக்க வேண்டியதை எல்லாம் கொடுத்து பெறக்கூடியவை எவையோ அவற்றை எம் வாதத் திறமையால் வாங்கிவிட்டோமே.

**செ:-** அவர்கள் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை பலி கொடுத்து போராடியவர்கள் அல்லவா?

**சபாசி:-** நாமோ பலிகொடுக்கச் சொன்னோம்? தேவையற்ற உயிர்ப்பலிகள் ஏன்? சாணக்கியமாகப் பேசி உரிமைகளைப் பெறுவதற்கு தம்பிமாரால் முடியவில்லை.

**செ:-** தமிழ்க் கட்சிகள் வரலாற்றுத் துரோகம் செய்துவிட்டதாக பிரபாகரன் கூறியிருக்கிறாரே?

**சபாசி:-** இன்னமும் தன் கையில் ஆயுதம் இருப்பது போன்ற பிரமையில் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். புதைத்த ஆயுதங்களை இப்போதைக்கு அவரால் கையில் எடுக்க முடியாது என்ற துணிச்சலில் சொல்கிறேன், இப்படியான பேச்சுக்களில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். சட்டம் அவர்மீது பாயும் என்று எச்சரிக்கிறேன்.

**செ:-** (குரலில் அதிர்ச்சியுடன்) என்ன எச்சரிக்கிறீர்களா?

**சபாசி:-** எச்சரிப்பது மட்டுமல்ல, பொது மேடையில் தொண்டைக் குழாய்களால் மோதிப் பார்க்கத் தம்பிமார் தயாரா? என்று சவாலும் விடுகிறேன். ஏதோ நாலு துப்பாக்கி இருந்தது மிரட்டினார்கள். அதற்குள் ரவைகள் இருந்தன என்பதால் நாமும் பேசாமல் இருந்தோம். இனிமேல்தான் எங்கள் தொண்டைக் குழாய்கள் முழங்கப் போகின்றன.

**செ:-** நீங்கள் வாங்கிய தீர்வு போதாது என்கிறார்களே? உங்களை ஏமாற்றிவிட்டார்களாமே?

**சபாசி:-** சேச்சே! அவர்கள் இன்னமும் தருவதாகத்தான் சொன்னார்கள். நாங்கள்தான் வேண்டாம் வைத்திருங்கள். நாடு பிரியக்கூடாது. அதற்கு எதிர்காலத்தில் வழி ஏற்பட்டுவிடக்கூடாது. அளவுக்கு மிஞ்சினால் "அமுதமும் நஞ்சு, அளவோடு தாருங்கள், என்றெல்லாம் விளக்கிக் கூறினோம். அவர்கள் தந்ததிலும் பாதியை திருப்பிக் கொடுத்துவிட்டு மீதியை எடுத்துவந்தோம். இதுதான் சாணக்கியம்.

**செய்தியாளர்:** (சத்தத்தையே காணவில்லை. மூர்ச்சித்து விழுந்துவிட்டார்.)


படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O. (QD/43/NEWS/97)




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:~
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# டிக் டிக் டிக்






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


முரசு 204ல் பாம்பும், கீரியும் மோதும் அபூர்வக் காட்சியை பிரசுரித்திருந்தோம். அக் காட்சியை 'கிளிக்' பண்ணிய வெளிநாட்டு புகைப்படப்பிடிப்பாளரின் துணிச்சலையும் பாராட்டி இருந்தோம்.

அதனைப் பார்த்துவிட்ட சூட்டோடு சூடாக இந்தப் படத்தை அனுப்பினார் எமது வன்னி வாசகர் ஒருவர்.

வன்னிக் காட்டுக்குள் எடுக்கப்பட்ட கச்சிதமான புகைப்படம் இது. முரசு 204ல் வெளியான புகைப்படத்தில் உள்ளதைவிட பாம்பு, கீரி மோதலின் இறுதிக் கட்ட காட்சி இதுவாகும். கீரியை சுற்றி பாம்பு இறுக்கியிருக்கிறது. வாழ்வா சாவா என்ற கட்டத்தில் தன் கடைசி தாக்குதலுக்கு தயாராகிறது கீரி. நம்மவர்களும் துணிச்சலில் குறைந்தவர்களா என்ன? என்ன துடிவாக 'கிளிக்' செய்திருக்கிறார்கள். வன்னிக் காடுகளில் புகைப்பட கலைக்கும் இடமுண்டோ?! வன்னி யுத்தத்துடனும் இக் காட்சி ஒருவகையில் ஒத்துப்போகிறது! எப்படி? நீங்களே யோசித்துப் பாருங்களேன்.

## இறுதி யுத்தம்

டிக் டிக் என்று பல்லி சொன்னால் அப்போது நினைத்த காரியம் நடக்குமோ நடக்காதோ என்று டக் டக் என்று மனது கிடந்து அடிக்கும் சிலருக்கு. பல்லி சொற் பலன் பார்க்கத் தெரிந்தவர்களும், அதில் நம்பிக்கையில்லாதவர்களும் அறியவேண்டிய செய்தி யாதெனில், நாம் வீட்டுச் சுவரில் பார்ப்பது மட்டும் பல்லியல்ல. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஆற்றல் உள்ள பல்லி வகைகள் மொத்தம் 358 வகையானவை. அவற்றை 60 பிரிவுகளாகப் பிரித்து குடும்பங்களாக வகுத்துள்ளனர். படத்தில் காணப்படுவது நெருப்புப் பல்லி. ஆபிரிக்காவில் உள்ள பழங்குடிகள் இப் பல்லியைக் கண்டால் விழுந்து வணங்குவார்களாம். பயம் அல்ல பக்தி. இதனை தீக்கடவுள் என்று நினைக்கிறார்களாம்.

படத்தில் தண்ணீருக்குள் இலையின் மேலே குட்டிகள் நீந்த, தாய்ப் பல்லி நீர் அருந்துகிறது. நெருப்புப் பல்லி நிலத்தில் வாழும். குட்டிகளைப் போட மட்டும் நீர்நிலைகளை நாடும். புழு போல் பிறக்கும் குட்டிகள் நீரில் நீந்த வசதியான மென்மையான செட்டைகளுடன் காணப்படும். செட்டைகள்தான் பின்னர் கால்களாக மாறும். அதன்பின்னர் குட்டிகள் நிலத்துக்கு சென்றுவிடும். நெருப்புப் பல்லி 5 முதல் 15 சென்றிமீட்டர்வரை வளரும்.



டெண்டுல்கர், அரவிந்த டி சில்வா மற்றும் அப்ரிடி போன்ற அடி மன்னர்கள் அடித்த பந்தை கப்பென்று பாய்ந்து அமுக்கும் வீரருக்கு சந்தோசம் பீறிடும். அப்படித்தான் தேனியை கப்பென்று கவ்வியுள்ள இந்தப் பறவையாருக்கும் பலத்த சந்தோசம். பூக்களில் விளையாடி மகரந்தம் உண்ட தேனியை இனிக்க இனிக்க கொன்று தின்னும் இந்த பறவையின் பெயர் என்ன தெரியுமா? 'தேனி உண்ணும் வானவில்'.

பூவிலிருந்து தேன் குடித்த களிப்பில் ஜாலியாகப் பறந்து போகும் தேனியை, பின் தொடர்ந்து பறந்து மடக்கி கப்பென்று கவ்விக் கொள்ளும்.

ஆனால் உடனே சுவை பார்க்க ஆரம்பிக்காது. அவசரப்பட்டால் காரியம் கெட்டுப்போகும் என்பது தெரியும். அதாவது, தேனியின் கொடுக்கிலுள்ள விஷத்தை அகற்றாமல் சாப்பிட்டால் பறவையின் உயிர் பறந்துவிடும்.

அதனால் பிடித்து வந்த தேனியுடன் மரக்கிளையில் அமர்ந்து நிதானமாக வேலையை ஆரம்பிக்கும். பக்குவமாக விஷக் கொடுக்கை அகற்றிவிட்டு பின்னர்தான் தேனியை சுவைத்து விழுங்கும். அதாவது கட்டம் கட்டமான முன்னேற்றம்!

படத்திலிருப்பது அவுஸ்திரேலியாவில் காணப்படும் பறவை இனத்தைச் சேர்ந்தது. இதே குடும்பத்தைச் சேர்ந்த சில பறவைகள் அவுஸ்திரேலியாவிலிருந்து குளிர்காலத்தில், நியூ கினி மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு கடலுக்கு மேலால் பறந்து சென்றுவிடும்.

பொதுவாகப் பறவைகள் இனிமையான 'சாரீர'முடையவை. ஆனால் தேனி உண்ணும் வானவில் பறவைகளின் குரலோ மிகக் கடூரமானவை.

வானில் மிக உயரத்தில் பறந்து செல்லும்போது, அவற்றை நம் கண்களால் பார்க்க முடியாது. ஆனால் அவற்றின் குரலைத் தெளிவாகக் கேட்க முடியும். அட நம்ம நாட்டு உளவு விமானம் மாதிரியிங்கோ?!




## கொல்லக் கொல்ல இனிக்குதடா

## ①வது பிறந்த நாள் வாழ்த்து



### முஷப்பா மஷ்ஹூர் (29.05.97)

கஹடோவிட்டயைச் சேர்ந்த மஷ்ஹூர்-பரீனா தம்பதியின் செல்வப் புதல்வி முஷப்பா. மஷ்ஹூர் முதலாவது பிறந்தநாளை (29.05.97) அன்று மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

முஷப்பாவை வாப்பா-உம்மா, வாப்பும்மா, பாட்டி, குவைற் மாமிமார்களான பவ்ஸியா, மர்லியா, பர்ஸானா மாமாமார்களான பாரூக், பஸ்லி, ஷிராஸ், ரிஸான், பஷீர், முனாஸ் தர்காநகர் பெரியும்மா-பெரியப்பா, தாத்தாமார், நாநாமார், நயீம் மாமா, கதீஜா மாமி, காஸிம், முஜ்ஜிர், நபீல், மற்றும் ஒகடபொல ஹனிபா மாமா, கோநா மாமி, கிராண்ட்பாஸ் பவ்ஸி மாமி குடும்பத்தினர், கிருலப்பனை மேரி ஆண்டி, ரவி அங்கிள், பாணந்துறை முஷ்பிகா ஆண்டி குடும்பம் ஆகியோர் உட்பட அயலார் அன்புகலந்த உறவினர்கள் அனைவரும் நலம் நலமே என்றும் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

## பப்பி

பார்த்தவுடன் விளையாட்டுப் பொம்மை நாய் போலத்தானே தெரிகிறது. ஆனால் உயிருள்ள நாயாரேதான். உலகில் வித்தியாசமான வியப்பான வடிவங்களில் எத்தனையோ ரக நாய்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இது. மேலும் சில நாட்டுக்குத் தேவையான தகவல்கள்:

சாதாரணமாக நாய், பூனை போன்ற வளர்ப்பு பிராணிகள் ஒரே தடவையில் பல குட்டிகளை ஈனுகின்றன. இவை வளரும்போதே ஒன்றுடன் ஒன்று மோதிக் குதித்துக் கடித்து விளையாடுகின்றன.

வீடுகளில் தனிக்குட்டிகளாக வளர்க்கப்படும் நாய்க்குட்டி வீட்டாரில் தானும் ஒருவராக மாறிவிடுகிறது. அவ்வீட்டில் சிறுவர்கள் இருந்தால் அவர்கள் மீதுதான் அதிக பாசம்வைக்கும். சிறு குட்டியாக இருக்கும்போதே இவற்றை சில விளையாட்டுகளில் ஈடுபடுத்திப் பழக்கி எடுக்கவும் முடியும். குட்டி நாய்கள் பந்துகளை வைத்து விளையாடுவதையே பெரிதும் விரும்புகின்றன.




தன் வாயால் கெடுவதில் ஒன்று தவளை. ஆனால் இங்கு படத்தில் பல வர்ணக்கலரில் சூப்பர் அழகாக இருப்பதும் தவளைதான். இந்தத் தவளையும் தன் வாயால் கெடுகிறதோ இல்லையோ, இதைத் தொட்டால் நாம் தான் கெடுவோம். அதாகப்பட்டது செத்துப்போவோம்.

சுண்டியிழுக்கும் இந்த வர்ணத் தவளைக்குள் அத்தனை விபரீதம் ஒளிந்திருக்கிறது. இதன் உடம்பெல்லாம் நஞ்சு. தவளைகளில் பல்லாயிரக்கணக்கான ரகங்கள் பிரிவுகள் உண்டு. அவற்றில் ஒரு பிரிவு நச்சுத் தவளைகள். நச்சுத் தவளைகளிலும் பல ரகங்கள் உண்டு. அவற்றில் அபூர்வமான நச்சுத் தவளையே இது. உடலில் உள்ள கொடும் நஞ்சைவிட மேலும்பல கெட்ட குணங்கள் இந்த தவளையிடம் உண்டாம். அவற்றை கண்டறிய ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

மத்திய மற்றும் தென் அமெரிக்காவில்தான் இந்த நச்சுத்தவளை அமோகமாகக் காணப்படும். அந்தப் பகுதிகளில் வாழ்ந்த செவ்விந்தியர்கள் தங்கள் எதிரிகளைத் தாக்க இந்தத் தவளைகளை மலைபோல நம்பியிருந்தார்கள்.

எப்படித் தெரியுமா? இந்தத் தவளைகளைப் பிடித்து பத்திரமாக இவற்றின் உடலிலுள்ள நஞ்சை கறந்து எடுத்துவிடுவார்கள். அந்த நஞ்சை அம்பின் கூர் முனையில் தடவி வைத்துக் கொள்வர். எதிரியைக் கண்டதும் அம்பை எய்ய வேண்டியது. அம்பு பட்டால்கூட பிழைக்கலாம். முனையில் உள்ள நஞ்சு பட்ட எதிரிக்கு சாவு நிச்சயம். ஒரு தவளையில் இருந்து பெறப்படும் நஞ்சு 40 அம்புகளில் தடவத் தாராளமாகக் காணும்.



## வர்ண விபரீதம்



படிப்பகம்